REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2021 மார்ச் 11 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN

தினகரன்

வரு. 89 இல. 60 | March 11,Thursday, 2021 | 16பக்கங்கள் | 30/-









## சிவபெருமானின் ஆசீர்வாதம் அனைத்துக்கும் பலமான சக்தி

### சிவராத்திரி தின செய்தியில் ஜனாதிபதி

உலகின் சக்திவாய்ந்த தெய்வமாக கருதும் சிவபெருமானின் ஆசீர்வாதம் சமூக, பொருளாதார சுபீட்சத்திற்கும் சிறந்த ஆரோக்கியத்திற்கும் மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்கும் ஒரு பலமான உந்துசக்தி என்பது இந்துக்களின் நம்பிக்கையாகும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு அவர் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு 06

## சிவனுக்கு உகந்த மஹா சிவராத்திரி விரதம் இன்று



சிவனுக்கு உகந்த சிவராத்திரி தினம் இன்றாகும். சிவனுக்கு சோமவார விரதம் முதல் திருவெம்பாவை வரை பல்வேறு விரதங்களிருப்பினும் அம்பிகை வழிபட்ட முக்கியமான விரதம் மஹா சிவராத்திரி விரதம்.

எட்டுணையும் உளத்து அன்பிலரேனும் உளரேனும் இந்நாள் எம்மை கண்டவர் 06

## நல்லிணக்கம், புரிந்துணர்வு மூலம் ஐக்கியத்தை வலுப்படுத்துவோம்

### பிரதமர் மஹிந்த சிவராத்திரி தினச் செய்தி



மகா சிவராத்திரி எனும் புனிதமான விரதத்தை அனுஷ்டிக்கும் உலகெங்கிலுமுள்ள இந்துக்களுடன் இணைந்து பக்தி மயமான இச் சுப நன்னாளைப் போற்றி அனுஷ்டிக்கும் இலங்கை வாழ் இந்துக்களுக்கு இந்த வாழ்த்துச் செய்தியைக் கூறிக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். 06

### உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்; தொடர்புபட்ட நபர்கள், அமைப்புகளுக்கு

# அதியுச்ச தண்டனை

### ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குல்களுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புடைய அனைத்து நபர்களுக்கும் அமைப்புகளுக்கும் உச்சபட்ச தண்டனை வழங்கப்படும் என்பதுடன், ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகிவிட்டதாக 11

பாராளுமன்றத்தில் மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர விசேட உரை

- புர்கா அணிதலுக்கு தடை
- 11 முஸ்லிம் அமைப்புகளுக்கு தடை
- மதரஸா கல்விக்கு புதிய ஒழுங்குமுறை
- இஸ்லாமிய பாடப்புத்தகங்களிலுள்ள அடிப்படைவாத கல்வி நீக்கல்





மீள்பதிவு செய்யப்பட்ட இந்துக் கலைக் களஞ்சியம் நூலின் சிறப்பு பிரதி வெளியீடு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் நடைபெற்றது. பிரதமருக்கு, மத விவகார கலாசார அமைச்சின் இந்து சமய விவகார இணைப்பாளர் சிவஸ்ரீ பாபு சர்மா ராமச்சந்திர குருக்கள் காசி விசுவநாதர் சிவலிங்கம் ஒன்றினை சிவராத்திரி உற்சவத்தின் ஞாபகார்த்தமாக வழங்கிய போது எடுக்கப்பட்ட படம்.

விரிவான செய்தி 02ஆம் பக்கம்...

## ஹிருணிக்காவுக்கான பிடியாணை வாபஸ்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

2015ஆம் ஆண்டு இளைஞர் ஒருவரை கடத்தி, தடுத்து வைத்து, தாக்கி துன்புறுத்திய சம்பவம் தொடர்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமச்சந்திரவை கைது செய்வதற்கு கொழும்பு மேல் நீதிமன்றம் பிறப்பித்திருந்த பிடியாணை உத்தரவு சில நிமிடங்களில் மீளப் பெறப்பட்டிருந்தது. இவ் வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா முன்னிலையில் 06

## கற்பிட்டியில் 107 kg கேரள கஞ்சா கடற்படையால் மீட்பு



கற்பிட்டி, சோமாதீவு பகுதியில் 107 கிலோ கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் கடற்படையினர் மேற்கொண்ட விஷேட தேடுதல் நடவடிக்கையின் போதே இது கைப்பற்றப்பட்டது. இந்த நடவடிக்கையின் போது கைவிடப்பட்ட வள்ளம் ஒன்றில் மறைத்து 06

## விமலுக்கு எதிராக ரிஷாத் C.I.Dயில் முறைப்பாடு



### சஹ்ரானை தன்னுடன் தொடர்புபடுத்தினாராம்



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரி ஸஹ்ரானையும் தன்னையும் தொடர்புபடுத்தி, அமைச்சர் விமல் வீரவன்ச வேண்டுமென்றே தெரிவித்த பொய்யான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில், 06



## 1000 ரூபா சம்பள அதிகரிப்பு வர்த்தமானி வெளியானது

### தொழில் அமைச்சின் செயலாளர் கையெழுத்து

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கும் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது. தொழில் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள மேற்படி வர்த்தமானி தொழில் அமைச்சின் 06

### அரச நிதி நிர்வாக கண்காணிப்பு விடயம்;

## பாராளுமன்ற அதிகாரம் சவாலுக்கு உட்படுகிறது



கோப் குழு தலைவர் சரித்த ஹேரத் M.P

அரச நிதி நிர்வாகம் தொடர்பில் கண்காணிப்பதற்கு பாராளுமன்றத்திற்குள்ள அதிகாரம் சில சந்தர்ப்பங்களில் சவாலுக்கு உட்படுத்தப்படுவதாக கோப் குழுத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித்த ஹேரத் தெரிவித்தார்.பொது நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழுவின் ஒன்பதாவது அமர்வின் முதலாவது 06

## புதிதாக பதிவு செய்ய 38 கட்சிகள் விண்ணப்பம்

### விரைவில் நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு



நாட்டில் இதுவரை புதிதாக 38 அரசியல் கட்சிகளை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் தற்போது வரை கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டில் மாத்திரம் 158 அரசியல் கட்சிகளை பதிவு 06

**இன்னும் 4 தினங்களில்...**

## மக்களை சந்தோசமாக வாழ வைக்க வேண்டிய பொறுப்பு உங்களுடையது

### பிரதமருக்கு ஆனந்தசங்கரி நீண்ட கடிதம்



நாட்டு மக்களை சந்தோசமாக வாழ வைக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் உண்டு என தமிழர் விடுதலை கூட்டணி செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். பிரதமர் 06

### இன்று சுதந்திர சதுக்கத்தில்

## ஞானசாரர் குழுவினர் சத்தியாக்கிரகத்தில்



ஈஸ்டர் பயங்கரவாதத் தாக்குதல் பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் பொதுபல சேனாவை தடை செய்ய வேண்டும் என்ற பரிந்துரைக்கும் எதிர்ப்பு தெரிவித்து இன்று ஞானசாரர் தலைமையிலான குழு சத்தியாக்கிரகத்தில் குதிக்கவுள்ளனர். சுதந்திர சதுக்கத்தில் இந்த சத்தியாக்கிரகப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக பொதுபல சேனா அறிவித்துள்ளது.

## முஸ்லிம் சட்டத்தை எவர் மாற்றினாலும் நாம் மாறோம்

### தே.ஐ.மு தலைவர் அஸாத் சாலி



முஸ்லிம் சட்டத்தை யார் மாற்றினாலும் நாங்கள் மாற்றிக்கொள்ளப் போவதில்லை. குர் ஆனும், ஹதீஸும், ஷரியாவுமே எமது சட்டம் என்றால், நாம் அதற்குத்தான் மதிப்பளிப்போமே தவிர அரசாங்கத்தின் சட்டங்களைக் கருத்திற்கொள்ள மாட்டோம் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலி தெரிவித்தார்.

கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே 06

**விக்கல் வீராச்சாமி**



ஜனாதிபதிய பாலர் பாடசாலைக்கு போய் படியுங்கோ எண்டு சொல்ற அள–வுக்கு நாட்டில ஊடக சுதந்திரம் இருக்–குது....

உண்மை, ஆனா எதிர்த்தரப்பிடம் கேட்டா ஐயோ நாட்டில ஊடக அடக்குமுறை எண்டு நீண்ட அறிக்கை விடுவினம்...!!!


அனைவரும் இணைந்து கொழும்பு நகரத்தை சுத்தமாக வைத்திருப்போம்!

உங்கள் கழிவுகளை பின்வரும் முறைமைக்கு அமைவாக பிரிந்திடுங்கள்.



**உக்கும் கழிவுகள்**

உங்கள் இல்லத்தில் சேரும் கழிவுகளில் நீங்கள் உரம் தயாரிக்கவில்லை என்றால் தயவுசெய்து அதை CMC யிடம் கையளிக்கவும்.

- சமையலறை காய்கறி கழிவுகள் மற்றும் பழக்கழிவுகள், எஞ்சிய கழிவுகள், தேங்காய் சக்கைகள், பயன்படுத்திய தேயிலை கழிவுகள், பைகள், முட்டை ஓடுகள், மாமிச கழிவுகள்.
- வீட்டுத்தோட்டத்தில் சேரும் குப்பைகள் மர இலைகள், பூக்கள்
- துண்டாக்கப்பட்ட இளநீர் மட்டைகள்

**மறுசுழற்சி செய்யக்கூடிய கழிவுகள்**

பின்வரும் பொருட்கள் சுத்தமாக இருக்கவேண்டும்.

- கண்ணாடிகள்
- கார்ட்போட் / கடதாசி
- சுத்தமான பொலித்தீன் / பிளாஸ்டிக்
- உலோகங்கள்
- சுத்தமான தேங்காய் சிரட்டைகள்
- சுத்தமான டின்கள்
- சுத்தமான யோகட் மற்றும் பிளாஸ்டிக் கோப்பைகள்
- மறுசுழற்சி செய்யக்கூடிய சமையலறை உபகரணங்கள்

**மறுசுழற்சி செய்யமுடியாத கழிவுகள்**

- மண்ணான பொலித்தீன் / பிளாஸ்டிக்
- சுகாதார நப்கின்கள்
- அழுக்கான யோகட் கோப்பைகள்
- பால் பேக்கட்டுகள்
- பயன்படுத்திய சஷே பேக்கட்டுகள் (ஷம்பூ, சோஸ், மைலோ மற்றும் பல)
- தலைமுடி
- ஷேவர் மற்றும் பிளேடுகள்
- சுத்தமற்ற டின்கள்
- செரமிக் பாத்திரங்கள்
- இறப்பர்
- மண் பாத்திரங்கள்
- மருந்துப் பொருட்கள்

திண்மக்கழிவு முகாமைத்துப் பிரிவு
கொழும்பு மாநகர சபை
வெப்: www.colombo.mc.gov.lk
தொ.பே: 0112 364 473

மாவட்டம் D5

141, கிருல வீதி, கொழும்பு 05
ஈ-மெ: info@cleantech.lk
தொ.பே: 0112 368 768

cleantech because we care

# சிவராத்திரி தினத்தன்று சிவசிந்தனையுடன் அனுஷ்டிக்கப்படும் கொடிதின வைபவம்

முழுமுதற் கடவுளான சிவபெருமானை முதல்வனாகக் கொண்டிருப்பது சைவசமயமாகும். சைவசமயத்தவர்கள் அனுஷ்டித்துவரும் விரதங்களுள் முக்கியத்துவம் பெறுவது மகாசிவராத்திரி விரதமாகும். சிவபெருமானை பூஜித்து நல்லருள் பெறும் வகையில் ஒதுக்கப்பட்டிருக்கும் ஓர் இரவுதான் மகாசிவராத்திரியாக சிறப்புப் பெறுகிறது.

சைவமக்கள் அன்றைய தினம் பகல் விரதமிருந்து ஆலயங்களில் இரவு நடைபெறும் நான்கு ஜாமப் பூசை வழிபாடுகளிலும், அபிஷேகங்களிலும் கலந்து கொள்வதுடன் தேவாரப் பதிகங்களுடன் பஞ்சாட்சர மந்திரமான சிவாயநம, நமசிவாய என்பவைகளை இடையிடையே ஓதி, தியானத்துடனும் சிவசிந்தனையுடனும் சிவராத்திரி தினத்தை செலவிட வேண்டும். இதனால் கிடைக்கும் பேரின்ப நிலையானது மிகப்பெறுமதி வாய்ந்தது என்பதை சமய நூல்கள் எடுத்துக்காட்டியிருக்கின்றன.

சைவமக்கள் மத்தியில் சிவனருளையும் சிவசிந்தனையும் ஏற்படுத்தும் வகையில் ஒரு நல்ல கைங்கரியத்தை உலக சைவப் பேரவை கடந்த ஒரு தசாப்த காலத்திற்கும் மேலாக செய்து வருவதை பலரும் அறிவார்கள். மகாசிவராத்திரி நாளன்று சைவக் கொடிதினமாக அறிவித்திருப்பதுடன், உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளை ஊடாக அதன் முழுமையான செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதும் குறிப்பிடத்தக்கதாக அமைந்துள்ளது.



சைவசமயக்கொடி இடபத்தை தாங்கி நிற்கிறது. இடபம் எனப்படும் மாடு சிவபெருமானின் வாகனமாகும். நந்தி என்றும் சொல்வதுண்டு. இடபக்கொடி, நந்திக் கொடி என்ற பெயர்களிலும் சைவசமயக்கொடி அழைக்கப்படுகிறது. இடபத்தை சிறு சிறு காகிதத் துண்டுகளில் அச்சுப்பதித்து சைவ மக்களுக்கு வழங்கும் செயற்பாடு தான் கொடிதினமாக மேற்கொள்ளப்படுகிறது.



சிவராத்திரி தினத்தன்று கொடிதின திறப்பு நிகழ்ச்சிகள் தலைநகரிலும், வடக்கு கிழக்கு மற்றும் மலையகப் பகுதி உட்பட சைவ மக்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களிலும் நடத்தப்பட்டு வருவது வழமையாகும். இம்முறை, சிவராத்திரி தினமான இன்று 11ஆம் திகதி , உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளை தலைவர் கா. தயாபரன் தலைமையில், செயலாளர் சிவ. ஜெயராஜா, பொருளாளர் ஆர். வைத்தமாநிதி, உபதலைவர் சின்னத்துரை தனபாலா உட்பட ஏனைய உறுப்பினர்களும் இணைந்து தலைநகரில் நடைபெறும் வைபவத்தை நடத்தி வைப்பார்கள்.

நாடளாவிய ரீதியில் சைவாலயங்கள், இந்து மத நிறுவனங்கள், அறநெறிப்பாடசாலைகள் என்பனவற்றில் கொடிதின வைபவ நிகழ்ச்சிகள் இடம்பெறவிருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டங்களிலும் கொடி விற்பனை மூலம் கிடைக்கும் நிதியானது, அந்தந்த மாவட்டங்களிலுள்ள அறநெறிப்பாடசாலைகளின் வளர்ச்சிக்கும், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கும், விழிப்புலன், செவிப்புலனற்றவர்கள் மற்றும் ஊனமுற்றுவர்களுக்கான மனிதாபிமான செயற்றிட்டங்களுக்கும், பலவகையிலும் பாதிக்கபபட்டு வசதி குறைந்த நிலையில் வாழும் இந்து மக்களின் வாழ்வாதார உதவிகளுக்கும் பயன்படுத்துவது வழக்கமாகும். இந்து மக்கள் அனைவரும் தாராள மனதுடன் கொடிகளைப் பெற்று, இந்த நல்ல கைங்கரியத்துக்கு உதவியும் ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்கும்படி உலக சைவப் பேரவை சார்பாக கேட்டுக்கொள்கின்றோம்.



விடைக்கொடிச்செல்வர்
கலாநிதி
சின்னத்துரை தனபாலா...

# இந்து கலைக் களஞ்சியம் வெளியீடு

















சைவ தமிழ் மக்களால் மகோன்னத நாளாக அனுஷ்டிக்கப்பட்டுவரும் மகா சிவராத்திரியை முன்னிட்டு, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் மீள்பதிப்புச் செய்யப்பட்ட பன்னிரண்டு தொகுதிகளைக் கொண்ட இந்து கலைக் களஞ்சியம், புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று முன்தினம் (09) அலரி மாளிகையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 1988ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்து கலைக் களஞ்சிய உருவாக்கப் பணி 2014 ஆம் ஆண்டில் பன்னிரண்டு தொகுதிகளை நிறைவு செய்திருந்தது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அக்காலப்பகுதியில் ஜனாதிபதியாக இருந்த போது இச்செயற்றிட்டத்திற்கான ஊக்கம் நல்கிய காலமாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதற்கமைய மீள்பதிப்புச் செய்யப்பட்ட இந்து கலைக் களஞ்சியத்தின் ஆரம்ப பிரதிகள் பிரதமரினால் முதலில் இந்து மதகுருமார்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது. தொடர்ந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி சுரேன் ராகவன், அங்கஜன் ராமநாதன், எம்.ரமேஷ்வரன் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன ஆகியோருக்கும் இந்து கலைக் களஞ்சியத்தின் பிரதிகள் வழங்கிவைக்கப்பட்டன.

இலங்கையின் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் ஆற்றும் தனித்துவமான சேவைக்கு இதன்போது இந்து மதகுருமார் பாராட்டு தெரிவித்தனர்.

இதன்போது பிரதமரின் அறிவுறுத்தலுக்கு அமைய இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நாடளாவிய ரீதியில் சைவ தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் உள்ள ஆலயங்களில், மகா சிவராத்திரி நிகழ்வினை சிறப்புற நிகழ்த்த ஊக்கம் நல்கும் வகையில் பகுதியளவிலான அனுசரணையாக ஐம்பது ஆலயங்களுக்கு தலா ரூபாய் 50,000 வீதம் நிதியுதவி வழங்கும் செயற்றிட்டமும் இடம்பெற்றது.

சிவராத்திரி விரதத்தினை பக்திபூர்வமாகவும், சுகாதார நடைமுறைகளுடனும் அனுஷ்டிப்பதற்கான அறிவுறுத்தலுடன் இந்நிதி வழங்கப்பட்டது.

நிகழ்வில், கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் தலைவர் சுவாமி அக்சராத்மானந்த மகராஜ், சின்மயாமிஷன் சுவாமிகள் குணாதீதானந்த சரஸ்வதி, பிரதமரின் இந்து சமய விவகாரங்களுக்கான இணைப்பாளர் இராமச்சந்திரக் குருக்கள் பாபு சர்மா, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், கலாநிதி சுரேன் ராகவன், மருதபாண்டி இராமேஸ்வரன், புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள முன்னாள் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன், கலாநிதி க.ரகுபரன், இந்துப் பண்பாட்டு நிதியத்தின் உறுப்பினர் சின்னத்துரை தனபாலா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**தொழுகை நேரம்**
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
ளுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

**இன்றைய சுபதினம்**
சார்வரி வருடம் மாசி 27
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தமரண யோகம்
திதி: திரயோதசி

**இராசி பலன்கள்**
மேஷம் - நோய்
ரிஷபம் - திடம்
மிதுனம் - பகை
கடகம் - தடங்கல்
சிம்மம் - வரவு
கன்னி - ஆசை
துலாம் - நலம்
விருச்சிகம் - இலாபம்
தனுசு - அன்பு
மகரம் - பிரீதி
கும்பம் - ஜெயம்
மீனம் - சுகம்
கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

### இவ்வருட பெரும் போகத்தில்
# 3.2 மில்லியன் மெற்றிக் தொன் நெல் அறுவடை



பெரும்போகத்தில் 7,42,000 ஹெக்டெயரிலிருந்து 3.2 மில்லியன் மெற்றிக் தொன் நெல் அறுவடை கிடைக்குமென எதிர்பார்ப்பதுடன், சிறுபோகத்தில் 1.8 மில்லியன் மெற்றிக் தொன்னுமாக மொத்தம் 05 மில்லியன் மெற்றிக் தொன் நெல் அறுவடையை எதிர்பார்ப்பதாக கமத்தொழில் அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்தார்.

மேலும் நெல் கொள்வனவு செய்யப்படும் முறையில் மாற்றம் செய்யப்பட்டிருப்பதுடன்,

06

### அமைச்சு ஆலோசனைக் குழுவில் அமைச்சர் மஹிந்தானந்த தெரிவிப்பு



## தவக்கால சிந்தனை
# இறைவனோடு இணைந்திருப்பவர்கள்

இறையாட்சி எம்மத்தியில் வந்துள்ளதற்கு அடையாளமாக இயேசு விளங்குகின்றார். அவர் ஒரு அடையாளம் மட்டுமல்ல, மாறாக அவரே இறையாட்சியின் முழுமையாகவும் அதன் செய்தியாகவும் திகழ்கின்றார்.

இன்றைய நற்செய்தியில் இயேசு தமது வல்லமையால் அசுத்த ஆவியை விரட்டுவது ஏனைய மக்களுக்கு வியப்பைத் தருகின்றது. இந்த செயல் எளிதானது அல்ல. இந்த கடினமான செயலை இவர் செய்கிறார் என்றால் பேய்களின் தலைமைப் பேயை கொண்டே இவர் அதை செய்கின்றார் என்று மக்கள் பேசிக் கொண்டார்கள். இயேசு அதை இறை வல்லமையாலேயே செய்ததாக கூறி அவர்களின் எண்ணத்தை உடைக்கின்றார்.

தவக்காலத்தை இறைவனின் செயல் எம் மீது நிகழவும் அந்த அனுபவத்தை மற்றவர்களும் சுவைக்க வழி செய்யவும் உரிய காலமாகவே இறைவன் எமக்கு தந்துள்ளார்.

எமக்கு நிகழ்ந்தவை அது கடவுள் செயல் என்றும் அதே நல்லவைகள் மற்றவர்களுக்கும் நிகழ்ந்தால் அது செய்வினை, சூனியம் என்று மற்றவர்களைப் பற்றி அவதூறு பேசுவது கடவுளின் வல்ல செயலுக்கு எதிரானதாகும்.

கடவுளின் செயலால் நிகழ்வதை நாம் புறனியாக சிந்தித்து பரப்புவது இயேசுவின் மக்களை சிதறடிக்கும் செயலாகும்.

ஆண்டவரோடு இணைந்து இருப்பவர்கள் அவ்வாறு செயற்பட மாட்டார்கள். இறைவன் எல்லோரிடமும் செயலாற்றுகின்றார். அவரது செயலை நாம் தீயவழியில் நோக்காதிருப்போம். இயேசுவோடு சேர்ந்து அவருக்காக எமது வாழ்வினால் மக்களை இந்த தவக் காலங்களில் கூட்டிச்சேர்ப்போம்.

"என்னோடு இறாதவர்த் எனக்கு எதிராக இருக்கிறார். என்னோடு இணைந்து மக்களை கூட்டிச்சேர்க்காதவர் அவர்களை சிதறடிக்கின்றார்.

( லூக்கா 11; 23)

அருட்சகோ, றீகன் லோகு...

## பேராயருடன் சட்ட மாஅதிபர் விசேட கலந்துரையாடல்

லோரன்ஸ் செல்வநாயகம்

பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கும் சட்ட மாஅதிபர் டப்புல டி லிவேராவுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. கொழும்பு புஞ்சி பொரளையில் உள்ள பேராயர் இல்லத்தில் இச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

சந்திப்பில், உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணை தொடர்பில் தற்போதைய நிலைமைகள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் தொடர்பிலும் இதன்போது சட்ட மாஅதிபர் பேராயருக்கு தெளிவுபடுத்தியுள்ளதாக சட்ட மாஅதிபரின் இணைப்புச் செயலாளர் தெரிவித்தார்.

06

### வாள்கள், ஆயுதங்கள் இறக்குமதி;
# விசாரணை நடத்த IGPக்கு சட்ட மாஅதிபர் அறிவுறுத்து

லோரன்ஸ் செல்வநாயகம்



வாள்கள் மற்றும் கிரிஸ் கத்திகள் மற்றும் அது போன்ற வேறு ஆயுதங்களை இலங்கைக்கு இறக்குமதி செய்வது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு சட்ட மாஅதிபர் டப்புல டி லிவேரா பொலிஸ் மாஅதிபர் சந்தன விக்கிரமரத்னவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கு எதிராக சட்டத்தை பிரயோகிப்பதுடன் அத்தகையோருக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் சட்ட மாஅதிபர் பொலிஸ் மாஅதிபருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அது தொடர்பில் சட்ட மாஅதிபரின் இணைப்புச் செயலாளர் சட்டத்தரணி நிசாரா ஜயரத்ன தெரிவிக்கையில்;

பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ள ரிட் மனு தொடர்பான நடவடிக்கையின் ஒரு அம்சமாக சட்ட மாஅதிபர் மேற்படி பணிப்புரையைப் பொலிஸ் மாஅதிபருக்கு வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## 74 கிலோ ஹெரோயின் கண்டுபிடிப்பு





தென் மாகாணத்தில் நேற்று 74 கிலோ ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. தென் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் மாஅதிபர் ரொஹான் தி சில்வாவின் ஆலோசனையின் பிரகாரம் மாத்தறை குற்றத்தடுப்பு பிரிவின் பிரதான பொலிஸ் பரிசோதகர் சமன் தலைமையிலான குழு நேற்று அதிகாலை தெய்ந்திரன பொலிஸ் பிரிவுக்கு உட்பட முலடிரன பிரதேசத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் இப் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டிருந்தது. கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப் பொருளை படத்தில் காணலாம்.

### பயங்கரவாத தலைவர் இறப்பதில்லை;
# சர்வதேச குழு அமைத்து விசாரியுங்கள்; ஐ.ம.சக்தி பாராளுமன்றில் கோரிக்கை

ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்

எங்கேயும் பயங்கரவாத குழுவின் தலைவர் இறப்பதில்லை. இந்த விடயத்தில் சுயாதீன சர்வதேச குழுவொன்றை ஈடுபடுத்தி விசாரணை நடத்துமாறு அரசாங்கத்தை கேட்டுக்கொள்கின்றோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்தை இந்தியாவிலிருந்து ஒருவர் வழிநடத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனால் சம்பவத்தால் நன்மையடைந்தவர்கள் தகவல்களை மூடி மறைப்பதற்கு முயற்சிப்பதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

2018 ஆம் ஆண்டில் சஹ்ரானை கைது செய்வதற்கு திறந்த பிடியாணை உத்தரவை பெற்றிருந்த நிலையில் தற்போதைய ஜனாதிபதியையும், அப்போதிருந்த ஜனாதிபதியையும் கொல்ல திட்டமிடப்படுவதாக கூறி, சஹ்ரான் தொடர்பான விசாரணை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரி நாலக சில்வாவை கைது செய்தனர். ஆனால் அந்த நாடகத்தில் தொடர்புபட்டிருந்த நாமல் குமார தொடர்பாக எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இதேவேளை கடந்த அரசாங்கத்தில் புலனாய்வு பிரிவு வீழ்ச்சியடைந்துள்ளதாக இந்த அரசாங்கத்தில் உள்ளவர்கள் கூறினர். இப்போது புலனாய்வுத்துறை சிறப்பாக செயற்படுகின்றது என்றால் எங்கே அவர்களால் கைது செய்யப்பட்டவர்கள்? கடந்த அரசாங்கத்தின் போது

06

# கத்தோலிக்க மக்களுக்கு நீதியை பெற்று கொடுப்பதில் அரசு தோல்விகண்டுள்ளது
### பாராளுமன்றில் சுமந்திரன்

ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்



உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் தாக்குதல்களுடன் தொடர்புடைய உண்மையான சூத்திரதாரி அடையாளப்படுத்தப்படவில்லை. கத்தோலிக்க மக்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்கும் செயற்பாட்டில் அரசாங்கம் தோல்விகண்டுள்ளதால்தான் சர்வதேச விசாரணையை இந்த விடயத்தில் கோரியுள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யுத்தத்தின் பின்னர் அரசாங்கம் கொடுத்திருந்த வாக்குறுதிகளையும் பொறுப்புக்கூறலையும் நிறைவேற்றாமையால் தான் நாமும் கடந்த 12 வருடங்களாக ஐ.நாவில் சர்வதேச விசாரணையை கோரிவருகிறோம் என்றும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் உரையாற்றுகையில்,

06

## கடந்த அரசாங்கத்தில் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை

ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்



உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் விவகாரத்தில் ஒரு சிலரை மாத்திரம் குற்றம் சுமத்த முடியாது. கடந்த அரசாங்கத்திலிருந்த அனைவருமே பொறுப்புக்கூற வேண்டுமென அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு மீதான அறிக்கை

06



க.பொ.த சாதாரண தர பரீட்சைகள் நேற்று நிறைவடைந்த நிலையில் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் பத்தரமுல்ல, கோட்டே ஆனந்த கல்லூரியின் பரீட்சை மத்திய நிலையத்துக்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டு மாணவர்களுடன் கலந்துரையாடிய போது...

### அரசியல் பழிவாங்கல் விசாரணை
# ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செல்லுபடியற்றதாக்க கோரி ரீட் மனு

லோரன்ஸ் செல்வநாயகம்



அரசியல் பழிவாங்கல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செல்லுபடியற்றதாக்குமாறு கோரி ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரீட் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

மனுவில் பிரதிவாதிகளாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் உபாலி அபேரத்ன, ஆணைக்குழுவின் உறுப்பினர்களான சந்திரசிறி ஜயதிலக்க மற்றும் சந்திரா பெர்னாண்டோ, அந்த ஆணைக்குழுவின் செயலாளர் மற்றும் சட்ட மாஅதிபரின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனுதாரரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, மேற்படி மனுவில் அரசியல் பழிவாங்கல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவினால் விசாரணை செய்யப்பட்டுள்ள சில முறைப்பாடுகள் சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய நபராக தன் பெயரையும் குறிப்பிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் பழி வாங்கல் தொடர்பாக விசாரணை செய்த ஆணைக்குழுவானது விசாரணைகளை மேற்கொண்டுள்ள முறை

06

### 1,000 ரூபா சம்பள அதிகரிப்பு
## ஜனாதிபதி, பிரதமருக்கு ஜீவன் நன்றி தெரிவிப்பு



தோட்டத் தொழிலாளர்களின் 1,000 ரூபா சம்பள அதிகரிப்பு விடயத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு மதிப்பளித்து அந்த வேண்டுகோளை நிறைவேற்றிய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தொழில் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா உள்ளிட்ட தொழில் ஆணையாளர் அமைச்சின் செயலாளர்கள் ஆகியோருக்கு தமது நன்றிகளை தெரிவித்துக்கொள்வதாக இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹரின் டினார் | 492.89 | கட்டார் ரியால் | 50.73 |
| குவைத் டினார் | 603.09 | சவூதி ரியால் | 49.54 |
| ஓமான் ரியால் | 483.42 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் மாசி மாதம் 27ம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 றஜப் பிறை 26

## குறள் தரும் சிந்தனை



தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடிஉறைந் தற்று

*தீய செயல்களைச் செய்தவர் கேட்டை அடைதல், ஒருவனுடைய நிழல் அவனை விடாமல் வந்து அடியில் தங்கியிருத்தலைப் போன்றது.*

# அலட்சியப் போக்கினால் மீண்டும் ஆபத்து நிலைமை உருவாகலாம்!

இலங்கையில் கொவிட் 19 தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை கடந்த சில வாரங்களாக குறைவடைந்து வருகின்றது. இதேவேளை இத்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றது. கடந்த ஜனவரி 29 ஆம் திகதி முதல் இற்றை வரையும் 7 இலட்சத்து 37 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு இத்தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளதோடு, தொடர்ந்தும் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இந்நிலையில் இத்தொற்று தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டல்கள் தொடர்பில் அசிரத்தை மற்றும் கவனயீனமாக நடந்து கொள்ளும் போக்கு மக்கள் மத்தியில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. குறிப்பாக ரயில் மற்றும் பஸ் பொதுப் போக்குவரத்து வாகனங்களிலும், பொருட்களைக் கொள்வனவு செய்யக் கூடிய சந்தைகள், அங்காடி நிலையங்கள் உள்ளிட்ட மக்கள் கூடும் இடங்களிலும் இந்நிலைமையைப் பெரிதும் அவதானிக்க முடிகிறது. அதாவது கொவிட் 19 தொற்று பரவுதல் தவிர்ப்புக்கான முக்கிய சுகாதார வழிகாட்டல்களாக விளங்கும் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல், கைகழுவுதல் உள்ளிட்ட அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்களை கடைப்பிடிப்பதில் அக்கறையில்லாத சுபாவத்தைக் காண முடிகின்றது.

இது ஆரோக்கியமானக நிலைமை அல்ல. இதனை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் கொவிட் 19 என்பது வேகமாகப் பரவக் கூடிய ஒரு வைரஸ் தொற்று நோய். தற்போது இந்நாட்டில் இத்தொற்றின் பரவுதல் குறைவடைந்து வர அரசாங்கம் முன்னெடுத்து வரும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளே பிரதான காரணங்களாகும். அத்தோடு இத்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை நல்கியுள்ளது. என்றாலும் இலங்கையிலோ உலகின் எந்தவொரு நாட்டிலுமோ இத்தொற்று முற்றாகக் கட்டுப்படுத்தப்படவில்லை. ஒழிக்கப்படவுமில்லை. அதனால் சந்தர்ப்பம் கிடைக்கப் பெறுமாயின் இத்தொற்று மீண்டும் தலைதூக்குவதற்கான வாய்ப்புகள் காணப்படவே செய்கின்றன.

இது தொடர்பான அனுபவத்தை உலகின் பல நாடுகள் பெற்றுள்ளன. இத்தொற்றின் முதலாம் அலையைக் கட்டுப்படுத்திய சில நாடுகள் சுகாதார வழிகாட்டல்களில் தளர்வுப் போக்கைக் கடைப்பிடித்தன. அதனால் இவ்வைரஸ் தொற்று மீண்டும் தலைதூக்கியதோடு அந்நாடுகளின் இயல்பு வாழ்வொழுங்கையைப் பெரிதும் பாதித்து முடக்க நிலைக்கும் இட்டுச் சென்றது.

இவ்வாறான அனுபவம் இலங்கைக்கும் உள்ளது. இந்நாட்டில் கடந்த வருடம் மார்ச் மாத நடுப் பகுதி முதல் இத்தொற்றின் முதலாம் அலை பதிவாகத் தொடங்கியதும் அதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் விரிவான அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டன. அதன் பயனாக ஏப்ரலின் பின்னர் இத்தொற்றின் பரவுதல் பெருவீழ்ச்சி நிலையை அடைந்தது. அதனைத் தொடர்ந்து கட்டம் கட்டமாக நாட்டில் இயல்பு நிலை ஏற்படுத்தப்பட்டது. ஆனால் ஜுலை, ஓகஸ்ட், செப்டெம்பர் மாதமாகும் போது கொவிட்19 தொற்றைத் தவிர்ப்பதற்கான சுகாதார வழிகாட்டல்களைப் பொருட்படுத்தாத நிலைமை மக்கள் மத்தியில் பெரிதும் அதிகரித்தது.

இதன் விளைவாக ஒக்டோபர் முதல் வாரத்தில் கொவிட்19 தொற்றின் இரண்டாம் அலை தலைதூக்கியது. அது முழு நாட்டிலும் வேகமாகப் பரவியது. அதாவது முதலாம் அலையில் பரவாத பிரதேசங்களைக் கூட சென்றடைந்தது. அத்தோடு முதலாம் அலை சுமார் ஆறு மாதங்கள் நீடித்த போதிலும் சுமார் நாலாயிரம் பேர் தான் இத்தொற்றுக்கு உள்ளாகினர். 13 பேர் உயிரிழந்தனர்.

ஆனால் இரண்டாம் அலையில் இற்றை வரையும் 82 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். சுமார் 500 பேர் உயிரிழந்துமுள்ளனர். அப்படியிருந்தும் இத்தொற்றுக்கு உள்ளாவதும், இத்தொற்றினால் உயிரிழப்பதும் இன்னும் முற்றாகக் கட்டுப்பாட்டு நிலையை அடையவில்லை.

அதன் காரணத்தில் தற்போதைய சூழலில் இத்தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை குறைவடைந்தாலும் அது எந்த வேளையிலும் மீண்டும் தலைதூக்கி தீவிரமாகப் பரவக் கூடிய அச்சுறுத்தல் நிலவவே செய்கின்றது என்பதை மறுப்பதற்கில்லை.


மேலும் தற்போது வழங்கப்படும் கொவிட்19 தடுப்பூசியானது அதனைப் பெற்றுக் கொள்பவரின் உடலில் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். இவ்வைரஸின் தொற்று ஏற்படுமாயின் உடலில் அதன் தாக்கத்தை குறைக்கும். ஆனால் இவ்வைரஸ் தொற்றுக்குள்ளாவதையோ, அதன் பரவுதலையோ இத்தடுப்பூசி கட்டுப்படுத்தாது.

அதனால்தான் இத்தடுப்பூசியைப் பெற்றுக் கொள்பவர்களும் கூட இத்தொற்று தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டல்களை தொடர்ந்தும் பேணிக் கொள்ள வேண்டும் என்கின்றனர் மருத்துவ நிபுணர்கள்.

ஆகவே இத்தொற்று வீழ்ச்சியடைந்து வருகின்ற போதிலும், அது தொடர்பில் விழிப்புடனும் முன்னெச்சரிக்கையுடனும் ஒவ்வொருவரும் செயற்படுவது இன்றியமையாததாகும். அப்போதுதான் இத்தொற்று மீண்டும் நாட்டில் தலைதூக்க முடியாத நிலைமை ஏற்படும்.

editor.tkn@lakehouse.lk

# உள்ளத்தின் இருள் போக்கி, நெறியான வாழ்வுக்கு வழிகாட்டுவது சிவராத்திரி



மனிதப் பண்புகளை தட்டியெழுப்பி, நேரிய வழியில் வாழ்க்கையை அமைத்து உயர்நிலையை அடைவதற்கு மனிதனைப் பக்குவப்படுத்துவதே சமயநெறிகள். இந்த வகையில் இந்து சமயம் பல்வேறு நெறிமுறைகளை முன்வைத்துள்ளது. அவற்றிலே விரதங்களும் அடங்குகின்றன.

இவ்விரதங்கள் சக்தி விரதங்கள், விநாயக விரதங்கள், திருமாலுக்குரிய விரதங்கள், முருகனுக்குரிய விரதங்கள், நவக்கிரகங்களுக்குரிய விரதங்கள் எனப் பல விரதங்கள் இந்து சமயத்தவரால் கடைப்பிடிக்கப்படுகின்றன.

விரதம் எனும் போது மனவுறுதி என்ற பொருளுமுண்டு. உயிரினங்களெல்லாம் தமக்கென விதிக்கப்பட்ட ஒரே படிமுறையில் வாழ்ந்து மறையும் போது, மனித இனம் மட்டும் சிந்தித்து வாழ்வை நெறிப்படுத்தி வாழும் தன்மையைக் கொண்டதாக விளங்குகின்றது. சிந்தனையை தூண்டி தூயவழியில் செல்ல விரதங்கள் மனிதருக்கு வழிவகுக்கின்றன.

இந்த வகையிலே இந்துக்கள் கடைப்பிடிக்கும் விரதங்களில் சிவனுக்குரிய விரதமான மகாசிவராத்திரி மேன்மை பொருந்தியதாக அமைகின்றது. மாதந் தோறும் அமாவாசையுடன் கூடி வரும் நாள் சிவராத்திரியாக கைக்கொள்ளப்படுகின்ற போதும், மாசி மாத அமாவாசையுடன் கூடி வரும் சிவராத்திரி மகாசிவராத்திரி என்று சிறப்பித்துக் கூறப்படுகின்றது.

சிவராத்திரி தொடர்பாகப் பல கதைகளும் உள்ளன. பிரம்மாவுக்கும், திருமாலுக்கும் சிவன் சோதிப் பிளம்பாகத் தோன்றி தனது அளப்பரிய ஆற்றலை வெளிப்படுத்திய நாளாகவும், அவர்களது ஆணவத்தை அழித்த நாளாகவும் இந்நாள் கூறப்படுகின்றது.

இது போன்ற பல புராணக் கதைகளும் உள்ளன.

இக்கதைகள் கூறுகின்ற தத்துவக் கருத்துகளைப் புரிந்து, உணர்ந்து கொள்வதே விரதம் நோற்பதன் பயனாக அமையுமேயன்றி, சம்பிரதாய சடங்குகளை மட்டும் கைக்கொள்வதால் பயனில்லை.

மனதைப் பக்குவப்படுத்தி நேரிய வழியில் வாழ்ந்து, நாம் பெற்ற பிறவிப் பயனை அடைவதற்கான வழியை அருட்திரு இராமலிங்க வள்ளலார் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். அதுவே இன்று மகாசிவராத்திரி விரதத்தின் மூலமந்திரமாக விளங்குகின்றது.

'தனித்திரு, பசித்திரு, விழித்திரு' என்பவையே அவையாகும். ஒரு மனிதன் இம்மூன்று விதிகளையும் தெளிவாக உணர்ந்து தினமும் கைக்கொள்வானாயின் அவன் மனிதருள் தெய்வமாக உயர முடியும்.

ஆம், இந்த மூன்று வழிகளும் மனித மனதை பக்குவப்படுத்தி, வாழும் வழியை நெறிப்படுத்தும் ஆற்றல் கொண்டவை. இவற்றுக்கு மேலோட்டமாக ஒரு கருத்தும் கொள்ளப்படுவது வழக்கம். இருப்பினும் ஆழமாக ஆராய்ந்து அவற்றினுள் பொதிந்துள்ள தத்துவக் கருத்துகளைக் கைக்கொள்வதே மகாசிவராத்திரி விரதம் கடைப்பிடிப்பதன் பயனாக அமையும்.

சம்பிரதாய சடங்குகள் மட்டுமே சமயம் என்று கருதி விடக் கூடாது. மனிதனை, மனிதனின் மனத்தைப் பக்குவப்படுத்துவதே சமய வாழ்வாகும். 'தனித்திரு' எனும் போது தனியாக ஒதுங்கிருப்பது என்பது கருத்தல்ல. நல்லவற்றையே நோக்காகக் கொண்டு சிந்திந்து, செயற்பட்டு தனது உயர்ந்த தனித்துவத்தைப் பேணுதல் வேண்டும் என்பதே தனித்திரு என்பதன் பொருளாக அமைகின்றது.

'பசித்திரு' என்னும் போது உணவைச் சில வேளைகள் கைவிட்டு இருப்பது மட்டும் அர்த்தமல்ல. உணவைக் குறைப்பதால் உடல் நலம் பேணப்படும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. உடல் நலத்தைப் பேண உணவைத் தவிர்த்து பசித்திருப்பது போல மனநலத்தைப் பேணவும் பசித்திருக்க வேண்டும். அதாவது வயிறு பசித்திருக்கும் போது நல்ல உணவைத் தேடுவது போன்று உள்ளப் பசிக்கு அதாவது, அறிவுப் பசிக்கு நல்லவற்றை தேடி அறிந்து அதன் மூலம் மனப்பசியைப் போக்கிக் கொள்ள வேண்டும்.

உடலிலுள்ள கழிவுகளை அகற்றுவதில் நாம் முன்னுரிமை தந்து செயற்படுவது போன்று உள்ளத்திலே புகுந்துள்ள தீயசிந்தனைகளான ஆசை, பொறாமை, கோபம், குரோதம், வெறுப்பு, பகை, ஆணவம், அகங்காரம், மோகம், போன்ற கழிவுகளை நீக்கி, வெளியேற்றி சுத்தம் செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு மனக் கழிவுகளை வெளியேற்றி விடும் போது ஏற்படும் வெற்றிடமே மனப்பசி எனப்படுகின்றது. அந்த மனப்பசியை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதே பசித்திரு என்பதன் பொருளாக அமைகின்றது.

மனப்பசிக்கு உணவாக நல்ல சிந்தனைகளை உள்வாங்கிக் கொள்வது மனித வாழ்வின் மகத்துவமாகின்றது. அதுவே வாழ வேண்டிய சமய நெறியில் வாழ வழி வகுப்பதற்குரிய படிமுறையாகின்றது.

கண்களை மூடாது, நித்திரை கொள்ளாது விழித்திருப்பது தான் மகாசிவராத்திரியின் 'விழித்திரு' என்ற ஞானப்பதத்தின் பொருளாகக் கொள்ளக் கூடாது. விழித்திரு எனும் போது அதுவும் ஒரு விளக்கமாக அமைந்த போதும் சிவராத்திரி கூறும் 'விழித்திரு' என்பதன் விரிவான பொருள் வேறொன்றும் உள்ளது.

அதாவது தீய நோக்கங்கள், சிந்தனைகள் நம்மனத்தில் புகாதபடி நாம் விழிப்பாயிருக்க வேண்டும் என்பதே ஆகும். மனிதனின் சிந்தனையை சிதைத்து வாழ்வை துன்பத்தில் ஆழ்த்துபவை தீய சிந்தனைகள், தீய நோக்கங்கள், தீய செயற்பாடுகள் என்பன ஆகும்.

இத்தீய சக்திகளை கட்டுப்படுத்தி, தூர விலக்கி விடுவதில் விழிப்பாயிருக்க வேண்டும். மனிதனின் நேர்மையான வாழ்விற்கு தடையாக இருப்பவை இனங் காணப்பட வேண்டும். அவை மனத்திலே புகாதிருக்க வேண்டும். அதற்காக ஒவ்வொருவரும் விழிப்பாயிருப்பதையே 'விழித்திரு' என்ற பதம் விளக்குகின்றது.

ஒவ்வொரு மனிதனும் தன்னைத் தான் மேன்மைப்படுத்திக் கொள்ள வழியமைத்து தருபவை சமயங்கள் விதித்துள்ள விரதங்கள் என்பதை நாம் புரிந்து கொண்டு வாழ்வை செப்பனிட்டுக் கொண்டால் துன்ப, துயரங்களிலிருந்து விடுபட முடியும்.

ஆணவம், இறுமாப்பு, அகங்காரம், குரோதம், பகைமை போன்ற மனித குல நலனுக்கு ஒவ்வாத குணங்களுடன் வாழ்வதை ஒரு வாழ்வாகக் கொள்ள முடியாது. தானும் சிறப்பான வாழ்வு வாழ்ந்து, ஏனையோரும் அவ்வாறு வாழ வழிவகுப்பதே சமய வாழ்வாகும். விரதங்கள் நோற்பதன் மூலம் துன்பங்கள் களையப்பட்டு தூய்மையான வாழ்வு வந்து சேரும் என்பது நமது மரபு வழியாக வரும் நம்பிக்கையாகும்.

நமக்கும் மேலாக ஒரு சக்தியுள்ளது. அதுவே நம்மை வழிநடத்துகின்றது என்பது சமயங்களின் அடிப்படையான ஆழ்ந்த தத்தவமாகும். இவ்வாறான உறுதியான நம்பிக்கை நம்மை வந்தடைந்து விட்டால் தன்னம்பிக்கையுடன் நல்வழியில் வாழத் தலைப்பட்டு விட்டால் தன்மானம் கொண்ட மனிதனாக வாழலாம்.

இவ்வாறு ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதியான சிவபிரானை வழிப்பட்டு சிவசக்தி அருள் நாடி தனித்திருந்து, பசித்திருந்து, விழித்திருந்து நோற்கப்படும் மகாசிவராத்திரி விரதமானது மனித குலத்தின் மேன்மையின் திறவுகோலாகும்.

இவ்விரத நன்னாளில் அதர்மமும், ஆணவமும் அழிந்து எங்கும் நிம்மதி நிறையப் பிரார்த்திப்போம். நம்பினோர் கெடுவதில்லை என்ற கூற்றுக்கமைய எம்மை வாட்டும் துன்பங்கள் துடைத்தெறியப்பட எம்பெருமான் திருவருள் கிட்டும். வாழ்வு வளம் பெறும், ஒளி பெறும். அதர்ம நிலை அகன்று எங்கும் நிம்மதி நிலைக்கும் என்ற நம்பிக்கையுடன் பிரார்த்திப்போம். நலம் பெறுவோம்.

**த.மனோகரன்...**
*(துணைத் தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்)*

# சிறியதொரு கட்டடத்துக்கு இடமாற்றப்பட்ட மருதமுனை வைத்தியசாலையின் அவலம்

மருதமுனை பிரதேச வைத்தியசாலை கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றப்பட்டதையடுத்து, அங்கு இயங்கிய பிரதேச வைத்தியசாலை மருதமுனை காரியப்பர் வீதியில் உள்ள சிறிய சுகாதார மத்திய நிலையக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டு கடந்த 2020.12.09ஆம் திகதி முதல் இயங்கி வருகின்றது.குறைந்த வளங்களோடும், குறைந்த வசதிகளோடும் இவ்வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

இந்த வைத்தியசாலையில் பொறுப்பு வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய டொக்டர் ஏ.ஆர்.எம்.அஸ்மி கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டதையடுத்து இவ்வைத்தியசாலையின் புதிய பொறுப்பு வைத்திய அதிகாரியாக சாய்ந்தமருது வைத்தியசாலையில் பொறுப்பு வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய மாவட்ட வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எல்.எம்.மிஹ்ளார் பொறுப்பேற்றுள்ளார்.

பெரிய இடப் பரப்பில் இயங்கிவந்த இந்த வைத்தியசாலை சிறிய கட்டம் ஒன்றுக்குள் மாற்றப்பட்டதையடுத்து வைத்தியசாலை நிருவாகத்தினரும், சிகிச்சைக்கு வருகின்ற நோயாளர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இங்கு நான்கு டொக்டர்கள் கடமையாற்ற வேண்டிய நிலையில் மூன்று டொக்டர்களும், ஆறு தாதி உத்தியோகத்தர்கள் கடமையாற்ற வேண்டிய நிலையில் மூன்று பேர் மட்டுமே கடமை புரிகின்றனர். அத்தோடு மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்ப உத்தியோகத்தர் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளதால் அந்த வெற்றிடம் நிரப்பப்படாமல் உள்ளது.

மேலும் ஒரு வைத்தியரினதும் மூன்று தாதி உத்தியோகத்தர்களினதும் வெற்றிடங்கள் உடனடியாக நிரப்ப வேண்டியுள்ளது. மிகவும் விரிவான இடவசதிகளுடன் இயங்கி வந்த இவ் வைத்தியசாலை சிறிய இடமொன்றுக்குள் மாற்றப்பட்டதால் பெரும் சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன.

மேலும் கட்டட வசதிகளும், நோயாளர்கள்

## குறைபாடுகளை தீர்த்து வைக்குமாறு வேண்டுகோள்

தங்கி சிகிச்சை பெறுவதற்கான வாட் வசதிகள், கட்டில்கள் மற்றும் அதனோடு ஒட்டிய தளபாடங்கள், மலசலகூட வசதிகள், நிருவாக அறை, கணனிப் பிரிவு, ஓய்வறை வசதிகள், களஞ்சிய அறை, சிறுவர் சிகிச்சைப் பிரிவு, தொற்றாநோய் சிகிச்சைப் பிரிவு என்பனவற்றுக்கான இடவசதிகள் என்பன உடனடியாக ஏற்பாடு செய்யப்பட வேண்டியுள்ளன.

இந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்வதன் மூலம் நோயாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இங்கு இந்தச் சிறிய கட்டத்திற்குள் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு, பற்சிகிச்சைப் பிரிவு, தொற்றா நோய் சிகிச்சைப் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, பொதுவைத்திய சிகிச்சைப் பிரிவு, உளநலப் பிரிவு உள்ளிட்ட அனைத்து சிகிச்சைப் பிரிவுகளும் 24 மணி நேரமும் இயங்கிக் கொண்டிருக்கின்றன.



டொக்டர்
ஏ.எல்.எம்.மிஹ்ளார்





பொறுப்பு வைத்திய அதிகாரி ஏ.எல்.எம். மிஹ்ளாரினதும், வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினதும் துரித நடவடிககையால் நோயாளர்களுக்கான அனைத்து சேவைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இங்கு திங்கள் முதல் வெள்ளி வரை காலை எட்டு மணி தொடக்கம் பகல் 12 மணிவரைக்கும், பிற்பகல் 2 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரைக்கும், சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பகல் 12 மணிவரைக்கும் ஞாயிற்றுக்கிழமை மற்றும் ஏனைய விடுமுறைகளிலும் காலை 8 மணி தொடக்கம் காலை 10 மணிவரைக்கும் நோயாளர்களுக்கான சேவை வழங்கப்படுகின்றது.

மேலும் அவசர சிகிச்சைப் பிரிவு 24 நேரமும் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வைத்தியசாலை 24 மணி நேரமும் இயங்குவதால் இங்கு கடமையாற்றுகின்ற டொக்டர்களும்,தாதி உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் கடமை நேரத்திற்கு மேல திகமாக மேலதிக கொடுப்பனவுகள் எதுவுமின்றி கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே இந்த வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடி மற்றும் வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தரகள், மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்ப உத்தியோகத்தர் வெற்றிடங்கள், தளபாட பற்றாக்குறை உள்ளிட்ட விடயங்களை தீர்த்து வைப்பதற்கு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என மருதமுனை பிரதேச வைத்தியசாலையின் அபிவிருத்தி சபையினரும்,இப்பிரதேச மக்களும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

**பி.எம்.எம்.ஏ.காதர்...**
*(மருதமுனை தினகரன் நிருபர்)*

## மனித உரிமைகள் ஆணைக்குழு குற்றச்சாட்டுகள்:

# நேரடியாக பதிலளிக்க இலங்கை அரசு தயார்

### பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திசாநாயக்க பேட்டி



**'மனித உரிமைகள் ஆணைக்குழுவின் குற்றச்சாட்டுகளுக்கு நேரடியாக பதில் கொடுக்க இலங்கை தயார்' என்று கூறுகின்றார் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்க.**

**கே: மனிதன் உரிமைகள் உள்ளிட்ட பல விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ள இவ்வேளையில், அதற்கு நீங்கள் எவ்வாறு முகம்கொடுக்க உள்ளீர்கள்? அந்த யோசனைகள் எமது நாட்டுக்கு எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்தும்?**

பதில்: ஒரு நாடாக நாம் இந்தப் பிரச்சினைக்கு நிச்சயமாக முகம் கொடுப்போம். ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இருந்தும் ஐக்கிய நாடுகள் அமைப்பில் இருந்தும் நாம் வெளியேற தயாராக இல்லை. நாம் இனங்களுக்கிடையே சகோதரத்துவத்தையும் நட்பையும் மேம்படுத்த வேண்டும் என்னும் எண்ணம் கொண்டவர்கள். அத்துடன் சர்வதேச நட்புறவை பேண வேண்டும் என்ற கொள்கையை உடையவர்களை கொண்ட அரசாங்கமாகும். அதனால் எமக்கு எவ்வளவுதான் பாதிப்பை ஏற்படுத்த முயற்சி செய்தாலும் மனித உரிமைகள் ஆணைக்குழு, ஐக்கிய நாடுகள் சபை போன்றவற்றை பலப்படுத்த வேண்டும் என்ற கொள்கை கொண்டவர்கள் நாம். இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு நேரடியாக பதிலளிக்க தயாராக உள்ளோம். இச்சந்தர்ப்பத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு பல பாரிய பிரச்சினைகள் உள்ளன. கொவிட்19 தொற்று காரணமாக உலகம் பூராவும் 150 கோடிக்கும் அதிகமான மக்கள் வேலை இழந்துள்ளார்கள். அது மாத்திரமல்ல 750 கோடி தொழிலாளர்கள் உலகில் உள்ளார்கள். இது பாரிய பிரச்சினையாகும். இது பற்றி மனித உரிமைகள் ஆணைக்குழு கவனம் செலுத்த வேண்டும். இதேவேளை உலகில் மில்லியனுக்கும் அதிகமானோர் இரவில் பட்டினியுடன் நித்திரைக்குச் செல்கிறார்கள்.

'அரேபிய வசந்தம்' என்னும் பெயரில் அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட நாடுகள் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக உலகிலேயே அபிவிருத்தியடைந்த பணக்கார நாடாக காணப்பட்ட லிபியா வீழ்ச்சியடைந்துள்ளது. சிறப்பான கலாசாரத்தைக் கொண்ட ஈராக் சதாம் மறைவையடுத்து பூச்சிய நிலையை அடைந்தது. இந்நாடுகளில் நிர்வாகிகள் இல்லை, தலைவர்கள் இல்லை. கொலை செய்யும் குழுக்கள் காணப்படுகின்றன.

அதேவேளை பல்லாயிரக்கணக்கான மக்கள் பாலைவனங்களில் துன்பப்படுகிறார்கள், மரணமடைகிறார்கள். 'அரேபிய வசந்தம்' என ஆரம்பிக்கப்பட்ட அழிவு அகதிகள் உருவில் ஐரோப்பிய நாடுகளையே பாதித்துள்ளது. இவர்கள் சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக வரத் தொடங்கினார்கள். அவ்வாறு வந்தவர்கள் இலட்சக்கணக்கில் கடலுக்கு பலியாகியுள்ளார்கள். இவற்றை ஆராய வேண்டும். 'விக்கி லீக்ஸ்' இணையத்தள ஊடகவியலாளர் உலகின் பலம் வாய்ந்தவர்களின் கீழ்த்தரமான வேலைகளை அம்பலப்படுத்தியதால் இன்றும் பிரித்தானியாவில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவரை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கேட்கிறேன்.

அண்மையில் சவூதிஅரேபிய ஊடகவியலாளர் துருக்கியின் ஸ்தான்புல்லில் உள்ள தூதரகத்தில் உள்நுழைந்த பின்னர் கொலை செய்யப்பட்டார். அது சவூதி அரேபியாவின் விருப்பத்தின் பேரிலேயே இடம்பெற்றது எனத் தெளிவாகியது. அது குறித்து பேச மறுக்கிறார்கள். அண்மையில் யேமன் பாடசாலை, வைத்தியசாலை போன்ற இடங்களில் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது. அதில் நூற்றுக்கணக்கானோர் மரணமடைந்தார்கள். ஒரிடத்தில் தாய் ஒருவர் நான்கு பிள்ளைகளுடன் மரணம் அடைந்திருந்தார். இவர்கள் இருந்த இடங்களில் ஜெர்மன் நாட்டு தயாரிப்பான ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. தற்போது இந்த ஜெர்மன்தான் மனித உரிமைகள் தொடர்பாக எமக்கு எதிரான யோசனைகளை முன்வைக்கும் நாடாக உள்ளது.


ஈராக்கில் கைது செய்யப்பட்ட கைதிகள் மனிதாபிமானமற்ற முறையில் சித்திரவதை செய்யப்பட்டதாக தெரியவந்துள்ளது. இது தொடர்பாக சர்வதேச நீதிமன்றம் விசாரணை ஒன்றை ஆரம்பித்தது. ஆனால் அண்மைய நாட்களில் அதிலிருந்து பிரித்தானியா விடுவிக்கப்பட்டது. இன்று யேமனில் அதன் தலைவரை நீக்கி விட்டு சவூதி கெரில்லாக்கள் அந்நாட்டைப் பிடித்துள்ளார்கள். அதனால் சவூதி அரேபியா தொடர்ந்து யேமனை தாக்கி வருகிறது. அப்பாவி மக்கள் அங்கு கொல்லப்படுகிறார்கள். ஆனால் மனித உரிமை ஆணைக்குழுவின் தலைமைப் பொறுப்பை சவூதி அரேபியாவின் பிரதிநிதி பெற்றுள்ளார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு பில்லியன் அளவில் நன்கொடைகளை வழங்கி அப்பதவிக்கு வந்துள்ளார். ஒரு சந்தர்ப்பத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 'மனித உரிமைகள் ஆணைக்குழு மலசலகூடம்' என்று கூறி அதிலிருந்து வெளியேறினார். அமெரிக்காதான் உண்மையில் எமக்கு எதிராக யோசனையை முன்வைத்தது. அந்த யோசனை ரத்தாகியது. அதனை மீண்டும் கொண்டு வந்தவர் மங்கள சமரவீர. அவரது அடிமனதில் ஐக்கிய நாடுகள் சபையில் உயர் பதவி ஒன்றை பெறும் எண்ணம் உள்ளது. அவருக்கு அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளின் செல்லப் பிள்ளையாக இருக்க விருப்பம். அதனாலேயே எமது நாட்டுக்கு எதிரான யோசனையை மீண்டும் உருவாக்கினார். எம் மீதான குற்றச்சாட்டு 2009ஆம் ஆண்டு யுத்த முடிவின் போது மனித உரிமை மீறப்பட்டது என்பதாகும். யுத்தம் முடிவுக்கு வரும் வேளையில் பெருமளவு புலிகளுக்கு இராணுவத்திடம் சரண் அடையும் எண்ணம் இருந்தது.

இவர்கள் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த மலேசியா, இந்தியா, அமெரிக்க தூதரகம் என்பவற்றினூடாக முயற்சி செய்து வந்தார்கள். அவ்வாறு இருக்கையில் எமது இராணுவத்தினர் மக்களையும் புலிகளின் உறுப்பினர்களையும் தங்களது முகாம்களுக்கு வருமாறு கூறினார்கள். அவ்வேளையில் ஆயிரக்கணக்கானோர் வரத் தொடங்கினார்கள். 'பிரபாகரன் போக வேண்டாம்' என கூறினார். 'சென்றால் சுடுவோம்' என கூறினார். அது மட்டுமன்றி சுட்டார்கள். அவ்வேளையில் பொதுமக்கள் மரணமடைந்தது புலிகள் தாக்கியதால்தான். அதனை வடக்கிலுள்ள தமிழ் மக்கள் நன்கறிவார்கள். ஆனால் அவர்கள் இதனைக் கூற மாட்டார்கள். எல்.ரீ.ரீ.ஈ என பெயர் கொண்டவர்கள் சில இடங்களில் இராணுவத்திடம் சரணடைந்தார்கள். ஆனால் சிலர் சரண் அடைகிறோம் என்று வந்து இராணுவத்தினரைத் தாக்கினார்கள். அதனால் ஒரு சில சம்பவங்கள் நடந்திருக்கக் கூடும். அரந்தலாவ பிக்குகள் கொலை, தலதா மாளிகை, ஸ்ரீமஹா போதிய தாக்குதல் பௌத்தர்களின் இருதயத்தை கோடரி கொண்டு பிளப்பது போன்றதாகும். இவ்வாறான வேளைகளில் மனித உரிமைகள் ஆணைக்குழு இதனை தவறு என்று கூறியதா? பிரபாகரன் காட்டில் வாழ்ந்தது உண்மையே. ஆனால் அன்டன் பாலசிங்கம் லண்டனில் வசித்தார்.

கனடா, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து நாடுகளில் பயங்கரவாதிகள் இருந்தார்கள். அவர்களிடம் கேட்கவில்லை. அதனால் மனித உரிமை ஆணைக்குழுவின் மேல் உள்ள நம்பிக்கை உலக மக்களிடம் குறைந்துள்ளது. சர்வதேச நீதிமன்ற தலைவருக்கு ஒரு சந்தர்ப்பத்தில் அமெரிக்கா பொருளாதாரத் தடையை கூறுகிறது. அமெரிக்காவுக்கே இதில் நம்பிக்கை இல்லை. இவர்கள் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயல்படுகின்றார்கள். அரசியல் குற்றச்சாட்டுகள், அதிகார போட்டி, பொருளாதார ரீதியாக ஆசியா எழுச்சி பெறல் என்பதன் காரணமாக இலங்கை தொடர்பில் இவ்வாறான குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன. இன்று சீனா முன்னேறியுள்ளது.

யுத்தம் நிறைவு பெற்ற பின்னர் வடக்கிற்கு மின்சாரம் கிடைத்தது. பாதைகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. பாடசாலைகள் திறக்கப்பட்டன. போக்குவரத்துகள் சீராக்கப்பட்டன. வடக்கிலும், கிழக்கிலும் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இங்கு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களின் மனைவி, பிள்ளைகள் வெளிநாடுகளில் வசிக்கிறார்கள். இவர்கள் இங்கே அரசியல் செய்கின்றார்கள். அதனால் இவ்வாறான சந்தர்ப்பத்தில் நாம் கவனமாக இருக்க வேண்டும். உணர்ச்சிவசப்படக் கூடாது. பொறுமையுடன் செயல்பட வேண்டும். வெளிநாட்டமைச்சர் பொறுப்புடன் இராஜதந்திர மட்டத்தில் செய்தி ஒன்றைத் தெரிவித்துள்ளார். அது மிக நல்லது. அவரின் உரையையும் மனித உரிமைகள் ஆணையாளரின் உரையையும் எடுத்து நோக்குங்கள். ஆணையாளரின் உரை பணத்துக்கு அடிபணிந்து ஆற்றிய உரை எனப் புரிந்து கொள்ள முடியும்.



**'மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மேல் உள்ள நம்பிக்கை உலக மக்களிடம் குறைந்துள்ளது'**

**கே: இலங்கை மீது மனித உரிமைகள் ஆணைக்குழு யோசனை ஒன்றை முன்வைத்தால் அதற்காக ஏனைய நாடுகளின் ஆதரவு கிடைக்குமா? அவற்றின் ஆதரவை பெறுவதற்கு இலங்கை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?**

பதில்: எமது தூதரக காரியாலயங்கள் இவ்வேளையில் செயல்பட வேண்டும். அதேவேளை சர்வதேச ஆதரவைப் பெற எமது குழுக்கள் நாடுகளுக்குச் சென்று ஆதரவைத் திரட்டுவது இவ்வேளையில் முக்கியமாகும். ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை. ஆனாலும் இதற்கு நாம் சரியாக முகம் கொடுப்போம். வாக்கெடுப்பில் வெற்றி கொள்வது எமது இலக்கு அல்ல. எமது கருத்தை தெரிவிப்போம் என்பதே எமது இலக்கு. நாம் இந்த யோசனையில் தோல்வி அடைந்தால் எமக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்க எவ்வகையிலும் முடியாது. தடை விதிக்க வேண்டும் என்றால் அதனை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையில் மேற்கொள்ள வேண்டும். அங்கு சீனாவும் ரஷ்யாவும் உள்ளன. அதனால் அதனை செய்ய முடியாது.

**கே: நல்லாட்சி அரசாங்க காலத்தில் இணை அனுசரணை காரணமாக மனித உரிமைகள் ஆணைக்குழு யோசனை ஒன்றை அங்கீகரித்திருந்தது. ஆனால் அதில் இருந்து விலகுவதாக தற்போதைய அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. இந்நிலைமை இலங்கைக்கு அச்சுறுத்தலாக அமையுமா?**

பதில்: இந்த யோசனையில் இருந்து விலகுவதன் மூலம் எமது எதிர்ப்பைத் தெரிவித்தோம். அது எமது விருப்பமாகும். நாம் சுயாதீனமான நாடு. அவர்கள் எமது இராணுவ அதிகாரிகள் வெளிநாட்டுக்கு செல்வதை தடை செய்யலாம். அவ்வாறான சிறுசிறு நடவடிக்கைகளை எடுக்கலாம். அது குறித்து நாம் அக்கறை கொள்ளத் தேவையில்லை.

**கே: மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யோசனையை ஆதரிக்கும் அரசியல்வாதிகள் வடக்கில் உள்ளார்கள். அவர்களுக்கு எதிராக நாட்டின் அரசியலமைப்பின்படி நடவடிக்கை எடுக்க முடியாதா?**

பதில்: அந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தின் சத்தியப் பிரமாணத்திற்கு எதிராகவே செயல்படுகிறார்கள். உறுப்பினர்களாக சத்தியப் பிரமாணம் எடுத்த பின்னர் அவர்களால் இவ்வாறான விடயங்களைக் கூறி உறுப்பினர் பதவிகளில் இருக்க முடியாது. நாம் அரசாங்கம் என்ற ரீதியில் அந்த இடத்திற்கு செல்ல மாட்டோம். ஆனால் இது தொடர்பாக விசாரணை நடத்த முடியும். அவ்வாறு செய்யாமல் பொறுமையுடன் செயல்படுகின்றோம். பாராளுமன்றத்தில் உள்ள அநேகமான உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணத்தை மீறி உள்ளார்கள். அவர்களை வெளியேற்ற முடியும். ஆனால் நாம் அவ்வாறு செய்யப் போவதில்லை.



**கே: தற்போதைய நிலைமையில் பாதிப்படைந்துள்ள பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக கிராமிய மட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கை மேற்கொள்ளும் நோக்கில் 'கிராமத்துடனான கலந்துரையாடல்' நிகழ்ச்சி நடைபெறுகின்றது. இது எவ்வளவு தூரம் வெற்றிகரமானதாக அமையும்?**

பதில்: கிராமத்துடனான கலந்துரையாடல் நிகழ்ச்சி ஊடாக கிராம மக்களின் வறுமைக்கு விடையை அவர்களுடன் கலந்துரையாடுவதன் மூலம் கண்டுபிடிக்கலாம். அது வெற்றிகரமான ஒன்றாகும். நுவரெலியா மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் சில கிராமங்களில் வறுமையை ஒழிக்க உள்ள ஒரே வழி, கிராமத்துக்கு மேலேயுள்ள இடங்களை கொள்ளையடித்து உருவாக்கிய வருமானமற்ற 500 தொடக்கம் 600 ஏக்கர் தேயிலைத் தோட்டங்களை மக்களுக்கு பிரித்துக் கொடுப்பதாகும். நாம் தற்போது 'லக் பெரக்கும்' என்னும் கோபியை அறிமுகம் செய்துள்ளோம். அவர்கள் அதனை பயிர் செய்யலாம். அதனை பயிர் செய்வதன் மூலம் அரை ஏக்கருக்கு மாதமொன்றுக்கு 50,000 தொடக்கம் 60,000 ரூபா வரை வருமானம் பெறலாம். அந்தக் கோப்பி உலகிலுள்ள தரமான 6 கோப்பி வகைகளுள் ஒன்றாகும். நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரமே அதனை பயிர் செய்யலாம். அது பற்றி கவனம் செலுத்த வேண்டும். சில தோட்டங்கள் பராமரிக்கப்படாமல் உள்ளன.

அவை மக்களுக்கு வழங்கப்பட்டால் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தலாம். தோட்ட மக்களுக்கும் காணிகளை வழங்க முடியும். சிங்கள மக்களின் பரம்பரைக் காணிகள் கொள்ளையடிக்கப்பட்டே இந்த தோட்டங்கள் அமைக்கப்பட்டன. நுவரெலியாவில் சில கம்பனிகள் இவ்வாறான தோட்டங்களை இடை குத்தகைக்கு விடுகின்றன. அதனை செய்ய முடியாது, ஆனாலும் செய்கிறார்கள்.

**கே: கொவிட்–19 தொற்று நிலைமை காரணமாக வாழ்வாதாரத்தை இழந்த மக்கள் நாடு பூராவும் உள்ளார்கள். அவர்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?**

பதில்: எமது வருமானம் ஈட்டும் துறைகள் அனைத்தும் பாதிக்கப்பட்டுள்ளன. 36 இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாத் துறையை சார்ந்தவர்கள் வேலை இழந்துள்ளார்கள். நூற்றுக்கு 95 வீதமானோர் வீடுகளிலேயே உள்ளார்கள். இது மோசமான நிலமை ஆகும். சுற்றுலாத்துறை வருமானம் வீழ்ச்சி அடைந்தது. வெளிநாடுகளில் பணி புரிபவர்களின் வருமானமும் நாட்டிற்கு கிடைக்கவில்லை. தற்போது தைத்த ஆடைகளுக்கான கேள்வி அதிகரித்துள்ளது. தென் கொரியா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு எமது பிள்ளைகள் தொழிலுக்காக செல்ல முடியும். அதற்கான வழிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இன்று வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் அளவு குறைக்கப்பட்டுள்ளது. உள்ளூர் கைத்தொழிலை ஊக்குவிக்க வேண்டும். நெசவுத் தொழிலை உயிர்ப்பிக்க வேண்டும். எமக்குத் தேவையான பால் உற்பத்தி பொருட்களை நாமே உற்பத்தி செய்ய வேண்டும். நாம் பாலுக்காக 80 மில்லியன் ரூபாவை வருடம் ஒன்றிற்கு செலவிடுகிறோம். அதனை நாம் மீதப்படுத்த வேண்டும்.

**கே: நாட்டு நிலைமையை கருத்தில் கொண்டு மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டு வர, நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்த அரசாங்கத்தின் எதிர்காலத் திட்டம் என்ன?**

பதில்: முக்கியமான விடயம் எமது தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டும். எமது உடைகள், சப்பாத்து என்பவற்றை நாமே தயாரித்துக் கொள்ளலாம். நாம் தூரிகைகள், துடைப்பங்களைக் கூட வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கின்றோம். இவற்றை நாம் உற்பத்தி செய்யும் நிலைமைக்கு வர வேண்டும்.

**'நாம் இந்த வாக்கெடுப்பில் தோல்வி அடைந்தால், எமக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்க எவ்வகையிலும் முடியாது. தடை விதிக்க வேண்டும் என்றால் அதனை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையில் மேற்கொள்ள வேண்டும். அங்கு சீனாவும் ரஷ்யாவும் உள்ளன. அதனால் அதனை செய்ய முடியாது'**

மஹிந்த அளுத்கெதர...
(தமிழில்: வீ.ஆர்.வயலட்)

## 3.2 மில்லியன் ... (03ஆம் பக்கத் தொடர்)

விவசாயிகளுக்கு நேரடியாக பணத்தைக் கொடுத்து நெல் கொள்வனவு செய்யப்படவுள்ளது. இதன் ஊடாக இடைத் தரகர்களின் தலையீட்டை குறைக்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.

கமத்தொழில் அமைச்சசார் ஆலோசனைக் குழுக் கூட்டம் நேற்று பாராளுமன்றத்தில் நடைபெற்றபோதே அமைச்சர் இவ்வாறு கூறினார். இங்கு மேலும் கூறுகையில்,

நாட்டிலுள்ள நுகர்வோரின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு நெல் உற்பத்தி செய்யப்படுகின்ற போதும், மூன்றாவது தரப்பினரின் தலையீட்டின் காரணமாக நெல் விலையைக் கட்டுப்படுத்துவதில் சிரமங்கள் காணப்படுகிறது.

இந்த நிலைமை ஏனைய பயிர் உற்பத்திகளுக்கும் பரவுவதற்கான ஆபத்து இருப்பதாகவும் இங்கு புலப்பட்டது. அரசாங்கம் என்ற ரீதியில் இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

நாடு முழுவதிலும் அமைக்கப்பட்டுள்ள கமநல சேவைகள் மத்திய நிலையங்களை நவீனமயப்படுத்துவதற்கான ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொடுக்கவுள்ளோம். எதிர்வரும் காலத்தில் இவற்றை நவீனமயப்படுத்துவதன் ஊடாக இந் நாட்டின் விவசாயத்துறையை பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்கமைய இம் மத்திய நிலையங்களில் காணப்படும் குறைபாடுகளைத் தெரியப்படுத்துமாறு கோரியிருக்கின்றோம். ஏற்கனவே கம்பஹா மாவட்ட கமநல சேவைகள் மத்திய நிலையத்தை நவீனமயப்படுத்த 4.2 மில்லியன் ரூபா பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கான காப்புறுதி முறையொன்றை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தயாராகி வருகிறது. இதுவரை 60 பயிர்களுக்கு இலவசமான காப்புறுதிகளை வழங்குகிறது. எஞ்சியவர்களுக்கு மாதாந்தம் 600 ரூபா என்ற குறைந்த கட்டணத்தில் காப்புறுதித் திட்டமொன்றை பெற்றுக் கொடுக்கவுள்ளோம் என்றார்.

## கத்தோலிக்க... (03ஆம் பக்கத் தொடர்)

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பில் பல விசாரணைகள் நடைபெற்றுள்ளன. ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையின் ஊடாக உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரி கண்டறியப்படவில்லையென பேராயர் கார்தினால் மெல்கம் ரஞ்சித் கூறியுள்ளார். ஆனால், சஹ்ரான்தான் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியென அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கூறுகிறார். எவரும் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் தான் அறிக்கை வெளியான பின்னர் யார் பிரதான சூத்திரதாரியென அனைவரும் மீண்டும் மீண்டும் கேள்வியெழுப்புகின்றனர். அத்துடன், கறுப்பு ஞாயிறுதின போராட்டங்களை செய்கின்றனர். அறிக்கையில் பிரதான நபர் யாரென அடையாளப்படுத்தப்படவில்லை. மற்றப்படி அறிக்கை நல்ல அறிக்கை. பாராளுமன்ற தெரிவுக்குழுவும் பல விடயங்களை கண்டறிந்துள்ளது. பாராளுமன்ற தெரிவுக்குழுவும் விட சில விடயங்கள் இந்த அறிக்கையில் உள்ளன. ஆனால், உண்மையான சூத்திரதாரியை வெளிப்படுத்தாமையால் நீதியை பெற்றுக்கொடுக்கும் செயற்பாட்டில் அரசாங்கம் தோல்விகண்டுள்ளது. அரசாங்கங்கள் அடிக்கடி மாறும் ஆனால், ஒரு நாடாக நாம் நாட்டு பிரஜைகளுக்கு பொறுப்புக்கூற வேண்டும். இது மிகவும் முக்கியத்துவம்வாய்ந்த விடயமாகும். சர்வதேச விசாரணையை கோருகின்றனர் என்றார்.

## ஜனாதிபதி, பிரதமருக்கு...

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, தோட்ட தொழிலாளர்களின் நலன் சார்ந்த உரிமைகள் உள்ளிட்ட அவர்களது நாளாந்த வேதனத்தை அன்று முதல் இன்றுவரை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முயற்சியால் பெற்றுக் கொடுக்கப்பட்டு வந்தது. 1992ஆம் ஆண்டு முதல் இன்று வரை கூட்டு ஒப்பந்தத்தின் ஊடாக அந்தந்த காலங்களில் முன்னெடுக்கப்படும் பேச்சுவார்த்தையின் அடிப்படையில் தொழிலாளர்களுக்கான சம்பளத்தை இ.தொ. கா உறுதிப்பட பெற்றுக்கொடுத்து வந்துள்ளது. அந்த வகையில் இ.தொ.கா வுக்கு மதிப்பளித்து வேண்டுகோளை நிறைவேற்றிய நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா உள்ளிட்ட தொழில் ஆணையாளர் அமைச்சின் செயலாளர்கள் ஆகியோருக்கு எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

## கடந்த அரசாங்கத்தில் பாதுகாப்புக்கு...

தொடர்பிலான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் உரையாற்றுகையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பிரதான சூத்திரதாரி சஹ்ரான் குழுவினர் கடந்த ஆட்சியில் இருந்தகவர்களின் தேர்தல் நடவடிக்கைகளுக்கும் உதவி செய்துள்ளனர். தாக்குதலில் காயமடைந்த சஹ்ரான் குழுவைச் சேர்ந்த ஒருவரை பார்ப்பதற்கு வைத்தியசாலைக்கு ஹக்கீம் சென்றிருந்தார். அந்த விவகாரம் தொடர்பில் தகவல்கள் கிடைத்தவுடன், அவரிடம் குற்றப்புலனாய்வு பிரிவு விசாரணை நடத்தினர். இதன்போது பிறந்த குழந்தையொன்றை பார்ப்பதாகவே சென்றதாக அவர் பதிலளித்துள்ளார். ஹக்கீம் மாத்திரம் தான் புதிதாக பிறந்த குழந்தையை பார்ப்பதற்கு ஆண்கள் வாட்டுக்குச் சென்ற ஒருவராவார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக ஒருவரை ஒருவர் கை நீட்டுவதினால் எந்ததொரு பயனுமில்லை. இந்த தாக்குதல் இடம்பெற்றமைக்கான காரணம் தொடர்பாக முதலில் புரிந்துக்கொள்ள வேண்டும்.

தாக்குதல் இடம்பெற்றமைக்கு முக்கிய காரணம், கடந்த அரசாங்கத்தின் நாட்டின் பாதுகாப்பு விடயத்தில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து இருக்காமையே ஆகும். இதனை முதலில் புரிந்துக்கொள்ள வேண்டும். கிரியெல்ல, சம்பிக்க, சஜித், ரஞ்சித் பண்டார, கயந்த, பொன்சேக்கா உள்ளிட்ட அனைவரும் பாராளுமன்றத்தில் தற்போது அங்கம் வகித்துள்ளார்கள். அனைவரும் கடந்த ஆட்சியில் நாட்டின் பாதுகாப்பு விவகாரத்துக்கு முன்னுரிமை வழங்கவில்லை. பிரதமர், ஜனாதிபதி உள்ளிட்ட பதவிகளை பெறுவது எவ்வாறு என்பது தொடர்பாக அதிக கவனம் செலுத்தினர்கள். நாட்டின் பாதுகாப்பு குறித்து கவனத்தில் கொள்ளவில்லை என்றார்.

## சர்வதேச குழு அமைத்து... (03ஆம் பக்கத் தொடர்)

கைது செய்யப்பட்டவர்களை அடிப்படையாக கொண்டே இப்போது விசாரணைகள் நடக்கின்றன.

இச் சம்பவத்தின் பின்னாலிருந்த தலைவர்கள் எங்கே? சி.ஐ.டியின் ரவி செனவிரட்ண விசாரணை குழுவில் இந்த சம்பவத்தின் பின்னால் குழுவொன்று இருந்துள்ளதாக கூறியுள்ளார். ஏன் அதனை மறைக்க வேண்டும்.

சஹ்ரான் குடும்பத்தில் ரில்வான் என்பவர் மணம் முடித்திருந்த சாரா என்ற பெண் மட்டுமே தப்பியுள்ளார். இந்த பெண் தப்பிச் சென்றுள்ளார். அவரை மோட்டார் சைக்கிளில் கொண்டு சென்ற பொலிஸ் பரிசோதகர் கைது செய்யப்பட்டுள்ளார். ஆனால் சாராவை கைது செய்யவில்லை. ஏன் இந்த விடயத்தில் தகவல்களை மறைக்கின்றார்கள். தயவு செய்து சாராவை கொண்டு வாருங்கள். இது தொடர்பான விசாரணைகளை மூடி மறைக்காது அதனை வெளியிடுங்கள் என்று கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

## விமலுக்கு எதிராக ரிஷாத்...

நேற்று குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும், இது தொடர்பில் அவரை விசாரணை செய்து, உண்மை நிலையை வெளிப்படுத்துமாறு சி.ஐ.டியினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார். விமலுக்கு எதிராக சி.ஐ.டியினரிடம் முறைப்பாட்டைக் கையளித்த பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெற்றதிலிருந்து, விமல் வீரவன்ச என்னைப் பற்றி மிகவும் மோசமான, பொய்யான குற்றச்சாட்டுக்களை கட்டவிழ்த்து வருகின்றார். பாராளுமன்றத் தெரிவுக்குழுவிலும், சி.ஐ.டியினரின் விசாரணைகளிலும் என்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்துமே பொய்யென நிரூபிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், அண்மையில் வெளிவந்த ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையிலும், எனக்கும் இந்த தாக்குதல் சம்பவத்துக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் என்னைப் பற்றி விமல் வீரவன்ச பல்வேறு குற்றச்சாட்டுக்களை சுமத்தி வந்தார். அத்துடன், என்மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படாத பட்சத்தில், தான் அரசியலில் இருந்து வெளியேறுவதாகவும் சூளுரைத்தார். எனவே, அவர் இச் சந்தர்ப்பத்தில், அரசியலில் இருந்து வெளியேறி, தான் கூறியதை செயலில் காட்ட வேண்டும். தவிர நேற்று முன்தினம் மாலை மீண்டும் ஒரு பெரிய பொய்யை கூறியுள்ளார். எனவே தான் இன்று அதற்கெதிராக முறைப்பாடு செய்துள்ளேன். அதுமாத்திரமின்றி, எனது சட்டத்தரணி ஊடாக விமலுக்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தயாராகி வருகிறேன்.

விமலின் பேச்சுக்கள் அப்பட்டமான பொய்யாகும். இதுவரை காலமும் கூறியது போன்றே இப்போதும் கூறியுள்ளார். சஹ்ரானை எந்தக் காலத்திலும் நான் சந்திக்கவில்லை. அதேபோன்று, எனது சகோதரரும் சந்திக்கவுமில்லை, பேசவுமில்லை. அவருக்கும் எங்களுக்கும் இடையிலே எந்தத் தொடர்பும் கிடையாது. இதைத்தான் நான் அன்றும் கூறினேன், இன்றும் கூறுகிறேன் என்றார்.

ரிஷாத் பதியுதீனின் சகோதரர், ஈஸ்டர் தற்கொலை குண்டுதாரி சஹ்ரானுக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டுள்ளார். அந்த அழைப்பின் பின்னர், அவர் தனது சகோதரரான ரிஷாத் பதியுதீனுக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியுள்ளார். அதன் பின்னர் மீண்டும் அவர் சஹ்ரானுக்கு அழைப்பை மேற்கொண்டுள்ளார். இந்த விடயத்தை பொலிசார் எம்மிடம் தெரிவிக்கவில்லை. கர்தினால் அவர்களிடமே தெரியப்படுத்தியுள்ளனர். அவரது சகோதரர் கைதான போது, அவர் இதனை வியாபார ரீதியிலான தொலைபேசி அழைப்பு என்று கூறியுள்ளார்.

அமைச்சர் விமல் வீரவன்ச நேற்று முன்தினம்நடைபெற்ற இஸ்லாமிய 'அடிப்படைவாதம்: உயிர்த்த ஞாயிறு ஆணைக்குழுக்கு அப்பால் – பொது பிரசாரம்' என்ற நிகழ்விலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மக்களை சந்தோசமாக வாழ வைக்க...

மஹிந்த ராஜபக்ஷவுக்கு நேற்று அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடிதத்தில் மேலும் கூறியுள்ளதாவது,

கடந்த 2009ம் ஆண்டு யுத்தத்தின் இறுதி நேரத்தில் யுத்த களத்தில், யார்? யார்? எப்படி? நடந்து கொண்டார்கள் என்று சரி, பிழைகளை ஆய்வு செய்வதற்கு அப்பால், யுத்தத்தை மேற்கொண்ட இரண்டு தரப்பினராலும் விரும்பத்தகாத அடிப்படை மனித உரிமை மீறல்கள் அதிகமாகவே நடந்துள்ளன என, நாம் அனைவரும் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

யுத்தம் முடிந்த பின்னர் மீண்டும் தாங்களே ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டீர்கள். அந்த நேரத்தில் நீங்கள் சுதந்திர தின உரையில் கூறியது போல நடந்து கொள்வீர்கள் என எதிர்பார்த்தேன். ஆனால் அந்த கால கட்டத்தில் நான் எதிர்பார்த்த படி நீங்கள் எதுவும் செய்யவில்லை.

இதேவேளை தற்போதைய ஆட்சியில் தாங்கள் பிரதம மந்திரியாகவும் தங்கள் சகோதரர் ஜனாதிபதியாகவும் அரசாங்கத்தை தீர்மானிக்கும் சக்தியாக, உங்கள் குடும்ப உறுப்பினர்களை உள்ளடக்கியவாறு மிகவும் பலம் பொருந்திய ஒரு மனிதராக திகழ்கின்றீர்கள்.

நீங்களும் உங்கள் குடும்ப உறுப்பினர்களும் நினைத்தால் ஒரே நாளில் எமது மக்கள் எதிர்நோக்குகின்ற பெரும்பாலான பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வை காணலாம். விடுதலைப் புலிகளின் கட்டளைத் தளபதிகளின் ஆணையை ஏற்று செயற்பட்டு, பல்வேறு உயிர்ச் சேதங்கள், பொருட் சேதங்களை ஏற்படுத்திய சிறையிலுள்ள விடுதலைப் புலி உறுப்பினர்கள் மிக நீண்ட காலமாக சிறையில் வாடுகின்றார்கள்.

ஆனால் விடுதலைப் புலிகளின் கட்டளைத் தளபதிகளான சி.சந்திரகாந்தன் (பிள்ளையான்) மற்றும் கருணா அம்மான் என்கின்ற வி.முரளிதரன் ஆகியோர் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் கலந்து செயற்படுகின்றார்கள். இது போன்றே ஜே.வி.பி. கிளர்ச்சி மற்றும் இலங்கை இந்திய ஒப்பந்தம் போன்ற காலகட்டங்களில் பொது மன்னிப்பு பெற்று விடுதலையான மிகப்பெரிய குற்றங்களில் ஈடுபட்ட பலரும், ஜனநாயக அரசியலில் கலந்து நாடு முழுவதும் வலம் வருகின்றார்கள். இந்த நிலையில் யாரோ ஒருவரின் கட்டளைக்கமைய செயற்பட்டவர்கள் சிறையில் வாடுவது எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாத செயலாகும். நமது நாட்டிற்கு பொது மன்னிப்பு என்பது புதிதான விடயமுமல்ல என்பதை நான் சொல்லி நீங்கள் அறிய வேண்டிய அவசியமில்லை. இன்றைய அரசாவது உண்மையான பௌத்த கோட்பாடுகளை ஏற்றுக்கொள்வதாயின், அதன்படி ஆட்சி நடத்த வேண்டும் என நான் எதிர்பார்க்கின்றேன். அனைத்து இன மக்கள் மீதும் அன்புடனும், அமைதியுடனும், கருணையுடனும் நடந்து கொள்ளுங்கள். உண்மையில் பௌத்த தர்மத்தின் ஆட்சியை நீங்கள் நடத்த வேண்டுமானால், எல்லாவற்றையும் மறந்து, நான் பெரிது, நீ பெரிது என்று பாராமல், நம் நாடும் மக்களும் பெரிது என்று எண்ணி ஆட்சி நடத்தினால் நாம் அனைவரும் சமமாகவும், அன்பாகவும், நிம்மதியாகவும் வாழ முடியும். நம் நாட்டு மக்களை சந்தோசமாக வாழ வைக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் உண்டு.

## முஸ்லிம் சட்டத்தை எவர்...

இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறியதாவது,

நாட்டின் தற்போதைய நிலவரங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தும்போது எமக்கு சுதந்திரம் கிடைத்துவிட்டதா? என்ற சந்தேகம் ஏற்படுகின்றது. இப்போது மக்கள் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கே பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் பரவலை எவ்வாறு எதிர்கொள்வது, அதற்கு மத்தியில் எவ்வாறு தொழிலுக்கு, பாடசாலைக்குச் செல்வது, எத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றுவது ஆகியவை தொடர்பில் இராணுவத்தினர் எமக்குக் கற்பிக்கின்றார்கள்.

இவற்றுக்கு மத்தியில் கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் மற்றும் மேற்கு முனையம் என்பனவும் முக்கிய பேசுபொருளாக மாறியிருக்கின்றன. அரசாங்கம் இந்தியாவிற்கு கிழக்கு முனையத்தை வழங்குவதாகக் கூறியது.

அதன் பின்னர் இந்தியாவின் அதானி நிறுவனத்திற்கு அதனை வழங்குவதாக ஜனாதிபதி கூறினார். எனினும் அதனை வழங்கமுடியாத நிலையேற்பட்டதைத் தொடர்ந்து, தற்போது மேற்கு முனையத்தை வழங்குவதாக இராஜதந்திர அடிப்படையில் இந்தியாவுக்கு அறிவித்துவிட்டதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. எனினும் அத்தகைய உத்தியோகபூர்வ தகவல்கள் எவையும் கிடைக்கப்பெறவில்லை என்று இலங்கைக்கான இந்தியா உயர்ஸ்தானிகர் கூறியதைத் தொடர்ந்து, தாம் இந்திய அரசாங்கத்துடன் பேசவில்லை என்றும் நேரடியாக அதானி நிறுவனத்துடன் இதுபற்றிப் பேசியதாகவும் உதய கம்மன்பில கூறுகின்றார். இது தாய், தந்தையின் பெயர்கள் இல்லாத பிறப்புச் சான்றிதழைப் போன்று உள்ளது.

இந்தியாவில் அதானி நிறுவனத்துக்கு எதிராக மக்கள் போராட்டங்களை முன்னெடுத்துவரும் நிலையில், தனிப்பட்ட 'டீல்' ஒன்றின் ஊடாக அந்த நிறுவனத்திற்கு மேற்கு முனையத்தை வழங்குவதற்கு அரசாங்கம் முற்படுகின்றது. இவ்விடயம் தொடர்பில் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் ஒவ்வொருவரும் ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்களையே கூறுகின்றனர்.

அதேபோன்று இந்தியாவுக்கு வழங்கிய திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை மீளப்பெறுவதற்கு உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக உதய கம்மன்பில தெரிவித்தார். ஆனால் அது குறித்து பிரதமரிடம் வினவியபோது 'பைத்தியம்' என்று கூறிவிட்டுச் சென்று விட்டார். இதுவே தற்போதைய அரசாங்கத்தினதும் அமைச்சரவையினதும் நிலையாகும். அடுத்ததாக முஸ்லிம் விவாக, விவகாரத்துச் சட்டங்களில் திருத்தங்களை ஏற்படுத்துவதற்கு முற்படுகிறார்கள். இனவாதம் மேலோங்கும் போது முஸ்லிம் சட்டங்களை இலக்குவைக்கின்றார்கள்.

அரசாங்கத்தின் சட்டம் என்பது அரசாங்கத்துக்கும் நாட்டுக்குமானது. நாங்கள் குர்ஆனுக்கும் ஹதீஸுக்குமே மதிப்பளிப்போம். பல வருடகாலமாக நாம் அதனையே பின்பற்றி வருகின்றோம் என்றார்

## சிவனுக்கு உகந்த மஹா சிவராத்திரி...

நோற்றவர் பூசை பண்ணினர் நற்கதி அடைவர்' என்று சிவபெருமான் அருளியதாக வரதபண்டிதம் எனும் நூல் தெரிவிக்கிறது.

சிவராத்திரி தினமான இன்று இரவு முழுவதும் கண் விழித்து தரிசித்து வழிபாடு செய்ய முடியாவிட்டாலும் கூட, 'லிங்கோற்பவ' காலமாகிய இரவு 11:30 மணி முதல் 1 மணி வரை உள்ள காலத்திலாவது சிவ தரிசனம் செய்து வழிபட வேண்டும் என்கின்றன ஞானநூல்கள்.

இலங்கையில் பஞ்ச ஈஸ்வரங்கள் எனக் குறிப்பிடப்படும் முன்னேஸ்வரம், திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், தொண்டேஸ்வரம் உள்ளிட்ட அனைத்து சிவாலயங்களிலும் இன்று மகா சிவராத்திரி விரதம் அனுட்டிக்கப்படுகிறது. சிவராத்திரி மகா சிவராத்திரி, யோக சிவராத்திரி, நித்திய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, மாத சிவராத்திரி, மகா சிவராத்திரி என்று பலவகைப்பட்டாலும் மகா சிவராத்திரிதான் தலையாயது மூன்றுகோடி சிவராத்திரி தினங்கள் விரதம் இருந்த புண்ணியம் சிவராத்திரியில் விரதமிருந்தால் கிட்டும் என்பார்கள்.

## 1000 ரூபா சம்பள அதிகரிப்பு...

செயலாளரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளதுடன் அத் தீர்மானம் மார்ச் 5ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. சம்பள நிர்ணய சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கிணங்க தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் 900 ரூபாவாகவும் வரவு செலவு திட்ட கொடுப்பனவு 100 ரூபா என நாளாந்த சம்பளம் 1000 ரூபாவாக இதன்மூலம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்தி தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 1000 ரூபாவாக அதிகரிக்க வேண்டுமென கடந்த வரவுசெலவு திட்டத்தில் நிதி அமைச்சரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ யோசனையை முன்வைத்தார்.

அந்த யோசனையை நடைமுறைப்படுத்தும் வகையில் கடந்த சில மாதங்களாக பல கட்ட பேச்சுவார்த்தைகள் பல்வேறு தரப்பினருக்கிடையில் மேற்கொள்ளப்பட்டன. முதலாளிமார் சம்மேளனம் மற்றும் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்களுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் இணக்கம் காணப்படாமையினால் தொழில் அமைச்சு அந்த விவகாரத்தில் தலையிட்டது.

அதற்கிணங்க தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அந்த விவகாரத்தை சம்பள நிர்ணய சபையிடம் ஒப்படைத்தார். கடந்த பெப்ரவரி 8ஆம் திகதி நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் 900 ரூபாவாகவும் வரவுசெலவுத் திட்ட கொடுப்பனவாக நூறு ரூபாவும் வழங்கப்பட வேண்டுமென தீர்மானித்து அதற்கிணங்க நாளாந்த சம்பளம் 1000 ரூபாவாக வழங்கப்பட வேண்டும் என சம்பள நிர்ணய சபை முடிவை அறிவித்தது.

அத் தீர்மானத்திற்கு முதலாளிமார் சம்மேளனம் எதிர்ப்பை தெரிவித்த நிலையில் வாக்கெடுப்பு ஒன்று மேற்கொள்ளப்பட்டு அதில் தொழிற்சங்கங்களுக்கு ஆதரவாக தொழில் அமைச்சின் சார்பில் மூவர் வாக்களித்ததுடன் ஆயிரம் ரூபா என்ற தீர்மானம் வாக்கெடுப்பில் நிறைவேற்றப்பட்டது. அது தொடர்பில் ஆட்சேபனைகளை முன் வைப்பதற்காக இரு தரப்பினருக்கும் பெப்ரவரி 15ஆம் திகதிவரை கால அவகாசத்தை சம்பள நிர்ணய சபை வழங்கியிருந்தது. அதனையடுத்து கடந்த மார்ச் முதலாம் திகதி மீண்டும் சம்பள நிர்ணய சபை கூடியது. ஏற்கனவே தீர்மானித்ததற்கிணங்க நாளாந்த சம்பளம் ஆயிரம் ரூபா என்பது அன்றைய தினம் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அதனை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் வர்த்தமானி வெளியிடப்படும் என தொழில் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்ரகீர்த்தி தெரிவித்தார். அதற்கிணங்க மார்ச் 5ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டது. இதன் மூலம் பெரும் இழுபறி நிலையிலிருந்த தோட்டத் தொழிலாளர்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆணைக்குழுவின் ... (03ஆம் பக்கத் தொடர்)

முழுமையாக சட்டத்திற்கு முரணானது என தெரிவிக்கும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு மேலதிகமாக அது செயற்பட்டுள்ளதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## பேராயருடன்... (03ஆம் பக்கத் தொடர்)

ஈஸ்டர் பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை ஏற்றுக்கொள்வதாகவும் அதேவேளை அந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கத்தோலிக்க ஆயர் பேரவை நேற்று முன்தினம் தெரிவித்திருந்தது.

அத்தகைய சூழ்நிலையிலேயே பேராயர் மற்றும் சட்ட மாஅதிபருக்கிடையிலான இந்த சந்திப்பு நடைபெற்றுள்ளது. ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டதையடுத்து பல தரப்பிலிருந்தும் பல்வேறு விமர்சனங்களும் கருத்துக்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அந்த நிலையில் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அது தொடர்பில் கருத்து தெரிவித்த போது, மேற்படி அறிக்கையை முழுமையாக ஆராய்ந்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

## சிவபெருமானின் ஆசீர்வாதம்...

குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

இலங்கையிலும் உலகெங்கிலும் உள்ள இந்து பக்தர்கள் சிவபெருமானின் அருள் ஒளி கொண்டு அறியாமை இருள் அகற்றி, ஞானத்தின் மகிமையை அடைவதற்கான பிரார்த்தனையுடன், பழங்காலத்திலிருந்தே மகா சிவராத்திரி தினத்தில் மிகுந்த பக்தியுடன் சமயக் கிரியைகளில் ஈடுபட்டு வருகின்றனர். மகா சிவராத்திரி தின தீப ஒளி இந்து மக்களின் ஆன்மீகத்தை ஒளியூட்டுவதைப் போன்றே சமூகத்தில் அமைதி, நல்லிணக்கம் மற்றும் மகிழ்ச்சியை அடைந்துகொள்வதற்கும் சிவபெருமான் அருள்புரிய வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

## நல்லிணக்கம், புரிந்துணர்வு மூலம்...

இலங்கைத் திருநாட்டில் வாழுகின்ற ஏனைய சமூகங்களோடு ஐக்கியத்துடனும் நட்புறவுடனும் வாழும் நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட எம் இந்துக்கள், இப்புனிதமான விரதத்தை ஆன்மிக உணர்வுடன் அனுஷ்டித்து வருகின்றனர்.

நல்லிணக்கம் மற்றும் புரிந்துணர்வினூடாக ஐக்கியத்திற்கான அவர்களது தேடலில் மேலும் பலம்பெற இறையருள் துணைபுரியட்டும். மகா சிவராத்திரி விரதத்தினை அனுஷ்டிப்பதால் ஆன்மிக விமோசனம் கிடைக்கும் என்பது இந்துக்களின் உயர்வான நம்பிக்கையாகும். தியானமே மனிதனை ஆன்மிக ரீதியிற் பக்குவப்படுத்த வல்லது என்றும் இருள் நீங்கி அறிவு ஞானம் தளைத்தோங்க வேண்டும் என்ற பிரார்த்தனையோடும் மகா சிவராத்திரி தினத்தில் இந்து இறை அடியார்கள் அனைவரும் இரவு முழுவதும் கண்விழித்து விரதமிருந்து புண்ணிய கருமங்களில் ஈடுபட்டு இந்த மகோன்னத விரதத்தை அனுட்டிப்பதன் ஊடாகத் தமது ஆன்மிக வாழ்வினை வளப்படுத்துகின்றனர்.

இந்நன்னாளில் இறையருளால் நிச்சயம் ஆன்மிக பலம் பெறுவார்கள். மகா சிவராத்திரி தினத்தில் வளமானதொரு எதிர்காலத்திற்கான தமது எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேற இலங்கை வாழ் இந்துக்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## பாராளுமன்ற அதிகாரம்...

அறிக்கை நேற்று கோப் குழுத் தலைவரால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அதன்போதே பேராசிரியர் சரித்த ஹேரத் இவ்வாறு குறிப்பிட்டார். லக்விஜய மின் உற்பத்தி நிலைய கணக்கறிக்கை தொடர்பில் அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார், சட்டபூர்வமான நிதியளிப்பை மீறி சில அரச நிறுவனங்கள் செயல்படும் விதம் தொடர்பில் தெரிவுக்குழுவில் மதிப்பீடு செய்யப்பட்டது. அது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

சில அரச நிறுவனங்கள் கணக்காய்வாளரின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படாமையினால் சிக்கலான நிலைமை தோன்றியுள்ளது என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சீ தொலவத்த பொது நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழுவின் நடவடிக்கைகள் பாரபட்சமின்றி நடைபெறுகிறது என்றார். (ஸ)

## ஹிருணிக்காவுக்கான பிடியாணை...

விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது பிரதிவாதியான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமச்சந்திரவோ அல்லது அவர் சார்பில் ஆஜராக வேண்டிய சட்டத்தரணியோ நீதிமன்றத்திற்கு சமூகமளித்திருக்கவில்லை.

அத்தகைய நிலையில் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களைக் கருத்திற்கொண்டு உயர் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமச்சந்திரவை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு குற்றத் தடுப்பு பிரிவு பொலிசாருக்கு உத்தரவிட்டிருந்தார். எனினும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருனிக்கா பிரேமசந்திர சில நிமிடங்களுக்குப் பின்னர் தமது சட்டத்தரணியுடன் நீதிமன்றத்தில் ஆஜராகியதையடுத்து அவரைக் கைது செய்வதற்காக பிறப்பிக்கப்பட்டிருந்த பிடியாணையை வாபஸ் பெறுமாறு நீதிபதி அமல் ரணராஜா உத்தரவிட்டார்.

## கற்பிட்டியில் 107 kg கேரள...

வைக்கப்பட்டிருந்த கஞ்சா, படையினரால் கண்டுபிடிக்கப்பட்டது.

இக் கடத்தல் நடவடிக்கையுடன் சம்பந்தப்பட்ட நபர்கள் கடற்படையினரின் தேடுதல் நடவடிக்கைகளுக்கு பயந்து சட்டவிரோதமாக கடத்திய கஞ்சாவினை கைவிட்டு சென்றுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது. கைப்பற்றப்பட்ட சட்டவிரோத கஞ்சாவினை சம்பந்தப்பட்ட சட்ட அமுலாக்க பிரிவிரினரிடம் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

## புதிதாக பதிவு செய்ய...

செய்வதற்கான விண்ணப்பங்கள் கிடைக்கப்பட்டதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளரான, சிரேஷ்ட சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

எனினும் புதிய நெறிமுறைகள் முன்வைக்கப்பட்டதை தொடர்ந்து இந்த எண்ணிக்கை குறைவடைந்துள்ளன. விண்ணப்பங்கள், அடிப்படை தகைமைகளின்படி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனவா என்பதை ஆராய்ந்ததன் பின்னர், நேர்முகப் பரீட்சைக்கான அழைப்பு விடுக்கப்படும் என்றார்.

இதேவேளை நாட்டில் இதுவரையில், 76 அரசியல் கட்சிகள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.




# ஒல்ட்டன் தோட்ட விவகாரம் கடும் நிபந்தனைகளுடன் 22 பேர் விடுதலை

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்




ஒல்ட்டன் தோட்ட முகாமையாளர் மீது தாக்குதல் நடத்திய சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 10 தொழிலாளர்கள் உட்பட 22 பேர் கடும் நிபந்தனையின் அடிப்படையில் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வழக்கு நேற்று ஹற்றன் நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போதே நீதவான் நிமேஷா பட்டபெந்திகே சந்தேகநபர்களை நிபந்தனைகளின் அடிப்படையில் விடுதலை செய்துள்ளார்.

தலா 15 ஆயிரம் ரூபாய் ரொக்கப்பிணை, ஒரு இலட்சம் ரூபாய் சரீர பிணையிலும் ஒவ்வொரு மாதமும் மாத இறுதியில் வரும் ஞாயிற்றுக்கிழமை பொலிஸ் நிலையத்தில் காலை 09 மணிமுதல் 11 மணிவரையில் நேரில் சென்று கையொப்பமிட வேண்டுமென கடும் நிபந்தனைகளுடன் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தொழிலாளர்களின் ஆயிரம் ரூபாய் சம்பள கோரிக்கை அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தின் பின்னணியில் ஒல்ட்டன் தோட்ட நிர்வாகத்துக்கும் தொழிலாளருக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டு கடந்த மாதம் 04 ஆம் திகதி முதல் நிர்வாகத்திற்கு எதிராக தொடந்து பணிப்பகிஷ்கரிபில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந் நிலையில் கடந்த 17 ஆம் திகதி ஒல்ட்டன் தோட்ட முகாமையாளர் மற்றும் உதவி முகாமையாளரை தாக்கப்பட்டமை தொடர்பில் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஒல்ட்டன் தோட்டத்தை சேர்ந்த எட்டு பெண்கள், இரண்டு ஆண்களுமாக 10 பேர் கைது செய்யப்பட்டு அட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

குறித்த வழக்கு 10032021 இன்று மீண்டும் 20 விசாரணைக்கு எடுத்துக்கொண்ட போது மேலும் 12 சந்தேக நபர்களை மஸ்கெலியா பொலிஸார் ஆஜர்படுத்திய போது.

நீதவான் சந்தேக நபர்கள் 22 பேரைரையும் கடும் நிபந்தனையின் அடிப்படையில் பிணையில் விடுதலை செய்ததுடன் குறித்த வழக்கினை மீண்டும் ஏப்ரல் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். வழக்கு விசாரணையின் போது தொழிலாளர்கள் சார்பாக சிவில் அமைப்புகளின் சார்பிலும் தொழிற்சங்கங்களின் சார்பிலும் பலர் ஆஜராகியிருந்தனர்.

கொவிட் அச்சுறுத்தல்

# பலாங்கொடை பெலிஹுல் ஓய உல்லாச வலயம் வெறிச்சோடி

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

நாட்டில் நிலவும் கொவிட் அச்சுறுத்தல் காரணமாக பலாங்கொடை பெலிஹுல் ஓய உல்லாச வலயம் வெறிச்சோடிப் போயுள்ளதாக தொழில் துறை சார்ந்தோர் கவலை தெரிவிக்கின்றனர்.

பலாங்கொடை இம்புல்பே பிரதேச சபைக்குட்பட்ட பெலிஹுல்ஓய உல்லாச வலயம் உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாச பயணிகளை ஈர்க்கும் இயற்கை வனப்புகளை கொண்ட பிரதேசமாகும். இப்பகுதியில் உள்ள இயற்கை வனப்புகள் இயற்கை நீரூற்றுக்கள் நீர்வீழ்ச்சிகள் உட்பட இயற்கை வளங்களை கண்டுகளிக்க ஏராளமான உல்லாச பயணிகள் வருகை தருவதுண்டு. இதனால் இங்குள்ள உல்லாச பயண ஹோட்டல்கள் ,போக்குவரத்து துறை வியாபார நிலையங்கள் பெருமளவு வருமானத்தை பெற்றுக் கொள்கின்றன.

எனினும் தற்போது நாட்டில் நிலவும் காவெிட் அச்சுறுத்தல் காரணமாக போதியளவு உல்லாசப் பயணிகள் இப்பிரதேசத்திற்கு வருகை தராமையினால் பல்வேறு நெருக்கடிகளுக்கு தாம் உள்ளாகியுள்ளதாக தொழிற்துறை சார்ந்தோர் தெரிவிக்கின்றனர்.

தற்போதைய சூழ்நிலையில் உல்லாசப் பயணிகள் எவரும் வருகை தராமையினால் உல்லாச விடுதிகள் மூடப்பட்ட நிலையில் ஏனைய தொழில் துறை சார்ந்தோரின் வருமானமும் முற்றாக முடங்கிப்போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.இதனால் நாட்டின் தற்போதைய நிலைமைகளைக் கருத்திற்கொண்டு உல்லாசப் பயணிகளின் வருகையை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட நபர் கைது

லுணுகல நிருபர்

பசறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 13ஆம் கட்டை பகுதியில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட நபர் ஒருவரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் (09_03_2021) மாலை 7.00 மணியளவில் விசேட அதிரடிப்படையினரால் கஞ்சாவுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்து சென்று சுற்றிவளைப்பை மேற்கொண்டனர். இதன்போது ஒரு தொகை கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவரை கைது செய்து பசறை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.சந்தேக நபரை நேற்றைய தினம் (10.03.2021 ) பதுளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

# மஸ்கெலியாவில் கொவிட் மரணம் பதிவு

மஸ்கெலிய தினகரன் நிருபர்

மஸ்கெலிய நகரை சேர்ந்த நபர் ஒருவர் திடீரென உயிரிழந்த நிலையில் அவருக்கு கொவிட் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. உயிரிழந்தவர் 51 வயதுடைய ஆண் ஒருவர் என தெரியவந்துள்ளது.

சுகவீனம் அடைந்த நிலையில் மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பாதே அவர் உயிரிழந்து விட்டார்.

அவரது சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அங்கு அவருக்கு மேற்கொண்ட பி. சி. ஆர் பரிசோதனையில் கொவிட் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து நேற்று மதியம் இறந்த நபருடன் நெருங்கி பழகிய 9 பேருக்கும்,குடும்பத்தினர் 6 பேருக்கும் பி. சி. ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாக பொது சுகாதார அதிகாரி ஆர் நரேந்திர குமார் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் இன்னும் 62 பேருக்கு எதிர்வரும் சனிக்கிழமை பி. சி. ஆர் பரிசோதனை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்தார். இறந்தவரின் சடலத்தை அரச செலவில் தகனம் செய்யவுள்ளதாக அவர் கூறினார்.

# அமரர் ஆறுமுகன் தொண்டமானின் கனவு நனவாகியது

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நாளாந்த வேதனமாக 1000 ரூபா வழங்குவதற்கு தொழில் அமைச்சின் ஊடாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இது மறைந்த ஆறுமுகன் தொண்டமானின் இறுதி கனவாகவும் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் விடா முயற்சியும் சாணக்கியத் தன்மையின் வெளிப்பாடாகுமென இ.தொ.காவின் உபசெயலாளரும் பிரஜாசக்தி பணிப்பாளருமான பாரத் அருள்சாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்

அமரர் ஆறுமுகன் தொண்டமான் மக்களுக்கு ஆயிரம் ரூபாவை பெற்று கொடுப்பதற்கு கோரிக்கை முன்வைத்து அதனையே குறிக்கோளாகவும் இறுதி கோரிக்கையாகவும் முன்வைத்திருந்தார்.

அவர் துரதிஷ்டவசமாக எம்மை விட்டு பிரிந்திருந்தாலும் அவருடைய வழியில் எங்கள் அமைச்சர் ஜீவன் தொண்டமானின் விடா முயற்சி மற்றும் மக்களின் பலத்தாலும் பல சவால்களைத் தாண்டி பெருந்தோட்ட மக்களுக்கு ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்ற வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.



அதேபோன்று கடந்த காலங்களில் எங்களுடைய மக்கள் பல கோணங்களிலும் அப்போதைய அரசாங்கத்தினால் தவறி வழிநடத்தப்படிருந்தாலும் கூட எங்களுடைய அரசாங்கம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் வேண்டுக்கோளுக்கிற்கிணங்க நாங்கள் முன்வைத்த அனைத்து கோரிக்கைகளையும் ஏற்றுக் கொண்டு ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை வழங்க வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது, இது இலங்கை தொழிலாளர் காங்கிரஸிற்கு பெரும் வெற்றியாகும். நாங்கள் வழங்கிய ஒவ்வொரு வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவோம் என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

80 வருட ப ழைமையான தொழிற்சங்கமான இ லங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொழிலாளர்களின் பல உரிமைகளை வென்று கொடுத்துள்ளது.

மேலும், அவர்களின் நில உரிமைகளை பெற்றுக் கொடுக்க முன்னின்று செயற்படுவோம். சிலர் இந்த ஆயிரம் ரூபாவை பெற்றுக் கொடுக்க முடியாது போனமையினால் மக்களை திசைத்திருப்ப முயற்சிப்பார்கள் ஆனால் மக்கள் தெளிவாக சிந்தித்து அவர்களை நிராகரித்து விட்டனர்.

எம் மீது நம்பிக்கை வைத்தனர் . மக்களின் நம்பிக்கைக்கு ஏற்ப இருப்போம் என குறிப்பிட்டதோடு ஆயிரம் ரூபாய் வழங்க காரணமாக இருந்த அனைவருக்கும் நன்றியை தெரிவித்து கொண்டார்.

200 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனை

# பெருந்தோட்டங்களில் கொரோனா பரவல் அதிகரிப்பு

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

பயணிகள் போக்குவரத்து சாரதிகள், நடத்துனர்கள், பயணிகள் என 200 பேருக்கு பி.சி. ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாக லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஜனத் அபேகுணவர்தன தெரிவித்தார்.

ஹற்றன் போடைஸ் வழியான டயகம, தவாகலை லிந்துலை வழி மற்றும் போபத்தலாவ, அக்கரப்பத்தனை மார்க்கத்தில் சேவையில் ஈடுபடும் பஸ் சாரதி நடத்துனர், முச்சக்கரவண்டி ஓட்டுனர்கள் மற்றும் பயணிகளுக்குமே மன்றாசி சந்தியில் நேற்று காலை முதல் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெருந்தோட்டப்பகுதியில் கொரோனா தொற்றாளர்கள் அதிகரித்துள்ளதையடுத்தே டயகம மற்றும் அக்கரப்பத்தனை பொலிஸாரின் ஒத்துழைப்போடு எழுமாறாக 200 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாக வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

# ரூ.1000 சம்பள உயர்வு இராஜாங்க அமைச்சர் ஜீவனின் ஆளுமைக்கு கிடைத்த பெரும் வெற்றி

சட்டத்தரணி கா. மாரிமுத்து

தோட்டத் தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா நாட் சம்பளம் மார்ச் மாதம் 5ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. தேயிலை, இறப்பர் உற்பத்தி மற்றும் கைத்தொழில் சம்பந்தப்பட்ட சம்பள நிர்ணயசபைகளின் தீர்வுகளை உத்தியோகபூர்வமாக கடந்த 5ம் திகதி அறிவிக்கப்பட்டிருக்கின்றது. வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியில் ஆகக்குறைந்த சம்பளமாக 900ரூபா வாழ்க்கைச் செலவு நிவாரண கொடுப்பனவாக 100 ரூபாவாகவும் மொத்தம் 1000 ரூபா சம்பளம் கிடைக்கப்பெறும் என இ.தொ.கா. உபதலைவரும் சம்பள நிர்ணயசபையின் அங்கத்தவரும் சட்டத்தரணியுமான கா. மாரிமுத்து தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்காக இ.தொ.கா. பொதுச் செயலாளரும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் அர்ப்பணிப்புடன் செயற்பட்டிருந்தமையே இதற்கு முழுமையான காரணமாகும். அவரது தீர்க்கதரிசனமிக்க காய்நகர்த்தல் மூலம் அரசாங்கத்தின் அனுசரனையை முழுமையாக பெற முடிந்தது. அவரது ஆளுமைக்கு கிடைத்த பெரும் வெற்றியாகும். தக்கதருணத்தில் சாதுரியமாக செயற்பட்டதன் மூலம் தொழிலாளர் சம்பள பிரச்சினையை சம்பள நிர்ணய சபையிடம் கையளிக்க முடிந்தது. இதன் நிமித்தமே இந்த ஆயிரம் ரூபா சம்பள நிர்ணயம் சாத்தியமானது என்பது குறிப்பிடத்தக்கது.அமரர் ஆறுமுகன் தொண்டமானின் கனவை இதன் மூலம் நனவாக்கியுள்ளார் ஜீவன் தொண்டமான். இதேவேளை பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இலங்கை தொழிலாளர் காங்கிரசிற்கும் அரசாங்கத்திற்கும் தமது நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாக சட்டத்தரணி கா. மாரிமுத்து மேலும் தெரிவித்துள்ளார்.

# வறிய குடும்பங்களுக்கு வீடுகள் கையளிப்பு

ஹற்றன் விசேட நிருபர்

சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டு அம்பகமுவ பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஏழு வறிய குடும்பங்களுக்கு வீடுகள் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இதன் பிரதான நிகழ்வு அம்பகமுவ கிழக்கில் இடம்பெற்றதுடன் இந்நிகழ்வுக்கு அம்பகமுவ சமூர்த்தி சங்க முகாமையாளர் தனுஜா கௌமினி,கள உத்தியோகஸத்தர்,அசோக பிரேமலால், சமூர்த்தி அபிவிருத்தி உதவியாளர் பி.ஜயவீர உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சௌபாக்கிய நோக்கு வேலைத்திட்டத்திற்கு இணையாக சமூர்த்தி சமூக அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அம்பகமுவ கோரளைக்கு உட்பட சமுர்த்தி வலயமான ஹற்றன்,நோர்வூட்,பொல்பிட்டிய,ஆகிய வலயங்களில் ஒவ்வொரு வலயங்களிலும் ஒவ்வொரு வீடுகள் வீதமும் விதுலிபுர மற்றும் கினிகத்தேனை,சமூர்த்தி வலயங்களில் இரண்டு வீடுகள் வீதமும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

குறித்த வீடுகளுக்காக சமுர்த்தி திணைக்களத்தினால் மீண்டும் அறவிடாத வகையில் இரண்டு இலட்சம் ரூபா வீதமும்.மற்றும் கிராமவாசிகள் கொடை வள்ளல்கள் ஆகியவர்களின் சுமார் 10 இலட்சம் ரூபா செலவில் குறித்த வீடுகள் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி பயனாளிகளான மிகவும் வறிய குடும்பங்களுக்கும் விதவை பெண்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.



# தொழிற்சாலை கூரையிலிருந்து தவறி வீழ்ந்து குடும்பஸ்தர் பலி

நோட்டன் பிரிஜ் நிருபர்

தேயிலை தொழிற்சாலையின் உர களஞ்சிய சாலை கூரையிலிருந்து தவறி வீழ்ந்து மூன்று பிள்ளைகளின் தந்தை ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

ஹற்றன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எபோட்சிலி தோட்ட தேயிலை தொழிற்சாலையின் உர களஞ்சியசாலை கூரை திருத்தம் செய்து கொண்டிருந்த நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மூன்று பிள்ளைகளின் தந்தையான 39 வயதுடைய சுப்ரமணியம் அருணாசலம் என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். நேற்று காலை 11.30 மணியளவில் கூரைத்திருத்தம் செய்து கொண்டிருந்தவர் கூரையிலிருந்து உரம் களஞ்சியசாலைக்குள் வீழ்ந்துள்ளார் .நீண்ட நேரத்தின் பின்னர் தொழிற்சாலை காவலாளி கண்டு உடனடியாக டிக்கோயா கிளங்கள் மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார் எனினும் அவர் உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

சடலம் பிரதேச பரிசோதனைக்காக பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டு "தேசாகி தியாகி லோவாகி ஷீ" எனும் தொனிப்பொருளில் நிகழ்வொன்று கண்டி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன் போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம். (படங்கள்: கண்டி தினகரன் சுழற்சி நிருபர்)

# கிழக்கின் குரல்



## ஜனாஸாக்களுடன் வருபவர்கள் ஒத்துழைப்பு வழங்காவிட்டால் ஓட்டமாவடி முடக்கப்படலாம்?

### முன்னாள் இராஜாங்க அமைச்சர் அமீர் அலி



இலங்கையில் கொரோனா தொற்றினால் மரணிக்கின்ற முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்கின்ற பணிகள் ஓட்டமாவடி – மஜ்மா நகர் பகுதியில் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது என முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாஸாக்களோடு மிக அதிகம் பேர் வருகிறார்கள். அவ்வாறு கூடுதலான நபர்கள் ஓட்டமாவடி பிரதேசத்துக்கு வருவதனால் எதிர்காலத்தில் புதிய தொற்றுக்கு அந்தப் பிரதேசம் ஆளாகிக் கொள்ள முடியும் என்கின்ற ஒரு எதிர்பார்ப்பு நிலவுவதாக இராணுவத்தினரும், சுகாதாரப் பிரிவினரும் சுட்டிக்காட்டுகின்றனர். அத்தோடு, இவ்வாறு கூடுதலான நபர்களின் வருகையால் இந்தப் பணியினை அவர்களால் சிறப்பாக செய்ய முடியாத ஒரு நிலவரம் காணப்படுவதாகவும் அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதுவரை, அடக்கம் செய்யப்பட்ட ஜனாஸாக்கள் வாரக் கணக்கில், மாதக்கணக்கில் குளிரூட்டிகளில் வைக்கப்பட்ட ஜனாஸாக்கள் என்ற அடிப்படையிலே தொற்றுக்கள் குறைவாக இருக்கும். வரவுள்ள ஜனாஸாக்கள் புதிய ஜனாஸாக்கள் என்கின்ற படியால் அவர்களோடு அதிகம் பேர் வருகின்ற காரணத்தினால் சில வேளை கொரோனாவினால் பாதிக்கப்பட்டவர்களும் இந்தப் பிரதேசத்துக்கு வந்து செல்லலாம்.

இதன் காரணமாக சில வேளைகளில் ஓட்டமாவடி பிரதேசம் முடக்கப்படுகின்ற ஒரு நிலைமை ஏற்பட்டு விடலாம் என பாதுகாப்புத் தரப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

எனவே, வெளியூர்களிலிருந்து வருபவர்கள் முடிந்தவரை இந்தப் பணியினை சிறப்பாக நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

## வீதிகளை புனரமைக்க உதவுமாறு அ.சேனை விவசாயிகள் கோரிக்கை

*(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)*

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில், போக்குவரத்துக்குப் பொருத்தமற்ற பழுதடைந்து காணப்படும், நெற்காணிப் பிரதேச வீதிகளை புனரமைத்து, சீரான போக்குவரத்துக்கு உதவுமாறு விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அட்டாளைச்சேனை கமநல சேவைப்பிரிவிலுள்ள நெற்காணிப் பிரதேசங்களுக்குச் செல்லும் வீதிகளில் அதிகமானவை பழுதடைந்து காணப்படுகின்றன.

வீதிகள் குண்டும் குழியுமாகக் காட்சியளிப்பதனால் தினசரிப் போக்குவரத்தில் விவசாயிகள் சிரமங்களை எதிர் கொள்வதாக கவலை தெரிவிக்கின்றனர்.

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் பெரும்போக நெல் அறுவடைப்பணிகள் ஏற்கனவே நிறைவு பெற்றுள்ளது. இவ்வருட பெரும்போக விதைப்புப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. நெற்காணிப் பிரதேச வீதிப் புரனமைப்புக்கு இக்காலம் பொருத்தமானதாகும் எனவும், விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆகையால், இவ்விடயத்தில் விவசாயத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள், கமக்காரர் அமைப்புக்கள் என்பன அவசர கவனம் செலுத்த வேண்டும் எனவும் கோரப்படுகின்றது.

அத்துடன், அட்டாளைச்சேனை சம்புக்களப்பு பிரதான வீதி போக்குவரத்துக்குப் பொருத்தமற்றதாக காணப்படுகின்றது.

அட்டாளைச்சேனை பிரதான வீதியிலிருந்து பாவங்காய் வீதி, மீலாத்நகர், சம்புக்களப்பு, சம்புநகர், ஆலம்குளம், கிராமங்களை ஊடறுத்து அக்கரைப்பற்று – அம்பாறை பிரதான வீதியை சென்றடையும் இவ்வீதி, பொதுமக்களினதும், பிராந்திய விவசாயிகளினதும் பிரதான போக்குவரத்துப் பாதையாகவும் நீண்டகாலமாக விளங்கி வருகின்றது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் அக்கரைப்பற்றுச் சாலையினால் ஆலம்குளத்துக்கான பஸ் போக்குவரத்துச் சேவையும் இவ்வீதியில் ஏற்கனவே ஆரம்பித்து வைக்கப்பட்டு நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அலையில் சிக்கி மீனவர் மரணம்

*(ரொட்டவெவ குறூப் நிருபர்)*

திருகோணமலை சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெருகல் முகத்துவாரம் பகுதியில் மீனவரொருவர் கடல் அலையில் சிக்குண்டு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் (09) இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் மூதூர், கட்டைபறிச்சான்சாலையூர் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான குழந்தை வடிவேல் ரவீந்திரன் (53 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது, கரவலை இழுத்துக் கொண்டிருந்தபோது கடலுக்குள் இறங்கி வலையை இழுத்துக் கொண்டிருந்த போது அலையில் சிக்குண்டு உயிரிழந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

## மட்டு. வவுணதீவில் டி 56 ரக துப்பாக்கி மீட்பு

*மட்டக்களப்பு குறூப் நிருபர்*

மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொத்தியாபுளை பகுதியில் துருப்பிடித்த நிலையில் டி 56 ரக துப்பாக்கி மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கொத்தியாபுளை கிராமத்தில் வாழ்கின்ற சுமார் 412 குடும்பங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் நீர்வழங்கும் திட்டத்திற்கு வடிகான்கள் தோண்டும் நடவடிக்கையில் ஊழியர்கள் ஈடுபட்டிருந்த வேளையில், துருப்பிடித்த நிலையில் டி 56 ரக துப்பாக்கி ஒன்று கண்டெடுத்துள்ளதாக வவுணதீவு பொலிஸாருக்கு தெரிவித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து குறித்த இடத்திற்கு வருகை தந்த வவுணதீவு பொலிஸார் துப்பாக்கியை மீட்டுள்ளனர்.



சமுர்த்தி திட்டத்தின் கீழ் ஒரு கிராமத்துக்கு ஒரு வீடு எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 10 கிராம சேவையாளர் பிரிவிலும் நிர்மாணிக்கப்பட்ட 10 வீடுகளில் மூன்று வீடுகள் நேற்றுமுன்தினம் மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம். முபாறக்கினால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்ட போது.

( படம்: தோப்பூர் தினகரன் நிருபர்)

## பப்பாசிக் கன்றுகள் வழங்கி வைப்பு

*மட்டக்களப்பு விசேட, பெரியபோரதீவு தினகரன் நிருபர்கள்*

பழச்செய்கையை ஊக்குவித்து பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்கோடு உயர் இன பப்பாசிக் கன்றுகள் (08) வழங்கிவைக்கப்பட்டன. அக்சன் யுனிற்றி லங்கா நிறுவனத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு பிரதேசத்திலுள்ள கன்னங்குடா மற்றும் ஈச்சந்தீவு போன்ற கிராமங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 80 விவசாயக் குடும்பங்களுக்கு 1600 பப்பாசிக் கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.



கூட்டெரு பாவனையை ஊக்குவித்து விவசாய நிலங்களை பாதுகாத்து பயிர்செய்கையினை மேற்கொண்டு குடும்ப பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மண்முனை மேற்கு பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில், பிரதேச செயலளர் எஸ்.சுதாகர், அக்சன் யுனிற்றி லங்கா நிறுவனத்தின் சிரேஷ்ட நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜே.வி. பிரகாஷ், திட்ட உத்தியோகத்தர் கே.சதீஸ்குமார், மற்றும் விவசாயிகள், இளைஞர்கள் என பலர் கலந்து கெண்டனர்.

### கிழக்கு மாகாண முதலமைச்சரின்

## செயலாளருக்கு சேவை நலன் பாராட்டும் நூல் அறிமுகமும்

*(ஒலுவில் கிழக்கு தினகரன், மருதமுனை தினகரன், அட்டாளைச்சேனை மத்திய நிருபர்கள்)*



கிழக்கு மாகாண உள்ளூராட்சி, கிராமிய அபிவிருத்தி, கிராமிய தொழிற்துறை, சட்டமும் ஒழுங்கும், நிதி, போக்குவரத்து, சுற்றுலாத்துறை, கட்டடங்கள் மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் யூ.எல்.ஏ. அஸீஸின் 30 வருட சேவையை முன்னிட்டு சேவை நலன் பாராட்டும் "நதி நடந்த பாதை" நூல் அறிமுகமும் இன்று வியாழக்கிழமை அட்டாளைச்சேனை பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அட்டாளைச்சேனை அனைத்து பள்ளிவாசல் சம்மேளனத் தலைவர் சட்டத்தரணி எம்.எஸ்.ஜுனைதீன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், முதன்மைப் பேச்சாளராக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ. நிசாம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இதன்போது தென்கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறை பேராசிரியர் கலாநிதி றமீஸ் அப்துல்லா நூல் அறிமுக உரையினையும், ஏற்புரையினை கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் தேசமான்ய யூ.ஏல்.ஏ. அஸீஸ் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் உலமாக்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள், உயர் அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் இலக்கிய பிரமுகர்கள் உட்பட பலர் கலந்து கொள்வர் என விழாக் குழுவின் செயலாளர் ஓய்வு பெற்ற அதிபர் ஏ.எல்.கே. முகம்மட் தெரிவித்தார்.

## நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறிய வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

### புலனாய்வு உத்தியோகத்தர் கே.எம்.ஏ. றிஸ்லி

*(ஒலுவில் விசேட நிருபர்)*

அம்பாறை மாவட்டத்தில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி பொருட்களை விற்பனை செய்த 18 வர்த்தகர்களுக்கு எதிராக நீதவான் நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் மாவட்ட புலனாய்வு உத்தியோகத்தர் கே.எம்.ஏ. றிஸ்லி தெரிவித்தார்.

நுகர்வோர்கள் செய்த முறைப்பாட்டையடுத்து இவ்வாரம் அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை ஆகிய பிரதேசங்களில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் வர்த்த நிலையங்களில் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது அரிசியை கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதல் விலைக்கு விற்றல் மற்றும் பொருட்களின் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமை போன்ற குற்றத்திற்காகவே இவர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இவர்களுக்கு எதிராக அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை, ஆகிய நீதவான் நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்தியவசியப் பொருட்களைப் பதுக்கி வைத்தல், நுகர்வோர் நலன் கருதி வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, கட்டுப்பாட்டு விலையை விட கூடுதல் விலைக்கு பொருட்களை விற்பனை செய்தல், பொருட்களை பதுக்கி வைத்து சந்தையில் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவித்து மக்களை ஏமாற்றுதல் போன்ற நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறுபவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

புத்தாண்டை முன்னிட்டு எதிர் வரும் வாரங்களில் தொடர்ந்தும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் வர்த்தக நிலையங்களில் திடீர் சுற்றிவளைப்புகளை மேற்கொள்ளவுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## வீதியை செப்பனிடுமாறு வேண்டுகோள்

*நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்*

பாண்டிருப்பு பிரசித்தி பெற்ற கிட்டங்கி தாம்போதியை இணைக்கும் வண்டு வீதி அண்மையில் பெய்த மழையினால் சேதமடைந்துள்ளது. அதனால் பிரயாணிகள், பாதசாரிகள் பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டுள்ளனர். இவ்வீதியை உடனடியாக செப்பனிட உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

கிட்டங்கி தாம்போதியையடுத்து நாவிதன்வெளிப் பிரதேச செயலகம் சவளக்கடை மண்டூர் சென்ரல்கேம்ப் பிரதேசங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



சர்வதேச மகளிர் தினத்தையொட்டி "நாடும் தேசமும் உலகமும் அவளே" எனும் கருப்பொருளில் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் திங்கட்கிழமை (08) பனிச்சையடிமுன்மாதிரி கிராம சேவையாளர் பிரிவில் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நடைபெற்றன. இந் நிகழ்வில் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தனர்.

(படம்: கொக்கட்டிச்சோலை நிருபர்)

## கட்டாக்காலிகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்

*பனங்காடு தினகரன் நிருபர்*

அக்கரைப்பற்று பொத்துவில் பிரதான வீதிகளில் கட்டாக்காலி கால்நடைகளின் நடமாட்டம் அதிகமாக காணப்படுகிறது.

குறித்த பகுதிகளில் கட்டாக்காலிகளை கட்டுப்படுத்துவது தொடர்பாக திருக்கோவில் பிரதேச சபை தவிசாளர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி வாழ் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

பிரதான வீதியில் இரவு மற்றும் பகல் நேரங்களில் திருக்கோவில் ஆதார வைத்தியசாலை, பொலிஸ் நிலையம், பிரதான சந்தை தொகுதி போன்ற நகரின் முக்கிய பகுதிகளில் அவை அலைந்து திரிவதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

## அரச சேவையிலிருந்து ஓய்வு

*வாச்சிக்குடா விஷேட நிருபர்*



ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தின் முன்னாள் பிரதேச செயலாளரும் இளைஞர் விளையாட்டுத் துறை மற்றும் போக்குவரத்து அமைச்சின் மேலதிக செயலாளருமான செபரெத்தினம் அருள்ராஜா 36 வருட அரச சேவையிலிருந்து நேற்று (10) ஓய்வு பெற்றார்.

அரச சேவையின் உயர் அதிகாரியான இவர், 1961 இல் மட்டக்களப்பு மாங்காடு கிராமத்தில் பிறந்து மாங்காடு சரஸ்வதி வித்தியாலயத்தில் ஆரம்ப கல்வியை பயின்று உயர்கல்வியை செட்டிபாளையம் மகா வித்தியாலயத்தில் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்தார்.

1991ஆம் ஆண்டு இலங்கை நிருவாக சேவை பரீட்சையில் சித்திபெற்று 20 வருடங்களாக ஆலையடிவேம்பு பிரதேச செயலகம் உள்ளிட்ட அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் பிரதேச செயலாளராக கடமையாற்றியுள்ளார்.

2017 ஆம் ஆண்டு முதல் ஓய்வு பெறும்வரை சிறுதொழில் முயற்சியாண்மை அமைச்சு மற்றும் பொருளாதார அமைச்சு, பிரதேச அபிவிருத்தி அமைச்சு. புனர்வாழ்வு அமைச்சு, திறைசேரி இளைஞர் விளையாட்டுத்துறை அமைச்சு, போக்குவரத்து அமைச்சுக்களில் மேலதிக செயலாளராகவும் கடமையாற்றினார்.

## பல்சமய முக்கியஸ்தர்கள் குழு காத்தான்குடிக்கு விஜயம்



*புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்*

குருநாகல் மாவட்ட பல்சமய முக்கியஸ்தர்கள் குழுவொன்று நேற்று முன்தினம் (09) காத்தான்குடிக்கு விஜயம் செய்து காத்தான்குடியிலுள்ள பள்ளிவாசல்கள் மற்றும் நிறுவனங்களை பார்வையிட்டதுடன், காத்தான்குடியிலுள்ள பல்வேறு முக்கியஸ்தர்களையும் சந்தித்தனர்.

பௌத்த சமய முக்கியஸ்தர்கள் அடங்கலாக பல் சமய முக்கியஸ்தர்கள் இந்த குழுவில் அடங்கியிருந்தனர்.

பிஸ்மி நிறுவன பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.பீ.எம் பிர்தௌஸ் நளீமியின் ஏற்பாட்டில் காத்தான்குடிக்கு வருகை தந்த பல் சமய முக்கியஸ்தர்கள், காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை இடம் பெற்ற முதலாம் குறிச்சி மீரா ஜும்ஆப்பள்ளிவாசல், ஹுஸைனியா பள்ளிவாசல்களை பார்வையிட்டதுடன் காத்தான்குடி ஜாமிஅதுல் பலாஹ் அரபுக்கல்லூரி மற்றும் அல்அக்ஷா மஸ்ஜித், காத்தான்குடியிலுள்ள இஸ்லாமிய பூர்வீக நூதனசாலைக்கும் சென்று பார்வையிட்டனர்.

# அரசாங்கம் மாகாண சபை முறைமைக்கு மாறுபட்ட நிலைப்பாட்டை எடுக்கவில்லை

## அமைச்சர் டக்ளஸ் சுட்டிக்காட்டு



**வவுனியா விசேட நிருபர்**

அரசாங்கத்தின் அமைச்சர்களிற்கு தனிப்பட்ட நிலைப்பாடுகள் விருப்பு வெறுப்புகள் இருக்கலாம். ஆனால் அரசாங்கம் மாகாணசபை முறைமைக்கு மாறுபட்ட நிலைப்பாட்டை இன்னும் எடுக்கவில்லை என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வவுனியாவில் நடைபெற்ற கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

இன்று எமது மக்கள் துன்பங்களை அனுபவிக்கும் வகையிலான செயற்பாடுகளையே தமிழ் அரசியல்வாதிகள் முன்னெடுத்து வருகின்றனர். கோழி கூவி விடியாது தான். ஆனால் விடியும் நேரத்தை பார்த்து கோழி கூவும்போது மக்கள் மத்தியில் ஒரு அபிப்பிராயம் ஏற்படலாம்.

பிரச்சினைகளை தீராப்பிரச்சினையாக வைத்திருப்பதே தமிழ் தரப்புகளின் எண்ணம். அவர்களின் பாதை தவறு என்பதை வரலாறு நிரூபித்துள்ளது. அதேநேரம் அன்று நான் சொன்னதை கேட்டிருந்தால் இந்த இழப்புகளும் அழிவுகளும் வந்திருக்காது.

நாம் சரியாக தான் பயணிக்கிறோம். எமது கருத்துக்கள் போதிய அளவு மக்கள் மத்தியில் சென்றடையவில்லை. அதுவே எமது குறைபாடாக உள்ளது. அதேநேரம் எமது கருத்துக்கள் மக்களிடையே சென்றிருந்தால் எமது மக்கள் இன்றுவரை எமது இனம் கண்ட இழப்புகள் குறைந்திருக்கும். அல்லது தவிர்த்திருக்கலாம் என்றே கருதுகின்றேன்.

எனவே கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதேநேரம் நாங்களும் சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும். தேசிய நல்லிணக்கத்திற்கு கூடாகவே எமது பிரச்சினையை தீர்க்க முடியும். அந்த இலக்கினை நோக்கிய கொள்கைகளை ஏற்படுத்தியே நாம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தி வந்திருக்கிறோம்.

அண்மையில் பல்கலைகழக மாணவர்கள் எமது கடற்படையை விமர்சித்து, இந்தியக் கடற்றொழிலாளர்கள் தமிழர்கள் என்றபடியால் தான் கொல்லப்பட்டார்கள் என்ற பொய்யான விளக்கம் ஒன்றை கொடுத்துள்ளனர்.

ஆனால் 1971, காலப்பகுதியில் அரசிற்கெதிராக ஆயுதம் தூக்கியது மக்கள் விடுதலை முண்ணணி. அதில் அங்கம் வகித்தவர்கள் அனைவரும் சிங்கள இளைஞர் யுவதிகள் தான். அவர்களையும் தமிழர்கள் என்றா கொன்றது? அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதம் தூக்கியதால் அடக்கப்பட்டார்கள்.

எனவே மக்கள் எமது கரங்களுக்கு அதிக வாக்குகளையும் ஆசனங்களையும் தருவார்களேயானால் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற விடயத்தை செய்து காட்டுவேன் என்றார்.

# க.பொ.த சாதாரண பரீட்சை நிறைவு நாளில் விசேட பொலிஸ் பாதுகாப்பு



**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியாவில் க.பொ.த. சாதாரண பரீட்சை நடைபெற்ற நிலையங்களை சுற்றி பொலிசார் விசேட கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

2020ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சை கடந்த முதலாம் திகதி ஆரம்பமாகி நேற்றுடன் நிறைவடைந்தது.

அந்தவகையில் பரீட்சை நிறைவடைந்ததும் பரீட்சை நிலையத்திலோ அல்லது வளாகத்திலோ கலகத்தில் ஈடுபடும் பரீட்சாத்திகளின் பெறுபேறுகள் இரத்து செய்யப்பட்டு, கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் நேற்று முன்தினம் அறிவித்திருந்தது.

அதனடிப்படையில் நேற்று பிற்பகல் பரீட்சை முடிவடைந்த நிலையில் வவுனியாவில் அமைந்துள்ள அனைத்து பரீட்சை நிலையங்களிலும் பொலிசார் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததுடன், பரீட்சை நிலையத்திற்கு முன்பாக ஒன்று கூடிய மாணவர்களை வீட்டிற்கு செல்லுமாறு பணித்திருந்தனர்.

# கொரோனா தொற்றை தவிர்க்க குழு அமைப்பு

## யாழ்.போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர்



**பருத்தித்துறை விசேட நிருபர்**

யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளர்களுக்கான சகல சிகிச்சைகளும் வழங்கப்பட்டு வருகிறன. அது மட்டுமன்றி தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு சாப்பாடு வழங்குவதற்கும் வைத்தியசாலை நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது என யாழ்.போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் பவானந்தராஜா தெரிவித்தார்.

வைத்தியசாலையில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

யாழ். போதனா வைத்தியசாலை நிபுணர் ஒருவருக்கும் சில ஊழியர்களுக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டதை தொடர்ந்து சில வைத்திய சிகிச்சைகள் நிறுத்தப்பட்டிருந்தன. எனினும் தொற்று நீக்கல் செய்தபிற்பாடு அனைத்து சிகிச்சை முறைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தொற்றுக்குள்ளான வைத்தியரும் சிகிச்சை முடித்து ஒய்வில் உள்ளார். அடுத்தவாரம் மீண்டும் தனது கடமைகளை மேற்கொள்ளவுள்ளார். அதேவேளை ஏற்கனவே நாம் அறிவித்தது போல நோயாளர்களை பார்வையிட ஒருவருக்கே அனுமதி வழங்கப்பட்டது. இந்த நடைமுறை தொடர்ந்தும் அமுலில் இருக்கும்.

இன்னும் பார்வையாளர்கள் பார்வையிட வருவதை தவிர்க வேண்டும் என்பதே எமது கோரிக்கை.

எவ்வளவு தூரத்திற்கு பார்வையாளர்கள் வருவதை தவிர்க்க முடியுமோ அவ்வளவிற்கு வைத்தியசாலைக்கும் எமது சமுகத்திற்கும் செய்யும் நன்மையாகும். தற்பொழுது தங்கியிருந்து சிகிச்சை மேற்கொள்ளும் நோயாளர்களுக்கு உணவு வழங்குவதற்கு ஏற்பாடுகள் வைத்தியசாலை நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனை பெற்றுக் கொள்ள விரும்புகிறவர்கள் பொறுப்பான விடுதி மேற்பார்வையாளர் அல்லது பொறுப்பான வைத்தியரிடம் தெரிவித்து அதனை பெற்றுக்கொள்ள முடியும்.

கொரோனா தொற்றை தவிர்பதற்காக ஒரு குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அக்குழு யாழ்.போதனா வைத்தியசாலையின் ஒவ்வொரு செயற்பாடுகளையும் அவதானித்து நோய் தாக்கம் ஏற்படாது தடுப்பதற்கான வேலைத்திட்டத்தை அந்த குழு மேற்கொள்ளும் என்றார்.

# மூன்றாவது நாளாகவும் தொடரும் சுகாதார தொண்டர்கள் போராட்டம்

**யாழ்ப்பாணம் குறுப் நிருபர், ஐ.சிவசாந்தன்**



தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வடக்கு மாகாண சுகாதார தொண்டர்களின் உணவு தவிர்ப்பு போராட்டம் மூன்றாவது நாளாகவும் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்னால் போராட்டத்தை முன்னெடுத்துவரும் வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள் போராட்டம் 10ஆவது நாளாக தொடர்கின்றது.

கடந்த முதலாம் திகதியில் இருந்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்த தமக்கு எவருமே தீர்வினை வழங்காத நிலையில் நேற்றைய தினம் முதல் தமது போராட்ட வடிவத்தை உணவு தவிர்ப்பு போராட்டமாக மாற்றி முன்னெடுத்து வருகின்றனர்.

கடந்த 2019ஆம் ஆண்டு அப்போதைய ஆளுநர் எடுத்த முயற்சியின் பயனாக வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தொண்டர்களாக கடமையாற்றிய சுகாதார பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் முகமாக சுகாதார பணியாளர்களுக்கு நியமன கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

எனினும் இந் நியமனத்தில் முறைகேடு இடம்பெற்றதாக பாதிக்கப்பட்ட சுகாதார பணியாளர்கள் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக நியமனங்கள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில், நிரந்தரநியமன கடிதம் பெற்ற சுகாதார பணியாளர்கள் 454 பேர் தமக்கு உரிய தீர்வினை வழங்குமாறும் நீண்ட காலமாக தொண்டு அடிப்படையில் வைத்தியசாலைகளில் கடமையாற்றியதாகவும் எனவே தமக்கு நிரந்தர நியமனத்தை வழங்குமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வனவள திணைக்களத்தால் எல்லையிடப்பட்ட காணி பிரச்சினைக்கு தீர்வு வழங்க நடவடிக்கை

**சாவகச்சேரி விசேட நிருபர்**



யாழ். மாவட்டத்தில் வனவளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றால் எல்லைப்படுத்தப்பட்டிருக்கும் காணிப் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

மாவட்டத்தின் நெடுந்தீவு, சுண்டிக்குளம், நாவற்காடு மற்றும் சரசாலை பகுதிகளில் இத் திணைக்களங்களால் தனியார் மற்றும் அரச காணிகள் எல்லைப்படுத்தப்பட்டிருப்பதால் மக்களின் இயல்பு வாழ்விற்கு பாதிப்பு ஏற்படுவதாக அண்மையில் யாழ் மாவட்டத்தில் இடம்பெற்ற பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களின் போது சுட்டிக்காட்டப்பட்டது. அதனடிப்படையில் இவ் விடயம் தொடர்பாக துறைசார் அமைச்சர் சி.பி.ரத்னாயக்கவின் கவனத்திற்கு மாவட்ட அபிவிருத்தி ஒழுங்கிணைப்புக் குழு இணைத்தலைவர் அங்கஜன் கொண்டு சென்றதுடன், கடந்த செவ்வாய்க்கிழமை யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் காணி பிரச்சினை உள்ள பிரதேசங்களைச் சேர்ந்த பிரதேச செயலர்களுடன் கொழும்பில் அமைச்சரின் தலைமையில் கூட்டம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் அமைச்சில் இருந்து உத்தியோகத்தர்கள் யாழ். வந்து பிரதேச செயலர்களுடன் இணைந்து கண்காணிப்பு விஜயம் மேற்கொண்ட பின்னர் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காணாமல் போனோர் சங்கத் தலைவியிடம் விசாரணை

**மாங்குளம் குறுப் நிருபர்**

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி ஈஸ்வரியிடம் ஒன்றரை மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

சர்வதேச மகளிர் தினத்தை கறுப்பு நாளாக தெரிவித்து முல்லைத்தீவில் மாபெரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. அந்த வகையில் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்க தலைவி மரிய சுரேஸ் ஈஸ்வரியை முல்லைத்தீவு பொலிசார் விசாரணைகளுக்காக அழைத்தனர்.

எனினும் மகளிர் தின போராட்டம் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படவில்லை எனவும் p 2 p போராட்டம் தொடர்பிலேயே தன்னிடம் சுமார் ஒன்றரை மணிநேரம் வாக்கு மூலம் பெறப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# பொது அமைப்புக்களின் ஊடக இணைப்பாளர் தெரிவு

**முல்லைத்தீவு குறுப் நிருபர்**

முல்லைத்தீவு மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் ஊடக இணைப்பாளராக புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினர் முத்துசாமி முகுந்தகஜன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் மாங்குளத்தில் நடைபெற்ற ஒன்றியத்தின் ஒன்றுகூடலில் இத் தெரிவு இடம்பெற்றுள்ளது. கிராம, பிரதேச, மாவட்ட மட்டங்களில் காணப்படுகின்ற பிரச்சினைகளை பிரதேச செயலகங்கள், மாவட்டச் செயலகம், ஏனைய திணைக்களங்களுக்கு எடுத்துச் சென்று தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தல், இதனை ஊடகங்களில் வெளிப்படுத்துதல், ஊடகங்களுக்குப் பிரச்சினைகளை தெளிவுபடுத்தி தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல் என்பதற்காகவே முல்லைத்தீவு மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத்தினால் ஊடக இணைப்பாளர் பொறுப்பு முத்துசாமி முகுந்தகஜனிடம் வழங்கப்பட்டுள்ளது.

# ஹெரோயினுடன் இளைஞன் கைது

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியாவில் இளைஞன் ஒருவரை ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்துள்ளதாக செட்டிகுளம் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

செட்டிகுளம் ஆண்டியாபுளியங்குளம் விஷேட அதிரடி படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று முன்தினம் வவுனியா செட்டிகுளம் பகுதியில் தனிமையில் நின்ற இளைஞன் ஒருவரிடமிருந்து 800 மில்லிக் கிராம் ஹெரோயின் போதைப் பொருளினை உடமையில் வைத்திருந்த குற்றத்திற்காக 26 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டு செட்டிகுளம் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை செட்டிக்குளம் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.










துபாயில் நடைபெறவுள்ள எக்ஸ்போ 2020 கண்காட்சி நிகழ்வில் இலங்கைக்கு வாய்ப்பை பெற்றுக்கொள்ளும் நோக்கில் துபாய் சென்ற விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, கண்காட்சி ஏற்பாடுகளுக்கு பொறுப்பான ஷேக் சயீத் அறக்கட்டளையின் தலைவர் மற்றும் இயக்குநர் ஹமாத் பின் கர்தஸ் அல் அமேரியை சந்தித்து கலந்துரையாடினார். இதன்போது கிராமப்புற பள்ளிகளில் குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கு உதவக்கூடிய ஒத்துழைப்புகள் பற்றியும் விவாதிக்கப்பட்டது. பல்வேறு காரணங்களால் தாய்நாட்டிற்கு திரும்ப முடியாமல் துபாயில் நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ள இலங்கையர் சிலரையும் சந்தித்த அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, நிர்க்கதியானவர்களை விரைவில் இலங்கைக்கு அனுப்ப தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாகவும் உறுதியளித்ததுடன் அது தொடர்பில் உதவிகளையும் மேற்கொண்டார். இதன்போது இராஜாங்க அமைச்சர் சானக தினுஷவும் இக்கூட்டத்தில் பங்கேற்றார்.

# சர்வதேச செய்திகள்

### மரணப் படுக்கையில் பொலிஸார்:

## 'வீடியோ' எடுத்த ஆடவர் குற்றவாளியாக நிரூபணம்



விபத்து இடம் ஒன்றில் மரணப் படுக்கையில் இருந்த பொலிஸ் அதிகாரிகளை கேலி செய்து வீடியோ எடுத்த குற்றத்தை அவுஸ்திரேலியர் ஒருவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

இதன்படி சமூக ஒழுக்கத்திற்கு எதிராக செயற்பட்டது மற்றும் போதைப் பொருள் மற்றும் ஏனைய குற்றங்களில் 42 வயதான ரிச்சர்ட் புசி குற்றங்காணப் பட்டுள்ளார்.

கடந்த ஆண்டில் வேகமாக காரை செலுத்தியதற்காக மெல்போர்னில் வைத்து நான்கு பொலிஸ் அதிகாரியால் ரிச்சர்ட் புசி நிறுத்தப்பட்டார். அவரை பொலிஸார் கைது செய்ய முற்பட்ட நிலையில், அந்த நான்கு பொலிஸாரும் லொரி வண்டி ஒன்றில் மோதுண்டனர்.

அந்த நான்கு பொலிஸாரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். அப்போது அங்கிருந்த புசி, தனது கெமராவை எடுத்து அவர்கள் மரணித்துக் கொண்டிருக்கும் காட்சியை மூன்ற நிமிடங்கள் வீடியோ எடுத்துள்ளார்.

அதில் அவர் அந்த பொலிஸாரை கேலி செய்யும் வகையில், 'இது தான், சிறப்பாக இருக்கிறது, மிகச் சிறப்பாக இருக்கிறது' என்று கூறுவது வீடியோவில் பதிவாகியுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்கு உச்சபட்ச தண்டனை அவுஸ்திரேலிய சட்டத்தில் கூறப்படவில்லை. அவர் மீண்டும் மார்ச் 31 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

## மியன்மாரில் தடுப்புக்காவலில் 2ஆவது கட்சி அதிகாரி மரணம்



மியன்மார் இராணுவத்தின் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த பதவி கவிழ்க்கப்பட்ட ஆளும் தேசிய லீக் கட்சி அதிகாரி ஸாவ் மியாட் லின் உயிரிழந்ததாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்கிழமை அதிகாலையில் இராணுவத்தால் ஸாவ் கைது செய்யப்பட்டார். தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு உயிரிழந்த இரண்டாவது கட்சி அதிகாரியாக இவர் உள்ளார்.

“அவர் ஆர்ப்பாட்டங்களில் தொடர்ச்சியாக பங்கேற்று வந்தார்” என்று அந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ மருத்துவமனையிலிருந்து ஸாவின் சடலத்தைப் பெற, அவரது உறவினர்கள் முயன்றுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. அவரது வயிற்றுப் பகுதியில் பெரிய காயம் ஒன்று இருப்பதாக அவரது மனைவி குறிப்பிட்டுள்ளார். எனினும் தடுப்புக் காவலில் இருந்து தப்பிக்க முயன்ற போது காயம் ஏற்பட்டிருப்பதாக இராணுவம் விளக்கம் அளித்துள்ளது.

மியன்மாரில் அன்றாடம் நடைபெறும் ஆர்ப்பாட்டங்களைக் கலைக்க, இராணுவம் வன்முறையில் ஈடுபட்டு வருகிறது. இதுவரை அங்கு 60க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகவும் 1,800க்கும் மேற்பட்டோர் தடுத்துவைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## கொரோனா தொற்று உச்சம்: பிரேசிலில் சுகாதார நெருக்கடி



கொரோனா வைரஸ் தொற்று காரணமாக பிரேசிலின் பெரும்பாலான நகரங்களின் மருத்துவக் கட்டமைப்பு நிலைகுலையும் நெருக்கடிக்கு முகம்கொடுத்திருப்பதாக அந்நாட்டின் பியோக்ருஸ் என்ற நிறுவனம் எச்சரித்துள்ளது.

27 மாநிலங்களில் 25 இன் தலைநகரங்களில் உள்ள அவசர சிகிச்சை பிரிவு கட்டில்களில் 80 வீதமானது நிரம்பியிருப்பதாக ரியோ டி ஜெனிரோவைத் தளமாகக் கொண்ட அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை பிரேசிலில் கொரோனா தொற்றினால் 1,972 பேர் உயிரிழந்துள்ளனர். இது முன்னர் இல்லாத அளவு தினசரி உயிரிழப்பு எண்ணிக்கையில் அதிகரிப்பாகும்.

இந்த பெருந்தொற்று ஆரம்பித்தது தொடக்கம் பிரேசிலில் 11 மில்லியன் நோய்த் தொற்று சம்பவங்கள் பதிவாகி இருப்பதோடு 266,000க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இது அமெரிக்காவுக்கு அடுத்து உலகின் இரண்டாவது உயிரிழப்பு எண்ணிக்கையாக இருப்பதோடு அதிக நோய்த் தொற்று சம்பவங்களிலும் பிரேசில் மூன்றாவது இடத்தில் காணப்படுகிறது.

இதில் ரியோ டி ஜெனீரோ, பிரேசிலியா மற்றும் சாவோ போலோ உட்பட 15 மாநிலத் தலைநகரங்களின் அவரச சிகிச்சை பிரிவு 90 வீதம் நிரம்பி இருப்பதாக பியோக்ருஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

அதேபோன்று போர்டோ அலெக்ரே மற்றும் கெம்போ கிராண்டே அகிய இரு நகரங்களிலும் அவசர சிகிச்சை பிரிவு கட்டில்கள் நிரம்பி அளவை மிஞ்சி விட்டதாகவும் அது குறிப்பிட்டுள்ளது. இவ்வாறு அளவை விஞ்சிய சுகாதார கட்டமைப்பு நிலைகுலையும் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாகவும் அது எச்சரித்துள்ளது.

பிரேசிலில் தினசரி உயிரிழப்பு எண்ணிக்கை விரைவில் 2000ஐ தாண்டும் நிலை இருப்பதாக அந்நாட்டு நிபுணர்கள் அண்மையில் எச்சரித்திருந்தனர். மத்திய அரசு தேசிய அளவில் தலையிட்டு முகக்கவசம் அணிவது, முடக்க நிலைகளை அமுல்படுத்துவது மற்றும் தடுப்பு மருந்து விநியோகத்தை துரிதப்படுத்துவதன் முலமே இதனை கட்டுப்படுத்த முடியும் என்று கூறப்பட்டது. எனினும் பிரேசில் மக்கள் தொகையில் 4 வீதமான எட்டு மில்லியன் பேருக்கே இதுவரை முதலாம் கட்ட தடுப்பூசி கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்நிலையில் பிரேசிலில் கடந்த செவ்வாய்கிழமை 70,000க்கும் அதிகமான நோய்த் தொற்று சம்பவங்கள் பதிவாகி உள்ளன. இது கடந்த வாரத்தை விடவும் 38 வீத அதிகாரிப்பாகும். அமேசன் நகரான மனவுஸைச் சேர்ந்த வேகமாகப் பரவக்கூடிய கொரோனா தொற்றின் புதிய வடிவம் ஒன்று நாட்டில் பரவ ஆரம்பித்திருக்கும் நிலையிலேயே அங்கு நோய்த் தொற்று எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்த நெருக்கடிக்கு மத்தியிலும் கொரோனா அச்சுறுத்தல் குறித்து பிரேசில் ஜனாதிபதி ஜெயிர் பொல்சொனாரோ குறைத்தே மதிப்பிட்டு வருகிறார்.

கடந்த வாரம் பொது கூட்டம் ஒன்றில் பேசிய பிரேசில் ஜனாதிபதி ஜெயிர் பொல்சொனாரோ, “நீங்கள் எவ்வளவு காலம் குறை சொல்லி அழுது கொண்டு புலம்புவீர்கள். எவ்வளவு நாட்கள் வீட்டிலேயே இருப்பீர்கள். அதனை யாராலும் இனி பொறுத்துக் கொள்ள முடியாது. நான் மரணத்துக்கு வருந்துகிறேன். இதற்கான தீர்வை விரைவில் கண்டுப்பிடிப்போம்” என்று குறிப்பிட்டிருந்தார்.

பிரேசில் பிராந்திய அரசுகளே கொரோனா தொற்றை கட்டுப்படுத்துவதற்கான நவடிக்கைகளில் அதிக அவதானம் செலுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஹரி, மேகன் கருத்து: மகாராணி வருத்தம்



பிரிட்டிஷ் இளவரசர் ஹரி, அவரது மனைவி மேகன் மார்க்கல் ஆகியோரின் சவால்மிக்க அனுபவங்கள் வருத்தமளிப்பதாக, எலிஸபெத் மகாராணி தெரிவித்துள்ளார்.

தம்பதியின் மகன் ஆர்ச்சியின் தோல் நிறம் குறித்துக் கூறப்பட்ட கருத்து, தனிப்பட்ட முறையில் விசாரிக்கப்படும் என அரசியார் உறுதி அளித்தார்.

தொலைக்காட்சிப் பிரபலம் ஒப்ரா வின்ப்ரி இளவரசர் ஹரியையும் மேகனையும் கண்ட நேர்காணல், அரச குடும்பத்தைப் பெரிய சிக்கலில் ஆழ்த்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆர்ச்சியின் தோல் நிறம், எவ்வளவு கறுமையாக இருக்கக்கூடும் என்பதில் அரச குடும்பத்தார் அதிக அக்கறை தெரிவித்ததோடு, தமக்குத் தற்கொலை எண்ணம் தோன்றி உதவி கேட்டபோது அது புறக்கணிக்கப்பட்டதாகவும், மேகன் குற்றஞ்சாட்டியிருந்தார்.

நேர்காணலில் வெளியிடப்பட்ட சில தகவல்கள் மாறுபட்டு இருக்கலாம் என்று பக்கிங்ஹாம் அரண்மனை குறிப்பிட்டது.

எனினும், அவற்றைத் தீவிரமான ஒன்றாய்க் கருதுவதாக அரசியார் சார்பாக வெளியிட்ட அறிக்கை குறிப்பிட்டது.

இளவரசர் ஹரி, மேகன், ஆர்ச்சி மூவருமே எப்போதுமே அன்புக்குரிய குடும்ப உறுப்பினர்கள்தாம் என்றும் அறிக்கை தெரிவித்தது.



உடப்பூர் வீரசொக்கனின் "ஆற்றங்கரை "கவிதைத் தொகுப்பு" மற்றும் பாக்கள் தரும் பூக்கள்" சிறுவர் பாடல்கள் அடங்கிய நூல் வெளியீட்டு விழா வெள்ளிக்கிழமை(5) ஆண்டிமுனை ஸ்ரீகிருஷ்ணா ஆரம்ப பாடசாலையில் நடைபெற்றது. இதன் போது ஓய்வு நிலை மேல்நீதிமன்ற நீதிபதி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். சிலாபம் பிரதேச சபை உறுப்பினர் ஜே. கோகிலநாத்சிங்க்கும் ஓய்வு பெற்ற நீதிபதி திருமதி கனகா சிவபாதசுந்தரத்துக்கும் நூல் பிரதிகளை நூலாசிரியர் வழங்கினார்.

(உடப்பு குறூப் நிருபர்)





வட்டவான் கிராமத்தில் அமைந்துள்ள காளியம்மன் ஆலயத்தின் வருடாந்த வேள்விப் பொங்கல் உற்சவத்தில் கடந்த பத்து தினங்களாக கும்பம் ஏற்றப்பட்டு விஷேட பூஜையும் இடம் பெற்றது.இறுதி நாளான வெள்ளிக்கிழமை(5) விஷேட பொங்கல், முளைக் கொட்டு, பூஜைகள் இடம்பெற்றன.

(உடப்பு குறூப் நிருபர்)

## அதியுச்ச தண்டனை... (முதலாம் பக்கத் தொடர்)

*பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.*

*எதிர்காலத்தில் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுல்லாக மாறக்கூடுமென அ டையாளம் காணப்பட்ட புர்கா அ ணிதலை தடைசெய்யவும், இஸ்லாமிய பாடப்புத்தங்களில் உள்ள அடிப்படைவாதக் கல்வியை நீக்கவும், 11 முஸ்லிம் அமைப்புகளை தடை செய்யவும், மத்ரசா கல்வியை ஒழுங்குப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.*

*உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குல்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை மீது நேற்று பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின் போது, அமைச்சின் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.*

*மேலும் உரையாற்றும் போது,*

*உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களுடன் தொடர்புடைய 676 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். அதில் 202 பேர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளனர். 66 பேர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 408 பேர் நாட்டின் சட்டத்தின் பிரகாரம் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ள போதிலும் அவர்கள் தொடர்பிலும் தொடர்ச்சியாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.*

*தாக்குதல்களின் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மூன்று முக்கிய அமைப்புகளை தடைசெய்திருந்தார். தேசிய தௌஹீத் ஜமாத், ஜமாதே மில்தாதே இப்ரஹாம், மில்லாதே ஹல் சேலானி ஆகிய அமைப்புகளை அவர் தடை செய்திருந்தார். கடந்த 2019ஆம் ஆண்டு மே 22ஆம் திகதி பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டது. அதன் பின்னர் தேசியப் பாதுகாப்பு தொடர்பிலான துறைசார் மேற்பார்வைக்குழு ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.*

*உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள 2019ஆம் ஆண்டு செப்டெம்பர் 19ஆம் திகதி ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று அமைப்பட்டிருந்தது. ஆனால், இத் தாக்குதல்களை இலகுவாக தடுத்திருப்பதற்கான வாய்ப்புகள் இருந்துள்ளமை முன்னெடுக்கப்கட்டுவரும் விசாரணைகளில் தெளிவாகியுள்ளது.*

*இத் தாக்குதல்களுக்கு முன்னர் பல சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன. குறித்த சம்பவங்கள் தொடர்பில் உரிய வகையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் சந்தேகநபர்களை கைது செய்து தாக்குதல்களை தடுப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே இருந்தன.*

*என்றாலும் புலனாய்வுத்துறை முற்றாக சீர்குலைத்து இராணுவத்தினரை வலுவிலக்கச் செய்து குற்றப்புலனாய்வு பிரிவை முற்றாக அரசியல்மயப்படுத்தியிருந்தனர். தேசியப் பாதுகாப்பையும் பூச்சியமாக மாற்றியிருந்தமையால் மிகவும் இலகுவாக தாக்குதல்களை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை கடந்த அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.*

*2018ஆம் ஆண்டு பெப்ரவரி 6ஆம் திகதி நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் உறுப்பினர் அப்துல் ஷவிசாடின் வீட்டில் குண்டுத் தாக்குதலொன்று இடம்பெற்றிருந்தது. அதன் பின்னர் 6 நாட்களின் பின்னர் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் காத்தான்குடி அலுவலகத்தில் குண்டுத் தாக்குதலொன்று இடம் பெற்றிருந்தது.*

*மீண்டும் ஆறு மாதங்களின் பின்னர் மட்டக்களப்பு பாலமுனையில் வெடிப்பொருட்கள் பரீட்சார்த்து நடவடிக்கையில் சஹரானின் சகாவான ரில்வான் படுகாயமடைந்திருந்தார். அதன் பின்னர் மீண்டும் இரண்டரை மாதங்களில் நுவரெலியாவில் உள்ள பயிற்சி முகாமுக்குச் சென்று வந்துள்ளனர்.*

*தொடர்ந்து இரண்டு வாரங்களின் பின்னர் வவுணதீவில் இரண்டு பொலிஸ் அதிகாரிகள் படுகொலை செய்யப்பட்டனர். மீண்டும் ஒரு மாதத்தின் பின்னர் மாவனெல்ல புத்தர் சிலைகளை சேதப்படுத்தியிருந்தனர். அதன் பின்னர் மூன்று வாரங்களில் வனாத்தவில்லு பகுதியில் பாரிய தொகையான வெடிப்பொருட்கள் மீட்கப்பட்டிருந்தன.*

*2019ஆம் ஆண்டு மார்ச் 8ஆம் திகதி குற்றப்புலனாய்வுப் பிரிவின் தகவல் வழங்குனர் தஷ்லிமை சுட்டுக் கொன்றுள்ளனர். 2019ஆம் ஏப்ரல் 16ஆம் திகதி துவிச்சக்கரவண்டியொன்றை வெடிவித்து பரீட்சார்த்து பார்த்துள்ளனர். அதன் பின்னர் 5 நாட்களின் பின்னர்தான் உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குல்கள் இடம்பெற்றுள்ளன.*

*இதன்மூலம் அப்போதைய அரசாங்கத்தின் மந்தகதியான செயற்பாடு தெளிவாகுவதுடன், குற்றப் புலனாய்வுப் பிரிவு, பயங்கரவாத ஒழிப்பு பிரிவுகள் முறையான விசாரணையை மேற்கொள்ளாமை மற்றும் அவற்றுக்கு இடையில் தொடர்பு இல்லாமையின் மூலம் இப் பயங்கரவாதத் தாக்குல்களை தடுப்பதற்கான 9 சந்தர்ப்பங்கள் இல்லாது போயிருந்தன.*

*சமகால அரசாங்கம் ஆட்சியை கைப்பற்றியதும் மீண்டும் புலனாய்வுப் பிரிவு பலப்படுத்தப்பட்டதுடன் தேசியப் பாதுகாப்புக்கு முன்னுரிமையளிக்கப்பட்டது. குற்றப்புலனாய்வு மற்றும் பயங்கரவாத ஒழிப்பு பிரிவுகள் எவ்வித அரசியல் தலையீடுகளுமின்றி பலப்படுத்தப்பட்டன.*

*தாக்குதல்களுடன் தொடர்புடைய 99 பேர் உள்நாட்டிலும் 35 பேர் வெளிநாட்டிலும் கைதுசெய்யப்பட்டு விசாரணைகளை மேற்கொண்டோம்.சர்வதேசபுலனாய்வுத் துறையினருடன் இணைந்து ஐந்து நாடுகளில் 54 பேரை கைதுசெய்துள்ளோம். அதில் 50 பேர் நாட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர்.*

*ஏனைய 4 பேரும் குறிப்பிட்ட நாடுகளில் வழக்கு விசாரணைகள் நிறைவடைந்தது அழைத்துவரப்படுவர். இவர்கள் அனைவரும் அந்தந்த நாடுகளில் அடிப்படைவாதத்தை ஊக்குவிக்க செயற்பட்டுள்ளதுடன், அங்கு நிதிகளையும் சேகரித்து அனுப்பியுள்ளனர். அனைவருக்கு எதிராகவும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் தொடர்பில் சர்வதேச புலனாய்வுத் துறையினருடன் இணைந்து கண்காணிப்புகள் மேற்கொள்ளப்படும்.*

*2020ஆம் ஆண்டு ஆரம்பத்தில் சஹ்ரானிடம் தாற்கொலைதாரிகளாக பயிற்சி பெற்றுள்ள 17 பெண்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதில் 5 பேர் தற்போது இறந்துள்ளனர். மூன்று பேருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். 7 பேர் கைது செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஏனைய 2 பேரையும் கைதுசெய்ய நடவடிக்கையெடுக்கப்படும்.*

*2018ஆம் ஆண்டு இலங்கையின் நிறுவனமொன்றின் ஊடாக சீனாவிலிருந்த 1,400 வாள்கள் இறக்குமதி செய்யப்பட்டு நாடு முழுவதும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் 35 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 7 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கலும் செய்யப்பட்டுள்ளது.*

*சஹ்ரானின் வலையமைப்புக்கு அப்பால் இலங்கையில் செயற்படும் ஏனைய அடிப்படைவாதக் குழுகளையும் ஒடுக்கவும் அதன் பிரதான உறுப்பினர்களை கைது செய்யவும் புலனாய்வுத்துறையும் பயங்கரவாத ஒழிப்பு பிரிவும் செயற்பட்டு வருகிறது.*

*வன் உன்மா, ஸ்புத் தாஹிர், முஜர்தீன் ஹல்ஹா, சுப்பர் முஸ்லிம் உள்ளிட்ட குழுக்களாகும். முஸ்லிம் இராஜ்ஜியமொன்றை கட்டியெழுப்ப சஹ்ரான், மதவாச்சி, வன்னி, தியவெல்ல ஹம்பாந்தோட்டை, நுவரெலியா, ஹிங்குல உள்ளிட்ட பகுதிகளில் நடத்தி சென்றுள்ள 8 பயிற்சி முகாம்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த முகாம்களுடன் தொடர்புடையவர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.*

*2018ஆம் ஆண்டுமுதல் சஹ்ரானின் அனைத்து தேவைகளுக்கு நிதியையும் வாகனங்களையும் தெமட்டகொட இப்ராஹிம் சகோதரர்களே வழங்கியுள்ளனர். இவர்கள் 2018ஆம் ஆண்டு முதல் தாக்குதல் வரையான காலப் பகுதிவரை 500 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளனர்.*

*2014ஆம் ஆண்டு இஸ்லாமிய இராஜ்ஜியத்துக்கான பிரகடனத்தை ஐ.எஸ் அமைப்பின் தலைவர் வெளியிட்டதன் பின்னர் சஹ்ரான் உள்ளிட்ட குழுவின் இஸ்லாமிய இராஜ்ஜிய கோட்பாடுக்காக செயற்பட்டுள்ளனர். மத அடிப்படைவாதிகளாக இவர்கள் மாறியுள்ளனர். 2017ஆம் ஆண்டு ஆரம்பத்தில் மத அடிப்படைவாதத்திலிருந்து வன்முறையை நோக்கி சஹ்ரான் பயணித்துள்ளார்.*

*2017ஆம் ஆண்டு மார்ச் 17ஆம் திகதி காத்தான்குடியில் மாற்றுக்கருத்துடையவர்களை தாக்கியுள்ளமை சஹ்ரானின் முதலவாது வன்முறை சம்பவமாகும். சஹ்ரானை ஐ.எஸ் அமைப்பின் கருத்தியலுடன் இணைத்த பிரதானமானவராக நௌப்பர் என்பவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.*

*தாக்குதல்களுக்கு தேவையான நிதியானது இல்ஹாம், இன்ஹாம் சகோரர்கள் மூலம் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அடிப்படைவாத அமைப்புகள் மூலமும் கிடைக்கப்பெற்றுள்ளது. ஆகவே, ஐ.எஸ் அமைப்பின் கருத்தியலின் மூலமே உயிர்த்த இப் பயங்கரவாதத் தாக்குல்களுக்கான பின்புலம் உருவாகியுள்ளது.*

*தேசிய பாதுகாப்புத் தொடர்பிலான துறைசார் மேற்பார்வைக் குழுவின் சிபாரிசுகளை செயல்படுத்த ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். மத்ரசாக்களில் உரிய கல்வி முறைமைகள் இல்லை. 5 வயதுமுதல் 10 வயதுவரை அரச கல்வி கொள்கையின் கீழ் மாணவர்களுக்கு கல்வியை பெற்றுக்கொடுக்க வேண்டுமென அவதானம் செலுத்தியுள்ளோம்.*

*இந்த கொள்கையின் பிரகாரம் செயற்படாத பாடசாலைகள் அனைத்தும் தடை செய்யப்படும். ஏனைய மத்ரசா பாடசாலைகளை கல்வி அமைச்சுடன் இணைத்து தர நிர்ணயம் மேற்கொள்ள நடவடிக்கையெடுக்கப்படும்.*

*சமகால அரசாங்கம் தாக்குதல்களுடன் தொடர்புடைய மற்றும் அடிப்படைவாத செயற்பாடுகளில் ஈடுபடும் 11 அமைப்புகளை அடையாளம் கண்டுள்ளதுடன் அவற்றை எதிர்காலத்தில் தடைசெய்ய நடவடிக்கையெடுக்கப்படும்.*

*இஸ்லாமிய கல்வி புத்தங்களில் உள்ள அடிப்படைவாத கல்வியை நீக்குவதற்கு நடவடிக்கையெடுத்துள்ளோம். 1ம் வகுப்பு முதல் 13ஆம் வகுப்பு வரையான பாடப் புத்தகங்கள் மற்றும் ஆசிரியர் கைப் புத்தங்களில் ஏனைய மதங்களுக்கு எதிராக கருத்துகளும் சகவாழ்வுக்கு எதிராக வாஹாபி மற்றும் சூபி கருத்துகள் சூட்சமாக உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றை நீக்க நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளன.*

*தேசிய பாதுகாப்புக்கு எதிர்காலத்தில் அச்சுறுத்தலாக மாறும் விடயங்களுக்கு எதிரான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தீர்மானங்களை எடுத்து வருகிறது. அதில் ஒரு செயற்பாடாக புர்கா அணிய தடை விதிக்கப்படும். முஸ்லிம் விவாக சட்டத்தை பொதுச் சட்டமாக மாற்றியமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.*

*அடிப்படைவாதச் செயற்பாடுகளுக்கு செல்பர்கள் தொடர்பில் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்ததும் அவர்களை உடனடியாக கைது செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களை புனர்வாழ்வுக்கு அனுப்பவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.*

*இந்த தாக்குதல்களுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புடைய அனைவருக்கும் அமைப்புகளுக்கும் எதிராக உச்சபட்ச தண்டனையை பெற்றுக்கொடுக்க நடவடிக்கையெடுக்கப்படும்.*

*அதேபோன்று உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகிவிட்டன என்றார்.*


www.nlb.lk

**09.03.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 749,893**

**பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 41,649,308.00**

**சுப்பர் பரிசு ரூ.13,161,528.00 01 ரூ. 1,000,000.00 பரிசு 02 ரூ. 100,000.00 பரிசுகள் 26**

NLB NATIONAL LOTTERIES

உத்தியோகபூர்வ முடிவுகள்



சீட்டிழுப்பு திகதி 09/03/2021 1581 சீட்டிழுப்பு இலக்கம்

சுப்பர் இலக்கம் 08 வெற்றி இலக்கங்கள் 10 39 42 59

| | | | |
|---|---|---|---|
| 1பரிசு | 4 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 500,000.00 | - |
| 2பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 20,000.00 | 10 |
| 3பரிசு | 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 1,000.00 | 132 |
| 4பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 200.00 | 401 |
| 5பரிசு | 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 100.00 | 5,498 |
| 6பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 60.00 | 4,756 |
| 7பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 66,757 |
| 8பரிசு | சுப்பர் இலக்கம் மாத்திரம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 16,127 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை

ரூ. 2,905,040.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சத்திக்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு

ரூ. 3,046,932.40

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

இல. 32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01.
Phone : 0114 607 000, 0112 324 324
Fax : 0114 663 416 Web : www.nlb.lk

கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள்

NLB NATIONAL LOTTERIES

சீட்டிழுப்பு இலக்கம் 2716 சீட்டிழுப்பு திகதி 09 / 03 / 2021

ஆங்கில எழுத்து P வெற்றி இலக்கங்கள் 16 21 24 36

| பரிசு கட்டமைப்பு | | பரிசுத்தொகை | வெற்றியாளரர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 08 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 180 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 408 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 10,132 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 6,626 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 166,604 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 30,586 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 214,545


இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை

ரூ. 7,790,040.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு

ரூ. 72,176,407.60

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சத்திக்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.



தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01
தொலைபேசி : 0114 607 000, 0112 324 324
Fax: 0114 663 416 Web: www.nlb.lk

தன நிதானய

உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி - 09/03/2021

சீட்டிழுப்பு இலக்கம் - 458

ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 02 21 24 76

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000,000.00 | 01 |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100,000.00 | 04 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 3,000.00 | 96 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000.00 | 211 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100.00 | 5,443 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா 60.00 | 3,638 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா 20.00 | 91,451 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா 20.00 | 17,299 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 4,836,580.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 118,143

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத்தொகை

ரூ. 86,936,991.60

- ரூபா. 5 இலட்சம் அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

Mega POWER மெகா பவர்

சீட்டிழுப்பு இலக்கம்: 785

உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 09.03.2021

ஆங்கில எழுத்து Z சுப்பர் இலக்கம் 09 வெற்றி இலக்கங்கள் 02 34 50 55

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 02 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 95 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 246 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 5,532 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 3,625 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 90,293 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 16,524 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு

ரூ. 121,493,402.80

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 20,938,204.80

அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 32,869,777.60

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை

ரூ. 3,252,540.00

தேசிய லொத்தர் சபை

சீட்டிழுப்பு இலக்கம் 4421 உத்தியோகபூர்வ முடிவுகள்

மஹஜன சம்பத

திகதி: 09-03-2021

வெற்றி எழுத்து L வெற்றி இலக்கங்கள் 8 2 7 1 0 5

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | L 8 2 7 1 0 5 | ரூபா. 13,161,528/- | 01 |
| 1ஆம் பரிசு | 8 2 7 1 0 5 | ரூபா. 2,000,000/- | - |
| 2ஆம் பரிசு | 2 7 1 0 5 | ரூபா. 100,000/- | 12 |
| 3ஆம் பரிசு | 7 1 0 5 | ரூபா. 10,000/- | 131 |
| 4 ஆம் பரிசு | 1 0 5 | ரூபா. 1,000/- | 1,293 |
| 5ஆம் பரிசு | 0 5 | ரூபா. 100/- | 12,937 |
| 6ஆம் பரிசு | 5 | ரூபா. 20/- | 127,631 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 8 2 7 1 0 | ரூபா. 10,000/- | 14 |
| 8ஆம் பரிசு | 8 2 7 1 | ரூபா. 1,000/- | 124 |
| 9ஆம் பரிசு | 8 2 7 | ரூபா. 100/- | 1,313 |
| 10ஆம் பரிசு | 8 2 | ரூபா. 50/- | 12,798 |
| 11ஆம் பரிசு | L | ரூபா. 20/- | 50,953 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 22,865,108.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை

32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.

www.nlb.lk

# சப்ரகமுவ மாகாணத்தில் 173 பேருக்கு ஆசிரியர் நியமனம்

__காவத்தை தினகரன் விசேட நிருபர்__

சப்ரகமுவ மாகாணத்தில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகள் 173 பேருக்கு ஆசிரியர் நியமனம் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது.

மேற்படி நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று(10) சப்ரகமுவ மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கல்வி அமைச்சின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட போட்டி பரீட்சையில் கூடிய புள்ளிகளை பெற்ற 105 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது.

அத்துடன் கடந்த வருடம் ஓகஸ்ட் 28ஆம் திகதி கோரப்பட்ட விண்ணப்பத்திற்கமைய அதில் சித்தி பெற்ற சிங்கள மொழி மூல பட்டதாரிகள் 39 பேர் கணித பாடத்திற்கான ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டதுடன் ஆங்கில பாடம் மற்றும் ஏனைய பாடங்களுக்கான பட்டதாரிகள் உட்பட மொத்தம் 173 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ,

மேற்படி நியமனம் பெற்ற ஆசிரியர்கள் தங்களின் நியமன கடிதத்தில் குறிப்பிட்டுள்ள பாடசாலையில் கட்டாயம் 5 வருடம் சேவையாற்ற வேண்டும்.



சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் ஆசிரியர் குறைப்பாடு காணப்படும் பாடசாலைகளுக்கே கூடுதலான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ருக்மணி ஆரியரத்ன உட்பட கல்வி அதிகாரிகள் அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# கலால் திணைக்கள அதிகாரிகள் மீது தாக்குதல்; மூவர் கைது

__அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்__

கஞ்சா வைத்திருந்த நபர் ஒருவரை கைது செய்ய சென்ற கலால் திணைக்கள உத்தியோகத்தர்கள் குழுவினரை தாக்கியதாக கூறப்படும் மூவரை கைது செய்துள்ளதாக பரசன்கஸ்வெவ பொலிசார் தெரிவித்தனர்.

பரசன்கஸ்வெவ பொலிஸ் பிரிவிலுள்ள கொப்பட்டியாவ பகுதியைச் சேர்ந்த 23, 24 மற்றும் 69 வயதுடைய மூவரே கைது செய்யப்பட்டுள்ளவர்களாவர்.

சந்தேக நபர்களிடமிருந்து 1100 மில்லி கிராம் கஞ்சாவையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

கலால் திணைக்கள கெப்பித்திகொல்லாவ அலுவலக உத்தியோகத்தர்கள் குழுவினர் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் நபரொருவரை கைது செய்வதற்காக கொப்பட்டியாவ பகுதிக்கு சென்று சந்தேக நபரை கைது செய்ய முயற்சித்த போது அருகிலிருந்த குழுவினர் கலால் உத்தியோகத்தர்களை தடியினால் தாக்கியுள்ளனர்.

இத்தாக்குதல் காரணமாக கலால் பரிசோதகர் மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் காயமடைந்துள்ளதுடன் அவர்கள் கெப்பித்திகொல்லாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் நேற்று முன்தினம் (09) அனுராதபுரம் நீதி மன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

# யாழ். காரைநகர் கடற்பரப்பில் 140 கிலோ கஞ்சா மீட்பு

__கோப்பாய் குறூப் நிருபர்__

யாழ்.காரைநகர் கடற்பரப்பில் கடற்படையினர் நேற்று (10) நடத்திய அதிரடி தேடுதல் நடவடிக்கையின்போது சுமார் 140 கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை கடற்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து சந்தேகத்திற்கிடமான படகு ஒன்றை அதிரடியாக சுற்றிவளைத்த கடற்படையினர்,படகில் சோதனை நடத்தியபோது சுமார் 140 கிலோ கஞ்சாவை மீட்டதுடன், கஞ்சாவை கடத்திவந்த இருவரை கைதுசெய்தனர்.



கைது செய்யப்பட்ட நபர் மற்றும் கைப்பற்றப்பட்ட கஞ்சா பொதிகள் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டனர்.


## திருத்தம்

எனது இலக்கம்:-EP/LD/09/4/6 ii

காணிஅமைச்சின் குறிப்பிலக்கம்:- J/63/64/E/296

**காணி எடுத்தல் சட்டத்தின் 7ஆவது பிரிவின் கீழான அறிவித்தல்**

காணி எடுத்தல் சட்டத்தின் கீழ் அரசு சுவீகரித்துள்ள கீழே குறிப்பிடப்படும் காணிக்காக அச்சட்டத்தின் 9 ஆவது பிரிவின் கீழ் உரிமை மற்றும் நஷ்டஈட்டுப் பரிசீலனை 2021.04.28ஆம் திகதி அல்பிட்டிய பிரதேச செயலகத்தில் என்னால் நடாத்தப்படும் என்பதை பொது மக்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு இத்தால் அறியத் தருகிறேன். இக்காணியில் உரிமைகள் மற்றும் தொடர்புகள் உள்ளவர்கள் சகலரும் பரிசீலனையின் போது சமுகமளித்தல் வேண்டும். மேலதிக விபரங்களுக்காக இல.2212 /15 உம் 2021.01.26ஆம் திகதி அதிவிஷேட வர்த்தமானியைப் பார்க்கவும்.

| | |
|---|---|
| மாவட்டம் | :- காலி |
| பிரதேச செயலாளர் பிரிவு | :- அல்பிட்டிய |
| சுவடு வரைபட இலக்கம் | :- அ.வ.ப.595 |
| துண்டிலக்கம் | :- 269 முதல் 276 வரை |
| காணியின் விசாலம் | :- 4 ஏக்கர், 8 பர்ஷஸ் |
| காணி அமைந்துள்ள கிராமம் | :- இந்திபலே கொடை |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | :- இல.30 B இந்திபலே கொடை |
| காணியின் பெயர் | :- |

திக்ஹேன பொல்லெவ்வ பன்ஸல அட்தரவத்த திக்ஹேன பொல்லெவ்வ, திக்ஹேன பொல்லெவ்வ மில்லகஹஹேன வத்தை, மில்லகஹஹேன வத்தை, மில்லகஹவத்த கெட்டிய

**பிரதேச செயலாளர்,**
**அல்பிட்டிய பிரிவு,**
**2021/02/25திகதி**
**அல்பிட்டிய பிரதேச செயலகத்தில்**



## காணி எடுத்தற் சட்டத்தின் (அத். 460) 33ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது இலக்கம் - உது/25/2/57**
**காணி அமைச்சின் இலக்கம் - 13/97/FR/246**

காணி மாவட்டத்தின் உடதும்பர பிரதேச செயலாளர் சுஜானி ஆர். விஜேதுங்க ஆகிய நான் காணி எடுத்தற் சட்டத்தின் (அத். 460) 33வது பிரிவின் கீழே குறிப்பிட்டுள்ள உப அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட நஷ்டஈட்டு தொகையாக ரூபாய் ஒன்பது இலட்சத்து அறுபத்து ஒன்றாயிரத்து ஐந்நூறு (ரூ. 961,500.00) உரிமையாளர்களுக்கு வழங்குவதற்காக தெல்தெனிய மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு எண் LAD 151/20 இன் கீழ் வரவு வைக்கப்பட்டுள்ளதை இதன் மூலம் உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

**பிரதேச செயலாளர்**
**உடதும்பர**

**2021.03.01 திகதி**

**உப அட்டவணை**

| | |
|---|---|
| காணியின் பெயர் | : கொபோநில்ல தோட்டம் |
| ஆரம்ப வரைபட இல. | : வீ.பீ. 504 க. 02 அதி. 02 |
| துண்டு இல. | : 118 2/3, 119, 120, 121 ½ |
| விஸ்தீரணம் | : 7.7862 ஹெக்டயார் |
| அமைவிடம் | : உடதும்பர பிரதேச செயலகப் பிரிவில் கங்தெக்க கோரளை சிறுபிரிவில் கரபகெடிய கிராமத்தில் அமைந்துள்ள கொபோநில்ல தோட்டம் எனும் காணி |


# தாழையடி ஸ்ரீ கருமுத்துமாரியம்மன் ஆலயத்தில் சிவராத்திரி

__உடப்பு குறூப் நிருபர்__

உடப்பூர் சின்னக்கொளனி தாழையடி அருள்மிகு ஸ்ரீ கருமுத்துமாரியம்மன் ஆலய வருடாந்த மஹா சிவராத்திரி பெருவிழா நேற்று (10)திகதி புதன்கிழமை காலை 9மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகியது. நேற்று ஆலயத்திலிருந்து அம்பாள் வீதி உலா உடப்பு வரை சென்று வந்தது. தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெறும் இந்த நிகழ்வில் இன்று 11திகதி வியாழக்கிழமை காலை 9மணிக்கு அம்பாளுக்கு 108 சங்காபிஷேகம், மாலை 7 மணிக்கு அருகிலுள்ள இந்து சமுத்திரத்தில் தெப்போற்சவம் நடைபெறும்.

தொடர்ந்து நான்கு சாம சிறப்புபூஜைகளும் இடம்பெறும். நாளை 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30மணிக்கு சமுத்திரத்தில் தீர்த்தோற்சவம் இடம்பெறுவதோடு, மாலை 6 மணிக்கு ஆலய முன்றலில் பொங்கல் விழா இடம்பெறும்.13ஆம் திகதி சனிக்கிழமை வைரவர் மடை பூஜையுடன் விழா இனிது நிறைவடையும்.

# சி.ஐ.டி விசாரணை; எதிர்ப்பு தெரிவித்து சபை அமர்வில் கண்டனம்

__பரந்தன் குறூப் நிருபர்__

கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் செல்வநாயகத்தை பயங்கரவாத தடுப்பு பிரிவினர் விசாரணைக்காக அழைத்துள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்து சபை அமர்வை 5 நிமிடங்கள் ஒத்தி வைத்து சபைக்குள் தங்கள் வாயை கறுப்புத் துணியால் கட்டி உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ் மக்களின் மக்கள் பிரதிநிதியை மீள விசாரணைக்கு அழைக்கப்படுவதென்பது மக்கள் பிரதிநிதிகள் மக்களோடு சேர்ந்து பயணிக்க அச்சம் கொள்ள வைக்கிறது என உறுப்பினர்கள் தெரிவித்தனர்.


SO SRI LANKA

**இலங்கை சம்மேளன பணியகம்**
**சுற்றுலாத்துறை அமைச்சு**

**விலைமனுக்கோரல்**

| | |
|---|---|
| திகதி : | **10.03.2021** |
| விபரம் : | இலங்கை சுற்றுலா துறையின் 2021-2025 ற்கான உலகளாவிய தொடர்பாடல் பிரசாரங்களுக்கான டிஜிட்டல் சந்தப்படுத்தல் நிறுவனத்தை தெரிவு செய்தல் |
| மனு இல : | **SLTPB/GCC/2021/003** |

**2021.02.16** ஆம் திகதி "தினமின" "டெய்லி மிரர்" மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகைகளில் மற்றும் **2021.02.17** ஆம் திகதி "டெய்லி நியூஸ்" பத்திரிகை விளம்பரத்தில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள செயற்திட்டத்திற்கான மனுக்கோரலுக்கான கால எல்லை **2021.03.31 ஆம் திகதி பி.ப.3.00** மணி வரை நீடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**தலைவர்**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்முதல் குழு**
**இலங்கை சம்மேளன பணியகம்**
**இல.80, காலி வீதி, கொழும்பு 03**
**இலங்கை**


# கிளிநொச்சி; விபத்தில் இளைஞன் பலி

__(பரந்தன் குறூப் நிருபர்)__

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் நேற்று பகல்இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புதுக்குடியிருப்பிலிருந்து பரந்தன் நோக்கி ஒரே திசையில் பயணித்துக்கொண்டிருந்த கனரக வாகனத்துடன், மோட்டார் சைக்கிள் மோதிக்கொண்டதில் இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் ஸ்தலத்தில் உயிரிழந்தார்.

கனரக வாகனத்தை முந்திச்செல்ல முற்பட்டபோதே இவ்விபத்து இடம்பெற்றதாக சம்பவத்தை அவதானித்தவர்கள் தெரிவிக்கின்றனர். விசுவமடு பகுதியை சேர்ந்த 20 வயது குணராஜா ஜெனோயன் என்ற இளைஞரே உயிரிழந்துள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.


## ஆப்பிகோ பினான்ஸ் கோ. பி.எல்.சி

**பிரமாண்டமான ஏல விற்பனை**

ARPICO FINANCE COMPANY PLC

**39, டீசல் மற்றும் பெட்ரோல் மோட்டார் வாகனங்கள்**
**2021 மார்ச் 22ம் திகதி திங்கட்கிழமை**
**அன்று எமது**
**இல.17/1, பின்ஹென ஜங்ஷன், ஹொரண வீதி, கொட்டாவ வாகன சாலையில்**
**காலை 10.00 மணிக்கு நடைபெறும்.**

உள்ளடக்கங்கள்

**கார்கள்**

| | | | |
|---|---|---|---|
| NCGE-78XX | MAZDA | FAMILIA | 1997 |
| CPCAV-30XX | HONDA | VEZEL | 2016 |
| CPCBA-12XX | SUZUKI | DAA-MK42S | 2015 |
| NWKA90XX | CHEVROLET | CRUZE | 2003 |
| NWKS20XX | TOYOTA | PRIUS | 2009 |
| NWKU05XX | TOYOTA | UA-NZT260 | 2008 |
| SGCBB-45XX | SUZUKI | SPACIA | 2018 |
| SPCAD-99XX | HONDA | CR-Z | 2011 |
| SPCAR-53XX | TOYOTA | PRIUS | 2016 |
| SPCAX-44XX | NISSAN | CLIPPER | 2015 |
| SPCBE-24XX | SUZUKI | WAGONR | 2018 |
| SPKB-95XX | NISSAN | MARCH | 2003 |
| SPKX-68XX | TOYOTA | PRIUS | 2012 |
| WPCAA-36XX | HONDA | HONDAFIT | 2012 |
| WPCAA-52XX | BMW | 520D | 2013 |
| WPCAX-31XX | SUZUKI | SPACIA | 2015 |
| WPCAZ93XX | HONDA | NWAGON | 2015 |
| WPCAZ-01XX | SUZUKI | DAA-MR41SHUSTLER | 2015 |
| WPCBB-09XX | SUZUKI | WAGONR | 2017 |
| WPCBB-93XX | SUZUKI | WAGONR | 2018 |
| WPCBC-27XX | SUZUKI | WAGONR | 2018 |
| WPEA-01XX | TOYOTA | | 1996 |
| WPKN-14XX | TOYOTA | PRIUS | 2010 |

**முச்சக்கரவண்டிகள்**

| | | | |
|---|---|---|---|
| SP ABF-25XX | BAJAJ | RE | 2015 |
| NC AAU-60XX | BAJAJ | RE | 2014 |
| WP ABI 07XX | BAJAJ | RE | 2015 |
| WP QQ-52XX | BAJAJ | RE | 2008 |
| WP YK 92XX | BAJAJ | RE | 2011 |

**ட்ரக்டர்**

| | | | |
|---|---|---|---|
| NW RF - 46XX | MASSEY FERGUSON | 135 | 2017 |
| NW RF 48XX | MASSEY FERGUSON | FERGUSON | 2017 |

**வேன்கள்**

| | | | |
|---|---|---|---|
| 253-88XX | MAZDA | BONGO | 1995 |
| CP JB 84XX | TOYOTA | DOLPHINE | 1999 |
| WP PJ - 97XX | NISSAN | LDF-JVWE25 | 2012 |

**பஸ்**

| | | | |
|---|---|---|---|
| WP NC-84XX | TATA | MARCOPLO | 2016 |

**லொறி**

| | | | |
|---|---|---|---|
| NC PG-16XX | DFSK | Eq1020 | 2015 |
| NC PQ-61XX | TATA | ACE | 2011 |
| NC PR -56XX | TATA | ACE | 2011 |
| SP PS-63XX | DFSK | UNIMO LOKKA | 2011 |
| WP LD 85XX | JAC | HFC1040K | 2007 |

**2021 மார்ச் 18 மற்றும் 19ம் திகதிகளில் ஏலம் நடைபெறும் இடத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 வரை பார்வையிடலாம்.**
**(ஏலம் நடைபெறும் திகதியன்று வாகனங்களை பார்வையிட முடியாது)**

**0719 91 9 986 / 0712 591 067**

விற்பனை நிபந்தனைகள்
- நுழைவு : **மீள் செலுத்தப்படாத** நுழைவுக் கட்டணம் ஏல நாட்களில் ஒவ்வொரு நபருக்கும் ரூபா. 2000.00
- கட்டணம் : **மீள் செலுத்தப்படாத** ஆரம்ப வைப்பு 25% காசு சுத்தியல் அடித்தவுடன் செலுத்தப்பட வேண்டும் மிகுதி 75% **2021 மார்ச் 26ம் திகதி வெள்ளிக்கிழமை** மாலை 3.00 மணிக்கு முன் இல. 146, ஹெவலொக் வீதி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05 இல் உள்ள ஆப்பிகோ பினான்ஸ் கோ. பி எல் சி இல் செலுத்தி வாகனங்களை அகற்றல் வேண்டும்.
- முன்னறிவித்தலுமின்றி எந்தவொரு வாகனத்தையும் ஏலத்திலிருந்து அகற்றுவதற்கு முகாமைத்துவத்திற்கு உரிமையுண்டு
- ஏலதாரின் முடிவே இறுதியானது

*நிபந்தனைக்குட்பட்டது

**விசேட குறிப்பு:** நடைமுறையிலுள்ள COVID 19 தொற்றுநோய் காரணமாக அரசாங்கத்தினால் பிரபிக்கப்பட்ட கடுமையான சுகாதார மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட விதிகளிற்கமைய முதலில் வரும் 100 நபர்கள் மட்டும் ஏல வளாகத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படுவார்கள் என்பதை நினைவில் கொள்ளவும்.

Estd.1951 PQ 92

தலைமை அலுவலகம்
**ஆப்பிகோ பினான்ஸ் கோ. பி.எல்.சி**
146, ஹெவலொக் வீதி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05.
தொடர்புகளுக்கு: 0115 553663



## 2021ஆம் ஆண்டில் சபைக்கு உரித்தான ஆதனங்களைக் குத்தகைக்கு விடுதல்

### பொது வர்த்தகத் தொகுதி

### பொல்பித்திகம பிரதேச சபை

பின்வரும் அட்டவணையில குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்களை 2021ஆம் ஆண்டில் குத்தகைக்கு விடுவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள், இப்பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து என்னால் ஏற்றுக்கொள்ளப்படும் எக்காரணம் கொண்டு இந்நேரத்தின் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

விலைமனுப்படிவங்கள் வழங்கப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம் 2021.03.22 பி.ப. 02.30

விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம் 2021.03.23 மு.ப. 10.00

விலைமனுத் திறக்கப்படும் இறுதி திகதி மற்றும் நேரம் 2021.03.23 மு.ப. 11.00

எம்மால் வழங்கப்படும் விலைமனுப் படிவங்கள் இரண்டையும் பூரணப்படுத்தி தனித்தனி இரண்டு உறைகளில் சேர்த்துப் பதிவுத்தபாலில், 'தலைவர், பிரதேச சபை, பொல்பித்திகம' என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் என்பதுடன், அவ்வுறைகளின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் ஆதனத்தின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். விலைமனுக்களை நேரடியாக ஒப்படைக்க நாடினால், இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியிற் சேர்க்கலாம். விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொண்டு, விலைமனுக்களைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர்களினதும் மற்றும் ஆகக் குறைந்த கேள்வியிலும் குறைந்த விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் அல்லது பெறுகை நிபந்தனைகளை மீறிய விலைமனுதாரர்களினதும் விலைமனுப் பிணையம் சபைக்கு உரித்தாக்கப்படும்.

அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள், ரொக்கப்பணமாக மாத்திரம் சபைக்குச் செலுத்தி விலைமனுப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாமென்பதுடன், மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் நேரடியாக அல்லது 037-2273135 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

| ஆதனங்களின் விபரம் | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் ரூபா | விஸ்தீரணம் (நீளம்x அகலம்) ச.மீ. | விலைமனுத் தொகை ரூபா | 2021 இன் ஆகக் குறைந்த குத்தகைக் கேள்வி ரூபா |
|---|---|---|---|---|
| வர்த்தகத் தொகுதி வகுதி 01 | 2000.00 | 2730.0 | 10000.00 | 125000.00 |
| வர்த்தகத் தொகுதி - வகுதி 02 | 2000.00 | 253.66 | 2000.00 | 20000.00 |

**குறிப்பு:**

கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் தொடர்பான, இறுதித்தீர்மானம் பெறுகைக் குழுவிற்கு உரித்தாகும்.

**எல்.ஆர். ரன்ஜித் விஜேநாயக்க,**
**தலைவர்**
**பிரதேச சபை,**
**பொல்பித்திகம.**

**2021.03.08ம் திகதி**
**பொல்பித்திகம பிரதேச சபை அலுவலகத்தில்**

# சிறு விளம்பரம்






117

**வேன்கள்**

**விற்பனைக்கு**

583540 MAZDA Browny 1991, வேன் கூடிய விலை க்கே ள்விக்கு. வெலிபல் ஃபினான்ஸ் பிஎல்சி, இல.310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714 5429 58 018921






320

**வெற்றிடங்கள்**

**ஹோட்டல்கள், பேக்கரிகள்**

COOK தங்கொடுவையில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு தங்கி வேலை செய்யக்கூடிய (30 நபர்களுக்கு) இந்திய உணவு வகைகள் சமைக்கக் கூடிய சமையற்காரர் உடனடியாக தேவை. நேரில் வரவும். இல. 18, வெளி அமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொடர்பு களுக்கு 076 6200300 019012

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) பிரிவின் விதிகளுக்கமைய அறிவித்தல் இத்தால் விடுக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**ப்ரீமியம் கிரீன் சோலார் (பீவீடி) எல்டிடி**

பதிவு அலுவலகம்:
**இல.48, 27ஆம் ஒழுங்கை, கொழும்பு - 03**

கூட்டிணைப்புத் திகதி:
**02.03.2021**

பதிவு இலக்கம்
**PV 00235775**

## பகிரங்க ஏல விற்பனை

சொ.்.ப்ட்லொஜிக் ்.பினான்ஸ் பீ.எல்.சி. நிறுவனத்தில் அடகு வைக்கப்பட்டு, உரிய காலத்தில் மீட்கப்படாத தங்க நகைகள் எமது **இல.85, கொலன்னாவை வீதி, தெமட்டகொடை, கொழும்பு 09,** என்ற இலக்கத்தில் அமைந்துள்ள நிலையத்தில் **2021 மார்ச் மாதம் 26ஆம் திகதி காலை 9.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை** ஏலத்தில் விற்கப்படும்.

### எமது தங்கக் கடன் நிலையங்கள்

- பொரளை
- தெமட்டகொடை
- காலி
- கம்பஹா
- கிராண்பாஸ்
- கடவத்தை
- களுத்துறை
- கொச்சிக்கடை
- கொட்டாஞ்சேனை
- கொட்டாவ
- மாத்தறை
- நீர்கொழும்பு
- திஸ்ஸமஹாராம
- இரத்தினபுரி
- வெளிசும
- வத்தளை
- ஹெட்டன்
- கண்டி
- பதுளை
- மாவனெள்ள
- சிலாபம்
- குருநாகல
- அனுராதபுரம்
- சுன்னாகம்
- தம்புள்ள
- எம்பிளிபிட்டிய
- யாழ்ப்பாணம்
- மாத்தளை
- நுவரெலிய
- பொலன்னறுவை
- பம்பலபிட்டிய

இவ் ஏல விற்பனையை முன்னறிவித்தலின்றி இரத்துச் செய்யும் அல்லது பிற்போடும் உரிமை இந்நிறுவனத்திற்கே உரியதாகும்.

## காணி எடுத்தற் சட்டத்தின் (அத். 460) 33ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது இலக்கம் - உது/2/2/10/101**
**காணி அமைச்சின் இலக்கம் - 13/97/FR/114**

காணி மாவட்டத்தின் உடதும்பர பிரதேச செயலாளர் சுஜானி ஆர். விஜேதுங்க ஆகிய நான் காணி எடுத்தற் சட்டத்தின் (அத். 460) 33வது பிரிவின் கீழே குறிப்பிட்டுள்ள உப அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட நஷ்டஈட்டு தொகையாக ரூபா ஆயிரம் (1000.00) உரிமையாளர்களுக்கு வழங்குவதற்காக தெல்தெனிய மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு எண் LAD 152/20 இன் கீழ் வரவு வைக்கப்பட்டுள்ளதை இதன் மூலம் உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

**பிரதேச செயலாளர்**
**உடதும்பர**

**2021.03.01 திகதி**

**உப அட்டவணை**

காணியின் பெயர் : வின்ச்பூல்ட் பார்க் தோட்டம்
ஆரம்ப வரைபட இல. : அ.க.பி. 5720
துண்டு இல. : 1
விஸ்தீரணம் : 1.9501 ஹெக்டயார்
அமைவிடம் : உடதும்பர பிரதேச செயலகப் பிரிவில் கங்தெக்க கோரளை சிறுபிரிவில் கரபகெடிய கிராமத்தில் அமைந்துள்ள வின்ச்பூல்ட் பார்க் தோட்டம் எனும் காணி

## காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

லக்கல பிரதேச செயலாளரின் குறிப்பு இல: 11/3/3/1/13E

காணி அமைச்சின் குறிப்பு இல: LD/05/2009/MV/177

இங்கு கீழே காட்டப்பட்டிருக்கும் அட்டவணையில் விபரிக்கப்படும் காணியை மொரகஹகந்த களுகங்கை அபிவிருத்தித் திட்டத்திற்காக எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள். மேலதிக விபரங்களுக்கு இலக்கம் 2214/72 கொண்ட 2021.02.12 திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு அதிவிஷேட வர்த்தமானியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

மாவட்டம் : மாத்தளை
பிரதேச செயலகப்பிரிவு : லக்கல
கிராம அலுவலர் பிரிவு : இல.E 397 E குருவெல பிரிவு
கிராமம் : குருவெல (குறிப்பிட்ட ஆரம்ப வரைபடத்திற்கு இணங்க)
காணியின் பெயர் : மேற்குறித்த இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின்படி
வரைபட இலக்கம் : பி.ஆ.வ.13 குறைநிரப்பி 137 பத்திர இல.303
விஸ்தீரணம் : 2.5497 ஹெக்டயார்
துண்டு இலக்கம் : 10921, 10924, 10925, 10926.

**எஸ்.விஜயகுமார்**
**பிரதேச செயலாளர்,**
**லக்கல.**

**2021.02.23ஆம் திகதி**
**லக்கல பிரதேச செயலகத்தில்**

## காணி எடுத்தற் சட்டத்தின் (அத். 460) 33ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது இலக்கம் - உது/2/2/10/97**
**காணி அமைச்சின் இலக்கம் - 13/97/FR/319**

காணி மாவட்டத்தின் உடதும்பர பிரதேச செயலாளர் சுஜானி ஆர். விஜேதுங்க ஆகிய நான் காணி எடுத்தற் சட்டத்தின் (அத். 460) 33வது பிரிவின் கீழே குறிப்பிட்டுள்ள உப அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட நஷ்டஈட்டு தொகையாக ரூபா ஆயிரம் (1000.00) உரிமைாளர்களுக்கு வழங்குவதற்காக தெல்தெனிய மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு எண் LAD 114/18 இன் கீழ் வரவு வைக்கப்பட்டுள்ளதை இதன் மூலம் உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

**பிரதேச செயலாளர்**
**உடதும்பர**

**2021.03.01 திகதி**

**உப அட்டவணை**

காணியின் பெயர் : வின்ச்பூல்ட் பார்க் தோட்டம்
ஆரம்ப வரைபட இல. : அ.க.பி. 5693
துண்டு இல. : 1
விஸ்தீரணம் : 0.8775 ஹெக்டயார்
அமைவிடம் : உடதும்பர பிரதேச செயலகப் பிரிவில் கங்தெக்க கோரளை சிறுபிரிவில் கரபகெடிய கிராமத்தில் அமைந்துள்ள வின்ச்பூல்ட் பார்க் தோட்டம் எனும் காணி

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

## பெயர் மாற்றம்

மரைக்கார் தீவு, மறிச்சிக் கட்டி, சிலாபத்துறை, மன்னார் எனும் முகவரியில் வதியும் நான் எனது பிறப்பு சான்றிதழில் காணப்படும் றுக்கியா உம்மா என்ற எனது பெயரை ஆசியா உம்மா என பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத் தருகிறேன்.

**ஆசியா உம்மா**

## பொது அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(2)ஆம் பிரிவின் கீழ், இத்தால் அறிவிப்பு விடுக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**குவான்டிட்டி சேவயர் ஃபோர் குவான்டிட்டி சேவயர்ஸ் (பிறைவட்) லிமிட்டட்**

பதிவிலக்கம்: **PV 00234807**

பதிவு அலுவலகம்:
**இல.44/48 ஶ்ரீ இந்திரஜோதி வீதி, இரத்மலானை**

கூட்டிணைப்புத் திகதி:
**13 பெப்ரவரி 2021**

## அற்றோர்ணித்தத்துவத்தை இல்லாதொழித்தல்

ஹொங்கொங் விஷேட நிருவாக மக்கள் சீன குடியரசு கடவுச்சீட்டு இல.: கேஜே 0733457 என்பதன் உரிமையாளரான யு சா அன் என்பவருக்கு 2019 ஏப்ரல் 09 ஆம் திகதியிடப்பட்டு டோஹா கட்டார் இலங்கை தூதுவராலய இலங்கை தூதுவரின் உடனிருப்பவரின் (attache) முன்னால் 2019.05.20 ஆம் திகதியன்று நிறைவேற்றப்பட்டு 2019.06.04 ஆம் திகதியன்று பத்தரமுல்ல, பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தில் எழுத்துமூல அதிகாரம் பெற்ற அலுவலர்களினால் பேணப்படும் 275 ஆம் பாகம், 99 ஆம் பக்கத்தில் 8806 என்ற இலக்கமுடைய நாட் புத்தகத்தில் பதியப்பட்டு என்னால் வழங்கப்பட்ட அற்றோர்ணித்தத்துவமானது 2020 ஒக்ரோபர் 6 ஆம் நாளிலிருந்து செயல்படும் வகையில் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதுடன் எமது அற்றோர்ணித் தத்துவக்காரராக அவரின் நிலையில் மேற்கூறப்பட்ட யு சா அன் என்பவரினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கை அல்லது செயற்பாட்டிற்கும் நாம் பொறுப்பேற்க மாட்டோமென டோஹா கட்டார், த.பெ. இல. 22550, கட்டார் விமானசேவை குழுமத்தின் அக்பார் அல் பாக்கர் ஆகிய நான் இலங்கை சனநாயக குடியரசின் பொது மக்களுக்கு இத்தால் தெரிவிக்கின்றேன்.

**அக்பார் அல் பாக்கர்**

# நகர அபிவிருத்தி, கரையோரம் பேணல், கழிவு அகற்றல் மற்றும் சமூக தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு

## விலைமனுக்களுக்கான அழைப்பு

கீழே விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காக நகர அபிவிருத்தி, கரையோரம் பேணல், கழிவு அகற்றல் மற்றும் சமூக தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் செயலாளரின் சார்பாக, தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் இப்போது கோருகின்றார்.

**01 ஆம் அட்டவணை**

| விலைமனு இல. | செயற்றிட்டப் பெயர் | பெசேவ நீங்கலாக நிர்மாணத் திற்கான மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவு (ரூபாவில் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபாவில்) | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | ஒப்பந்தக் காலப்பகுதி (நாட்களில்) | தகுதியுள்ள CIDA பதிவுத் தரம் | விலைமனுப் பிணை செல்லுபடி யாகும் காலம் (வரையும்) |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | மினுவாங்கொடயில் உத்தேசிக்கப்பட்டுள்ள பொதுச் சந்தையின் நிர்மாணம் (II ஆம் கட்டம்) (மீதி வேலை) | 81,623,000.00 | 17,000.00 | 820,000.00 | 180 | கட்டிடத்திற்காக சி-4 அல்லது மேற்பட்டது | 2021 ஜூலை 28 ஆம் திகதி வரையும். |
| 02. | அளவ்வயில் உத்தேசிக்கப்பட்டுள்ள வாராந்த சந்தை | 123,758,500.00 | 23,000.00 | 1,250,000.00 | 36 | கட்டிடத்திற்காக சி-4 அல்லது மேற்பட்டது. | 2021 ஜூலை 28 ஆம் திகதி வரையும். |
| 03. | அம்பலந்தொட்ட, பறவகும்புக்கயில் உத்தேசிக்கப்பட்டுள்ள சிறிய பஸ் நிலையம். | 50,276,000.00 | 12,500.00 | 550,000.00 | 150 | கட்டிடத்திற்காக சி-4 அல்லது மேற்பட்டது | 2021 ஜூலை 28 ஆம் திகதி வரையும் |
| 04. | ஹஸ்லக்கவில் பஸ் நிலையத்தின் மீள் அபிவிருத்தி (II ஆம் கட்டம்) | 21,428,000.00 | 6,000.00 | 215,000.00 | 150 | கட்டிடத்திற்காக சி-6 அல்லது மேற்பட்டது | 2021 ஜூலை 14 ஆம் திகதி வரையும் |
| 05. | தலதா மாளிகையில் மஹாமலுவ அபிவிருத்தி செயற்றிட்டம் - II ஆம் கட்டம் | 13,832, 000.00 | 4,000.00 | 140,000.00 | 90 | கட்டிடத்திற்காக சி-6 அல்லது மேற்பட்டது | 2021 ஜூலை 06 ஆம் திகதி வரையும் |
| 06. | காலி, கராபிட்டியவில் தற்காலிக கடைகளை இன்னொரு இடத்தில் மீளமைத்தல் | 9,731,800.00 | 3,500.00 | 100,000.00 | 90 | கட்டிடத்திற்காக சி-7 அல்லது மேற்பட்டது | 2021 ஜூலை 06 ஆம் திகதி வரையும். |
| 07. | நுவரெலியவில் உத்தேசிக்கப்பட்டுள்ள மத்திய சந்தை கட்டிடம் - II ஆம் கட்டம் (தரை மாடியின் நிர்மாணம் மற்றும் தரைகீழ் மாடியில் மெருகூட்டல் வேலை) | 205,000,000.00 | 35,000.00 | 3,000,000.00 | 365 | கட்டிடத்திற்காக சி-3 அல்லது மேற்பட்டது | 2021 ஜூலை 28 ஆம் திகதி வரையும். |
| 08. | ஹங்வெல்லயில் உத்தேசிக்கப்பட்டுள்ள பஸ் நிலையம் | 83,574,000.00 | 17,000.00 | 850,000.00 | 210 | கட்டிடத்திற்காக சி-4 அல்லது மேற்பட்டது | 2021 ஜூலை 28 ஆம் திகதி வரையும். |
| 09. | மாதம்பயில் உத்தேசிக்கப்பட்ட வாரச் சந்தையின் நிர்மாணம் | 67,206,000.00 | 15,000.00 | 675,000.00 | 150 | கட்டிடத்திற்காக சி-4 அல்லது மேற்பட்டது | 2021 ஜூலை 28 ஆம் திகதி வரையும். |
| 10. | கெஸ்பேவ வெவவின் காணிச்சீரமைப்பு மேம்படுத்தல். | 54,121,000.00 | 15,000.00 | 550,000.00 | 150 | கட்டிடத்திற்காக சி-4 அல்லது மேற்பட்டது | 2021 ஜூலை 28 ஆம் திகதி வரையும். |

1. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் முறைமை மூலம் நடாத்தப்படும்.
2. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை பத்தரமுல்ல, ''சுஹுருபாய'', 17 ஆம் மாடி, நகர அபிவிருத்தி, கரையோர பாதுகாப்பு, கழிவு அகற்றல் மற்றும் சமூக தூய்மைப்படுத்தலுக்கான பணிப்பாளர் நாயகத்திடமிருந்து (நகர அபிவிருத்தி) பெற்று விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக நகர அபிவிருத்திக்கான பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் வேலை நாட்களில் பரீட்சிக்கலாம். தொலைபேசி இலக்கம்: 0112-869515.
4. நகர அபிவிருத்தி, கரையோர பாதுகாப்பு, கழிவு அகற்றல் மற்றும் சமூக தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் நிதிப் பிரிவின் சிறாப்பரிடம் மேலேயுள்ள 01 ஆம் அட்டவணையில் குறிப்பிட்டவாறான மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் செலுத்திய பின்னர், பத்தரமுல்ல, ''சுஹுருபாய'', 17 ஆம் மாடியின் நகர அபிவிருத்தி, கடலோர பாதுகாப்பு, கழிவு அகற்றல் மற்றும் சமூக தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் செயற்றிட்டங்கள் மற்றும் பெறுகைக்கான பிரதான கணக்காளருக்கு (02 ஆம் அட்டவணையில் திகதி மற்றும் நேரம் ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன) எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று எந்தவொரு வளமுள்ள விலைமனுதாரர் அல்லது அவர்களின் தரஅங்கீகாரம் பெற்ற முகவரினால் கொள்வனவு செய்யப்படலாம்.

**02 ஆம் அட்டவணை - விலைமனுக்களை வழங்கல்.**

| 01 ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விலைமனு இல. | இலிருந்து | வரையும் | நேரம் |
|---|---|---|---|
| 5,6 | 2021.03.10 | 2021.03.23 | மு.ப. 9 இலிருந்து பி.ப. 3 வரையும் |
| 1,2,3,4,7,8,9,10 | 2021.03.10 | 2021.03.30 | மு.ப. 9 இலிருந்து பி.ப. 3 வரையும |

5. விலைமனுவொன்று, விலைமனுக்கோரல் ஆவணங்களின் பிரகாரமான உருமாதிரியில் இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட வங்கி உத்தரவாத முறையிலமைந்த விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணைகளின் பெறுமதியானது 01 ஆம் அட்டவணையில் கூறப்பட்டிருப்பதுடன் செயலாளர், நகர அபிவிருத்தி, கரையோர பாதுகாப்பு,கழிவு அகற்றல் மற்றும் சமூக தூய்மையாக்கலுக்கான இராஜாங்க அமைச்சு என முகவரியிடப்படல் வேண்டும்.
6. 03 ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள திகதி மற்றும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென செயலாளர், நகர அபிவிருத்தி, கரையோர பாதுகாப்பு, கழிவு அகற்றல் மற்றும் சமூக தூய்மையாக்கல் இராஜாங்க அமைச்சு, 17 ஆம் மாடி, ''சுஹுருபாய'', சுபுதிபுர வீதி, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு நேரடியாகவே ஒப்படைக்கப்படலாம் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

**03 ஆம் அட்டவணை**

| 01 ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விலைமனு இல. | விலைமனு மூடும் திகதி | விலைமனு மூடும் நேரம் |
|---|---|---|
| 5,6 | 2021.03.24 | மு.ப. 10 மணிக்கு |
| 1,2,3,4,7,8,9,10 | 2021.03.31 | மு.ப. 10 மணிக்கு |

7. 2021.03.17 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு பத்தரமுல்ல, சுபுதிபுர வீதி, ''சுஹுருபாய'', 17 ஆம் மாடி, நகர அபிவிருத்தி, கரையோர பாதுகாப்பு, கழிவு அகற்றல் மற்றும் சமூக தூய்மையாக்கல் இராஜாங்க அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறும். அனைத்து விலைமனுதாரர்களும் இக்கூட்டத்திற்கு சமூகமளிக்குமாறு கண்டிப்பாக அறிவுரை வழங்கப்படுகின்றனர்.
8. விலைமனுதாரர்களை தெரிவு செய்தலில் அவர்களின் முன்னைய செயற்பாடு மற்றும் திரவநிலை (அமைச்சு மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்கள்) ஆகியன தீவிரமாக மதிப்பீடு செய்யப்படும். செயற்பாடு குறைவாகவுள்ள விலைமனுதாரர்கள் எந்தவொரு விலைமனுவையும் வழங்குவதற்கு பரிசீலனை செய்யப்பட மாட்டார்கள்.
9. எதேனும் விலைமனுக்களை தயாரித்தல் தொடர்பான ஆகுசெலவிற்கு அமைச்சானது பொறுப்பேற்க மாட்டாது. பெற்றுக் கொண்ட விலைமனுக்களில் பொருத்தமானதொரு விலைமனுவை ஏற்றுக் கொள்வதற்கானதும் அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான உரிமையை அமைச்சு பெறுகைக் குழுவானது கொண்டுள்ளது. அமைச்சு பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.
10. தற்போது நிலவும் கோவிட்-19 தொற்று காரணமாக, உரித்தான விலைமனுக்கோரல் ஆவணங்களை கையேற்பதற்கு முன்னராக உங்களின் நன்மைக்காக 0112-869536/ 0114-329822 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாகவும் 011-2861810 என்ற தொலைநகல் இலக்கத்தினூடாகவும் நகர அபிவிருத்தி, கரையோர பாதுகாப்பு, கழிவு அகற்றல் மற்றும் சமூக தூய்மையாக்கல் இராஜாங்க அமைச்சின் கணக்காளருடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**நகர அபிவிருத்தி, கரையோர பாதுகாப்பு, கழிவு அகற்றல் மற்றும்**
**சமூக தூய்மையாக்கல் இராஜாங்க அமைச்சு,**
**17 ஆம் மாடி, ''சுஹுருபாய'', பத்தரமுல்ல.**

# யட்டியன்தொட்ட பிரதேச சபை

## பெறுகை அறிவித்தல்

யட்டியன்தொட்ட நகர மத்தியில் அமைந்துள்ள யட்டியன்தொட்ட பிரதேச சபைக்குச் சொந்தமான புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புறநெகும விற்பனை தொகுதியில் கீழே விபரிக்கப்படும் இடங்களில் நீண்டகால குத்தகைக்கு விடுவதற்காக யட்டியன்தொட்ட பிரதேச சபையின் தலைவரால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| சொத்து விபரம் | சதுர அடி | வியாபாரம் | மாதாந்த வாடகை | குறைந்த பட்ச கேள்வி | மீளளிக்கப் படாத படிவக் கட்டணம் | மீளளிக்கப் படும் வைப்புத் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 5 கடை அறை (தரைமாடி) | 310 | துணிமணிகள் பாதனிகள், காகிதாதிகள், மின் உபகரணம், சில்லறை வியாபாரம், அலங்கார பொருட்கள், ஆடையணிகள், ஆலோசனை சேவை, வங்கி அல்லது நிதிசேவை, மோட்டார் வாகன அல்லது உதிரிப் பாகங்கள், கணனி சார்ந்தவை (இறைச்சி, மீன் அல்லது ஆயுதங்கள் தவிர்ந்தவை) | 12500.00 | 1500000.00 | 1000.00 | 5000.00 |
| 2 கடை அறை (கீழ் மாடி) | 225 | | 9000.00 | 1080000.00 | 1000.00 | 5000.00 |
| 3 கடை அறை (கீழ் மாடி) | 225 | | 9000.00 | 1080000.00 | 1000.00 | 5000.00 |
| 4 கடை அறை (கீழ் மாடி) | 225 | | 9000.00 | 1080000.00 | 1000.00 | 5000.00 |

02. கேள்வி ஆவணங்கள் மற்றும் கேள்வி நிபந்தனைகள் உள்ளடங்கிய ஆவணங்கள், மீளளிக்கப்படும் வைப்புத்தொகை மற்றும் மீளளிக்கப்படாத படிவக் கட்டணத்தை செலுத்தி, 2021.03.15 மு.ப.10.00 முதல் 2021.04.05 மு.ப.10.00 வரை அலுவலக நேரங்களில் யட்டியன்தொட்ட பிரதேச சபையின் செயலாளரிடம் யட்டின்தொட்ட பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
03. கேள்வி நிபந்தனைகளில் குறிப்பிடப்படும் விதத்தில் தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்கள் 2021.04.06 மு.ப.10.00 மணிக்கு முன் கிடைக்குமாறு தலைவர், பிரதேச சபை, யட்டியன்தொட்ட என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது சபையின் செயலாளரிடம் எழுத்துமூல உறுதியொன்றை பெற்றுக்கொண்டு அவரின் பொறுப்பில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். 2021.04.06 மு.ப.10.30 இற்கு கேள்வி ஆவணங்களில் மூலப்பிரதி திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு மதிப்பீட்டு செயற்பாட்டிற்காக மட்டும் சமுகமளிக்கலாம்.
04. சகல கேள்வியுடனும் ரூ.100000.00 பெறுமதியான இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள நிதி நிறுவனங்களிலிருந்து வழங்கப்படும் கேள்விப் பிணையை சமர்ப்பித்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் வெற்றிகரமான கேள்விதாரர் தமது கேள்வியை அகற்றி கொள்ள நேரின், இப் பிணையின் பெறுமதி யட்டின்தொட்ட பிரதேச சபைக்குச் சொந்தமாகும்.
05. தேர்ந்தெடுக்கப்படும் வெற்றிகரமான கேள்விதாரர் கேள்வி நிபந்தனைகளை குறிப்பிடப்படும் விதத்தில் சபையினால் தீர்மானிக்கப்படும் தினத்திற்கு முன் கேள்விப் பெறுமதியை சபைக்கு காசாக செலுத்த வேண்டியதுடன், அதன் பின்னர் சொத்து ஒப்படைப்பதற்கு முன் குத்தகை உடன்படிக்கையொன்றுக்கு வரல் வேண்டும்.
06. பெறுகை விடயங்களின் இறுதித் தீர்மானம் எடுத்தல் சபையின் பெறுகைக்குழுவிற்கு உரியது.
07. விபரங்கள் மற்றும் தள பரிசீலனைக்காக அலுவலக நேரங்களில் 036-2271675 அல்லது 036-2270237 மூலம் கௌரவ தலைவர் கே.டீ.வசந்த அல்லது சபை செயலாளர் துமிந்த சீ.விக்ரம சிங்கவை தொடர்பு கொள்ளுங்கள்.

**கே.பீ.வசந்த**
**தலைவர்,**
**யட்டியன்தொட்ட பிரதேச சபை.**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# விலைமனு கோரல் (IFB)

01. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கொள்முதல் குழு தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபை சார்பாக கீழ் காட்டப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்காக தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| இல. | ஒப்பந்த இலக்கம் | வேலைத்திட்டத்தின் பெயர் | பொறியியலாளர்களின் மதிப்பீட்டுத்தொகை ரு. மில்லியன் | CIDA தரம் | காப்புறுதிப் பிணைத்தொகை (ரு) | ஒப்பந்தக் காலம் (திகதி) |
|---|---|---|---|---|---|---|
| 01. | RDA/RBCD/CP/ GOSL/2021/012 | மீமுரே கும்புக்கொல பிரதான வீதியில் உடுதும்பர பெங்கிரிமாண ஓயா குறுக்காக பாலம் அமைத்தல் (உடுதும்பர பி.செ.பி) | 9.999 | C7 & C 6 Bridge Speciality | 100,000.00 | 270 |
| 02. | RDA/RBCD/SAB/ GOSL/2021/013 | அருக்கம்மண ஹத்தனபிட்டிய வீதியில் கொட்டியாகும்புர ஹீன்எல குறுக்காக பாலம் அமைத்தல் (கலிகமுவ பி.செ.பி) | 7.846 | C7 & C6 Bridge Speciality | 78,500.00 | 270 |
| 03. | RDA/RBCD/SAB/ GOSL/2021/014 | கேகாலை மொரொன்தொட்ட கொடிகமுவ மலவிட்ட வீதியில் ஹீணகந்துர ஆற்றுக்கு குறுக்காக பாலம் அமைத்தல் (கேகாலை பி.செ.பி) | 7.612 | C7& C6 Bridge Speciality | 76,500.00 | 270 |
| 04. | RDA/RBCD/NCP/ GOSL/2021/015 | இப்பலோகம நாரன்கல்ல கம 13 D, ஆற்றுக்கு குறுக்காக பாலம் அமைத்தல் (இப்பலோகம பி.செ.பி) | 7.371 | C7 & C6 Bridge Speciality | 74,000.00 | 270 |
| 05. | RDA/RBCD/EP/ GOSL/2021/016 | மருதமுனை பெரிய நீவாவணை களப்புக்கு குறுக்காக பாலம் அமைத்தல் (கல்முனை பி.செ.பி) | 12.975 | C6 & C 5 Bridge Speciality | 130,000.00 | 365 |
| 06. | RDA/RBCD/EP/ GOSL/2021/017 | செங்கப்பிடி கைகடி நிந்தவூர் 23 செங்கப்பிடி ஆற்றுக்கு குறுக்காக பாலம் அமைத்தல் (பொத்துவில் பி.செ.பி) | 33.700 | C5 & C4 Bridge Speciality | 337,000.00 | 540 |
| 07. | RDA/RBCD/EP/ GOSL/2021/018 | தோப்பூர் ஒழுக்குழி பள்ளிக்குடி ஆற்றுக்கு குறுக்காக பாலம் அமைத்தல் (மூதூர் பி.செ.பி) | 19.760 | C6 & C5 Bridge Speciality | 198,000.00 | 365 |
| 08. | RDA/RBCD/UP/ GOSL/2021/019 | பிபில அம்பாறை வீதியில் ஹமநவ ஓயா குறுக்காக பாலம் அமைத்தல் (பிபில் பி.செ.பி) | 13.310 | C6 & C5 Bridge Speciality | 133,500.00 | 365 |
| 09. | RDA/RBCD/SP/ GOSL/2021/020 | காலி காசிதெனிய பத்தேகம கீபிய பஹல எல குறுக்காக பாலம் அமைத்தல் (பத்தேகம பி.செ.பி) | 11.033 | C6 & C5 Bridge Speciality | 110,500.00 | 270 |
| 10. | RDA/RBCD/CP/ GOSL/2021/021 | கலஹா பெல்வூட் வீதியில் கலஹா குறுக்காக பாலம் அமைத்தல் (ஹேவாஹெட்ட பி.செ.பி) (0+400,1+400) (Hewahata Ds area) | 14.594 | C6 & C5 Bridge Speciality | 146,000.00 | 365 |
| 11. | RDA/RBCD/EP/ GOSL/2021/022 | அம்பாறை உஹன குமாரிகம கதுருகிரிபிட்டிய வீதிக்கு குறுக்காக பாலம் அமைத்தல் (உஹன பி.செ.பி) | 15.115 | C6 & C 5 Bridge Speciality | 151,500.00 | 365 |
| 12. | RDA/RBCD/EP/ GOSL/2021/023 | அம்பாறை உஹன கலபிட்டிகல வீதிக்கு குறுக்காக பாலம் அமைத்தல் (உஹன பி.செ.பி) | 11.975 | C6 & C5 Brige Speciality | 120,000.00 | 365 |

2. இவ்வேலைத்திட்டத்தில் கிராமீய பாலக்கட்டுமான பணிகள் உள்ளடங்கும்.

3. மனு கோரல் 5% பிராந்திய விருப்பத்துடனான தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய செயற்படுத்தப்படும்.

4. மனு ஆவணங்களை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் இணையதளத்தில் **(http://www.rda.gov.lk/source/publications.htm)** எவ்வித கட்டணமுமின்றி இலவசமாக பரிசீலனை செய்வதுடன் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும். மனு ஆவணங்களை மாற்றம் செய்வதற்காக வழங்கப்பட்டுள்ள பின்னிணைப்பு **(Addenda)** இணையதளத்தில் வெளியிடப்படுவதுடன் அவை மனு ஆணவத்துடனான ஒரு பகுதியாக கருதப்படும்.

5. 1987 இலக்கம் 03 ஒப்பந்த சட்டத்தின் கீழ் பொது ஒப்பந்தகள் தனித் தனியாக பதிவு செய்யப்பட்டிருத்தல் கட்டாயமாகும். **(http://www.eroc.drc.gov.lk)**

6. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் குறிப்பிடப்பட்ட பூரணப்படுத்தப்பட்ட மனுக்களின் இரண்டு பிரதிகளுடன் **2021.03.31**ஆம் திகதி **14.00** மணித்தியாலங்களுக்கு முன் கீழ் காட்டப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் முடிவடைந்த பின்னர் மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

7. மனு விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கு முன்னரான கூட்டம்

(அ). **2021.03.17** ஆம் திகதி **மு.ப. 10.30** மணிக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கண்டி பிரதான பொறியியலாளர் காரியாலயத்தில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (பிரிவிலக்கம் 01 மற்றும் 10 மட்டும்)

(ஆ). **2021.03.17** ஆம் திகதி **மு.ப. 10.30** மணிக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கேகாலை பிரதான பொறியியலாளர் காரியாலயத்தில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (பிரிவிலக்கம் 02 மற்றும் 03 மட்டும்)

(இ). **2021.03.17** ஆம் திகதி **மு.ப. 10.30** மணிக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அனுராதபுரம் பிரதான பொறியியலாளர் காரியாலயத்தில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (பிரிவிலக்கம் 04 மட்டும்)

(ஈ). **2021.03.17** ஆம் திகதி **மு.ப. 10.30** மணிக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அம்பாறை பிரதான பொறியியலாளர் காரியாலயத்தில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (பிரிவிலக்கம் 05, 06, 07, 11 மற்றும் 12 மட்டும்)

(உ). **2021.03.17** ஆம் திகதி **மு.ப. 10.30** மணிக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அம்பாறை பிரதான பொறியியலாளர் காரியாலயத்தில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (பிரிவிலக்கம் 08 மட்டும்)

(ஊ). **2021.03.17** ஆம் திகதி **மு.ப. 10.30** மணிக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அம்பாறை பிரதான பொறியியலாளர் காரியாலயத்தில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (பிரிவிலக்கம் 09 மட்டும்)

8. அனைத்து மனுக்களும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாலங்களுக்கான காப்புறுதிப்பிணைத் தொகையானது **2021.07.29** ஆம் திகதி வரை செல்லுபடியானதாக இணைக்கப்பட்டிருப்பதுடன் மனுக்கோரலுக்கான காப்புறுதிப்பிணைத் தொகை **2021.07.01** ஆம் திகதி வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

9. மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள கிராமிய பாலக்கட்டுமானப் பிரிவின் தொலைப்பேசி இலக்கங்கள் - **011-2623896, 011-2623897** மின்னஞ்சல் **: director3rbcd@gmail.com** மூலமாக பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்,**
**வழங்கல் குழு,**
**கிராமிய பாலக்கட்டுமான பிரிவு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**இல-50, புகையிரத நிலைய வீதி, அங்குலானை,**
**தொலைபேசி : 011-2623896**

it's what you want
www.adz.lk
Hotline: 0112 429 369 | Email: adzsuo@gmail.com
PLACE YOUR AD ON ADZ MAGAZINE & GET FREE AD ON WEBSITE

# அறிவித்தல்

## ஹோமியோபதி மருத்துவ சபை

# வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்தல்

சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் சமுதாய சுகாதார இராஜாங்க அமைச்சின் கண்காணிப்பின் கீழ் நிர்வகிக்கப்படும் ஹோமியோபதி வைத்திய சபையின் பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## மருத்துவ அதிகாரி பதவி

01. பதவி : ஹோமியோபதி மருத்துவ அதிகாரி

02. நியமனத்தின் தன்மை : நிரந்தரம். ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரிமை சகிதம்.

03. சம்பள அளவு : சேவை வகுதிக்கு இயைபான சங்கேத இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு MM 1-1 2016 : ரூபா (53175 – 10x1375 – 15x1910 – 95575.00)

04. தேவையான தகைமைகள் : இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகத்தில் ஐந்தரை ஆண்டுக்குக் குறையாத பட்டக் கற்கைநெறியொன்றைக் கற்றதன் பின் பெற்றுள்ள ஹோமியோபதி மருத்துவம் தொடர்பான பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகத்தில் நான்கு ஆண்டுக்குக் குறையாத முழுநேர ஹோமியோபதி மருத்துவம் தொடர்பான டிப்ளோமா கற்கை நெறியொன்றைக் கற்றிருத்தல் மற்றும் அதன் பின் 03 வருட கால தொழில்சார் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

ஆகக் குறைந்தது ஒரு வருடகால உள்ளகப் பயிற்சியைப் பெற்றிருத்தல்.

ஹோமியோபதி மருத்துவரொருவராக ஹோமியோபதி மருத்துவ சபையில் பதிவைப் பெற்றிருத்தல்

ஆகக் குறைந்தது ஒரு வருட காலம் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு வைத்தியசாலையொன்றில், நிறுவனமொன்றில் அல்லது தொழில்சார் சிகிச்சை (மருத்துவ சிகிச்சைப் பிரிவில்) அனுபவத்தைப் பெற்றிருத்தல். (சிகிச்சையளிக்கப்பட்ட நோயாளர்களின் பெயர் பட்டியல் மற்றும் அந்த நிறுவனத்தில் சேவையாற்றியமைக்காக இயைபுடைய நிறுவனத்தின் உத்தியோகபூர்வ முத்திரை சகிதம் நிறுவனத்தின் தலைவரிடமிருந்து அல்லது பிரத்தியேகமாக நடத்தப்பட்ட நிறுவனத்தின் பெயரை இயைபுடைய நிறுவனம் நடாத்திச் செல்லப்பட்ட பிரதேசத்தின் பிரதேச செயலாளரின் சான்று மூலம் உறுதி செய்தல் வேண்டும்).

05. வயதெல்லை : 25 வயதிற்குக் குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

06. ஏனையவை : சகல விண்ணப்பதாரர்களும்

i. இலங்கைப் பிரசையாகவிருத்தல் வேண்டும்.

ii. பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமையை செவ்வனே நிறைவேற்றுவதற்காகவும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

iii. சிறந்த நடத்தையுடைவராகவிருத்தல் வேண்டும்.

ஆட்சேர்க்கப்படும் விதம் : நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு திறமை வரிசைக் கிரமத்தின் பிரகாரம் ஆட்சேர்க்கப்படுவர்.

தகைமை பெறும் திகதி : விண்ணப்பதாரர் மேற்படி 4, 5 மற்றும் 6 எனும் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையான தகுதிகளை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியில் சகல விதத்திலும் பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே சேவைக்கு / பதவிக்கு நியமிப்பதற்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொள்ளப்படுவார்.

அபேட்சகர்களின் ஆளடையாளம் : விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் போது சகல விதத்திலும் முழுமையாகவும் மற்றும் சரியாகவும் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் 4 மற்றும் 5 பந்திகளில் காட்டப்பட்டுள்ள தகைமைகளை உறுதி செய்வதற்காக முறையாக சான்றுபடுத்திய கல்வி மற்றும் ஏனைய சான்றிதழ்களின் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

## முகாமைத்துவ உதவியாளர் பதவி

01. பதவி : முகாமைத்துவ உதவியாளர் - IIIஆம் வகுப்பு

02. நியமனத்தின் தன்மை : நிரந்தரம். ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரிமை சகிதம்.

03. சம்பள அளவு : சேவை வகுதிக்கு இயைபான சங்கேத இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு MA 1-1 2016: ரூபா 27,910 – 10x300 – 07x350 – 4x495 – 20x660 – 48,540/-

04. வெளிவாரி விண்ணப்பதாரிகள் :
கல்வி
(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) தரப் பரீட்சையில்
i. சிங்களம் / தமிழ்
ii. ஆங்கிலம்
iii. கணிதம் போன்ற பாடங்கள் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்) தரப் பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று (03) பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல்

ஏனைய தகைமைகள் : கணனி சொல்லாக்கம் தொடர்பான அடிப்படைத் தகைமை

05. உள்வாரி விண்ணப்பதாரிகள் :
(அ) ஆரம்ப தரத்தில் / தேர்ச்சியற்ற மற்றும் அரைத் தேர்ச்சி சேவை வகுதியில் பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள ஊழியர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.
(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) தரப் பரீட்சையில்
i. சிங்களம் / தமிழ்
ii. ஆங்கிலம்
iii. கணிதம் போன்ற பாடங்கள் உட்பட இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்பதுடன் இதில் மூன்று பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(கணனி சொல்லாக்கம் / தட்டச்சு தொடர்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் கற்கை நெறியொன்றைக் கற்றிருத்தல் அல்லது ஏனைய அதற்குச் சமமான நிலையில் தேர்ச்சி பெற்றிருத்தல் மேலதிகத் தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.)

(இ) சேவையில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு நியமனத்தில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
(ஈ) நிர்ணயிக்கப்பட்ட தினத்திற்கு முன் நிரந்தர நியமனத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருடங்கள் தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

06. வயதெல்லை : 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

07. ஏனையவை : சகல விண்ணப்பதாரர்களும்
i. இலங்கைப் பிரசையாகவிருத்தல் வேண்டும்.
ii. பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமையை செவ்வனே நிறைவேற்றுவதற்காகவும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
iii. சிறந்த நடத்தையுடைவராகவிருத்தல் வேண்டும்.

உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பப் படிவத்தில் தரப்பட்டுள்ள ஏதாவது தகவல் பொய்யானது அல்லது பிழையானது என ஆட்சேர்ப்பிற்கு முன் தெரிய வந்தால் உங்களது அபேட்சகர் இரத்துச் செய்யப்படும்.

அவ்வாறே பொய்யானது அல்லது பிழையானது என ஆட்சேர்ப்பிற்குப் பின் தெரியவந்தால் அதற்கு இயைபாக செயற்பாட்டின் கீழ் சேவையிலிருந்து விலக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நியமன அதிகாரியானவர் ஹோமியோபதி மருத்துவ சபை என்பதுடன் அதன் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

உங்களால் தயாரித்துக் கொள்ளப்பட்ட சகல விடயங்களையும் உள்ளடக்கிய விண்ணப்பப் படிவத்தை 2021 மார்ச் 25 அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில்

**பதிவாளர்,**
**ஹோமியோபதி மருத்துவ சபை,**
**94, ஷெல்டன் ஜயசிங்க மாவத்தை,**
**வெலிசர, ராகம**
எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**எம்.ஏ. பெரேரா,**
**பதிவாளர்,**
**ஹோமியோபதி மருத்துவ சபை.**

# அமானா வங்கியின் தொழிற்படு இலாபம் ரூ. 1 பில்லியனை தாண்டியது





அமானா வங்கி, தனது துரித வளர்ச்சிக்கு சான்று பகிரும் மைல்கல்லாக, வங்கித் தொழிற்பாடுகளில் 9 வருடத்தை மாத்திரம் நிறைவு செய்த நிலையில் 2020ம் நிதியாண்டுடில் மொத்த சொத்துகளில் ரூ. 100 பில்லியன் தாண்டியது. கொவிட்19 தொற்றுப் பரவலுடனான சவால் நிலைக்கு முகங்கொடுத்த போதிலும், 2020 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் உறுதியான மீட்சியை வங்கி பதிவு செய்திருந்ததுடன், நான்காம் காலாண்டில் 51% வரிக்கு முந்திய இலாபமாக ரூ. 372.1 மில்லியனை பதிவு செய்திருந்தது. 2019 நிதியாண்டின் நான்காம் காலாண்டில் இந்தப் பெறுமதி ரூ. 242.2 மில்லியனாக பதிவாகியிருந்தது. இக்காலப்பகுதியில் வரிக்குப் பிந்திய இலாபம் ரூ. 213.3 மில்லியன் ரூபாயாக பதிவாகியிருந்தது. 2020 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில், நான்காம் காலாண்டில் வங்கியின் வரிக்கு முந்திய மற்றும் வரிக்கு பிந்திய இலாபங்கள் முறையே 168% மற்றும் 167% வளர்ச்சியை பதிவு செய்திருந்தன. வங்கியின் நான்காம் காலாண்டு பெறுபேறுகள் உயர்வடைந்திருந்த நிலையில், 2020 ஆம் ஆண்டில், மொத்தமாக ரூ. 761.4 மில்லியன் ரூபாயை வரிக்கு முந்திய இலாபமாகவும், வரிக்கு பிந்திய இலாபமாக ரூ. 463.7 மில்லியன் ரூபாயையும் பதிவு செய்திருந்தது. 2019 ஆம் ஆண்டில் பதிவாகியிருந்த வரிக்கு பிந்திய இலாபம் ரூ. 460.9 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 2020 இல் வரிக்கு பிந்திய இலாபம் அதிகரித்திருந்தமை விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.


3.7% எனும் ஆரோக்கியமான நிதியீட்டு அளவுப் பெறுமதியைப் பேணியிருந்ததுடன், வங்கியின் நிகர நிதியீட்டு வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9% இனால் அதிகரித்து ரூ. 3.45 பில்லியனாக பதிவாகியிருந்தது. நான்காம் காலாண்டில் மாத்திரம் இந்தப் பெறுமதி ரூ. 1.13 பில்லியனாக பதிவாகியிருந்தது. 2019 நான்காம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் இது 53% வளர்ச்சியாகும்.

# மகரகம அபேக்ஷா வைத்தியசாலைக்கு செயற்கைச்சுவாச சாதனங்களை அன்பளிப்புச் செய்த எல்.பீ. ஃபினான்ஸ்









இலங்கையின் வங்கித் துறை சாராத மிகப் பெரிய நிதி நிறுவனங்களில் ஒன்றாக விளங்கும் எல்.பீ. ஃபினான்ஸ், கொவிட் தொற்றுநோய் பரவலைத் தடுக்கும் தேசிய முயற்சிக்குப் பங்களிப்புச் செய்ய தன்னை அர்ப்பணித்துள்ளது. சுமார் ஐந்து தசாப்தங்களாக மக்களுக்கு மகத்தான நிதிச் சேவைகளை வழங்கிவரும் அதே சமயத்தில், ஒரு சமூகப் பொறுப்பு வாய்ந்த நிறுவனப் பிரஜை என்ற முறையில் சமூக நலனுக்காகவும் எல்.பீ. ஃபினான்ஸ் சேவையாற்றி வருகின்றது. இதற்கு அமைவாகவே, கண்டியிலுள்ள தேசிய வைத்தியசாலைக்கு செயற்கைச் சுவாசச் சாதனம் அன்பளிப்புச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து மகரகமையிலுள்ள அபேக்ஷா வைத்தியசாலைக்கும் அவ்வாறான சாதனம் ஒன்று அண்மையில் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

சுவிற்சர்லாந்தில் உற்பத்தி செய்யப்படும் ஹமில்டன் C3 என்ற தரமுயர்ந்த அமெரிக்க வகையைச் சேர்ந்த செயற்கைச் சுவாசச் சாதனத்தை மகரகம அபேக்ஷா வைத்தியசாலையிடம் கையளிக்கும் வைபவம் 2021 பெப்ரவரி 24ஆம் திகதி நடைபெற்றது. இந்த நிகழ்வில் எல்.பீ. ஃபினான்ஸ் சார்பில் உதவிப் பொது முகாமையாளர்மனித வளங்கள் பிரசன்ன காலிங்க, சிரேஷ்ட தேசிய முகாமையாளர்கடன் மற்றும் கிளைச் செயற்பாடுகள் சானக அலெக்சாந்தர், சிரேஷ்ட அலுவலர்கள் ஆகியோரும் அபேக்ஷா வைத்தியசாலையின் சார்பில் அதன் பணிப்பாளர் டொக்டர் வசந்த திசாநாயக்க, சிரேஷ்ட வைத்திய நிபுணர் சாந்தனி சூரியாராச்சி, வைத்தியசாலை ஊழியர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர். COVID19 நோயாளிகளுக்கு மாத்திரமன்றி வேறு நோய்களுக்காகச் சிகிச்சை பெறுபவர்களுக்கும் உதவ சுகாதார அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கும் அதன் மூலம் சமூகத்திற்கான சிறந்த சேவையை உறுதிப்படுத்தவும் இந்த அன்பளிப்பு உதவும். எல்.பீ. .பினான்ஸ் பி.எல்.சி.யின் முகாமைத்துவப் பணிப்பாளர் சுமித் ஆதிஹெட்டி, அன்பளிப்பைக் கையேற்ற பின் கருத்து வெளியிடுகையில், "பற்றாக்குறையாகவுள்ள உபகரணங்களைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் கொவிட்19 மற்றும் ஏனைய நோய்களை எதிர்த்துப் போராடும் சுகாதாரத் துறையினருக்கு உதவி வழங்குவதையிட்டு எல்.பி. ஃபினான்ஸிலுள்ள நாம் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றோம் என்று தெரிவித்தார்.

## வாகனப் பொருத்துகை, உதிரிப்பாகங்கள் உற்பத்தி :

# நியம தொழிற்பாட்டு விதிமுறை அறிமுகம்



உலகப் புகழ்பெற்ற வர்த்தக நாமங்களை உள்நாட்டில் பொருத்துகைக்கும் உதிரிப்பாகங்கள் உற்பத்திக்கும் ஊக்குவிக்கும் அமைச்சர் விமல்வீரவன்சவின் தலைமையில் இயங்கும் தொழிற்துறை அமைச்சு, உள்நாட்டு வாகனப் பொருத்துகை மற்றும் உதிரிப்பாகங்கள் உற்பத்தி தொடர்பான நியம தொழிற்பாட்டு விதிமுறையை (SOP) விரைவில் அறிமுகம் செய்யத் திட்டமிட்டுள்ளது. உலகப் புகழ்பெற்ற வர்த்தக நாமங்களுக்கு உள்நாட்டில் வாகனப் பொருத்துகைகளை முன்னெடுப்பதை ஊக்குவிக்கும் வகையில் இந்த நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

இலங்கை வாகனங்கள் உதிரிப்பாகங்கள் உற்பத்தியாளர் சம்மேளனத்தின் தலைவர் திமந்த ஜயவர்தன கருத்துத் தெரிவிக்கையில், உலகின் உயர்தர நியமங்களைப் பின்பற்ற புதிய SOP தயாரிக்கப்பட்டுள்ளது. தொழிற்துறை அமைச்சின் கொள்கை வடிவமைப்புப் பிரிவினால் நிதி அமைச்சு, இலங்கை சுங்கம், மோட்டார் வாகனப்பதிவுத் திணைக்களம், இலங்கை மோட்டார் வாகனப் பொருத்துகை மற்றும் மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் உற்பத்தியாளர்கள் ஆகிய சகல தரப்பினருடனும் இணைந்து இந்த SOP தயாரிக்கப்பட்டுள்ளது. SOP இன் அறிமுகத்துடன், சகல வாகனப் பொருத்துகைகளும் SOPஐ பின்பற்றுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதுடன், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் வாகனங்களுக்கு பெறுமதி சேர்ப்பது எதிர்பார்க்கப்படுகின்றது என்றார்.

SOP இல் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், முதலீட்டுசபை, இலங்கை சுங்கம் மற்றும் தொழிற்துறை அமைச்சு மற்றும் உள்நாட்டு வாகனப் பொருத்துகைகள் போன்றவற்றுக்கு த்தில் பதிவு செய்வது தொடர்பான நியமங்களுக்கான வழிகாட்டல்கள் போன்றன SOPஇல் அடங்கியிருக்கும்.

உற்பத்தி செயன்முறை மற்றும் பொருத்துகை, வாகனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் மற்றும் மதிப்பீட்டு வசதிகள் போன்றன தொடர்பான அவசியமான ஒழுங்கு விதிமுறைகளைக் கொண்டுள்ளது. பொருத்தப்பட்ட மற்றும் உற்பத்திசெய்யப்பட்ட வாகனங்களை ஏற்றுமதி செய்வது தொடர்பான வழிகாட்டல்களையும் கொண்டுள்ளதுடன், வரிவிலக்குகள் வழங்கப்படுவது தொடர்பிலும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஜயவர்தன தொடர்ந்து குறிப்பிடுகையில், முதல் நிலையில் உள்நாட்டு சந்தையில் இந்தத்துறைக்கு விரிவாக்கமடைவதற்கு அவசியமான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்பதை SOP தெளிவாக குறிப்பிட்டுள்ளது.

# முதலாவது விஸ்தரிக்கப்பட்ட ஆராய்ச்சி வளாகத்தை அங்குரார்ப்பணம் செய்தது SLTC



இலங்கையின் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வியில் மறுக்க முடியாத முன்னோடியான ஸ்ரீலங்கா டெக்னோலோஜிக்கல் கம்பஸ் (SLTC) அதன் முழுமையான ஆராய்ச்சி வளாகத்தை பாதுக்க கம்பஸ் வாளகத்தில் அண்மையில் திறந்துவைத்தது. இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கலந்துகொண்டதுடன், சிறப்பு அதிதிகளாக வர்த்தக அமைச்சர் கலாநிதி. பந்துல குணவர்த்தன ஆகியோர் கலந்துகொண்டனர்.

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதியின் பிரதான ஆலோசகர் லலித் வீரதுங்க ஆகியோர் தவிர்க்க முடியாத காரணத்தால் இந்நிகழ்வில் கலந்துகொள்ளாதபோதும், தமது வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தனர்.

இந்நிகழ்வில் ஏனைய விருந்தினர்களாக மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் வேந்தரும், SLTC கவுன்சில் உறுப்பினருமான பேராசிரியர் கே.கே.வை.டபிள்யூ பெரேரா, இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் அநுராத விஜயகோன், கிராமிய வீதி மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ரஞ்சித் திசாநாயக்க, தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் திரு.ஓஷத சேனாநாயக, ஸ்ரீலங்கா டெலிகொம் பிஎல்சி தலைவர் ரொஷான் பெர்னாந்து, அணுசக்தி அதிகார சபையின் தலைவரும் SLTC கவுன்சில் உறுப்பினருமான பேராசிரியர் எஸ்.ஆர். டி.ரொச ஆகியோர் கலந்துகொண்டனர்.

பல்கலைக்கழகத்தின் படிகம் மற்றும் எதிர்காலத்தில் செயற்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ள அனைத்து மேம்பாடுகளையும் உள்ளடக்கிய SLTC இன் 2025 பெருந்திட்டக் கொள்கையை வெளியிடல் என்பன இந்த நிகழ்வில் ஒருங்கு நேரிட்டன. ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம், சிறந்த இறுதியாட்டு செயற்றிட்டம் மற்றும் சர்வதேச போட்டிகளில் சிறப்பை வெளிப்படுத்திய 10 மாணவர்களும், சிறந்த ஆய்வு விருது, வளர்ந்துவரும் இளம் ஆராய்சியாளர் மற்றும் SLTC இன் ஜனாதிபதி ஆராய்ச்சி விருது ஆகியவற்றை வென்ற 12 ஆசிரியர்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

# மருந்தாக்கல் உற்பத்தியில் 65 வருட பூர்த்தியைக் கொண்டாடும் ஸ்ரீலங்கா மருந்து உற்பத்தியாளர்கள் சங்கம் (SLPMA)



மருந்தாக்கல் உற்பத்தியில் 65 வருட பூர்த்தியைக் கொண்டாடும் ஸ்ரீலங்கா மருந்து உற்பத்தியாளர்கள் சங்கம் (SLPMA) அதேவேளை நாட்டின் மூன்றாவது மாபெரும் அந்நியச்செலாவணி வருமானம் ஈட்டும் துறையாக உள்நாட்டு மருந்துப் பொருட்கள் உற்பத்தித்துறை திகழும் என நம்பப்படுகின்றது.

2025இல் மொத்த உள்நாட்டுத் தேவையில் 50%ஐ பூர்த்தி செய்யவும், 2030இல் மொத்த வருடாந்த ஏற்றுமதி வருமானமாக 1 பில். அமெ. டொலர் எய்தவும் உறுதி

ஸ்ரீலங்கா மருந்து உற்பத்தியாளர்கள் சங்கம் (SLPMA) 65 வருட பூர்த்தியை கொண்டாடவுள்ளதாக சங்கத்தின் தலைவர் சஞ்ஜய ஜயரத்ன தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்உள்நாட்டு மருந்துப்பொருட்கள் உற்பத்தியாளர் எனும் வகையில், 65 வருடகாலமாக சேவையில் இருப்பதையிட்டு நாம் மிகவும் பெருமை கொள்கின்றோம். அத்தியாவசிய மருந்துப்பொருட்களின் கிடைப்பனவை உறுதிசெய்து, அந்நியச் செலாவணியை சேமிக்க நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம். இந்த செயற்பாட்டில் சுயதன்னிறைவு அடைய உள்நாட்டு மருந்துப்பொருட்கள் உற்பத்தித்துறை அத்தியாவசியமானதாக அமைந்துள்ளதுடன், உத்தரவாதமளிக்கப்பட்ட கொள்வனவுத் திட்டத்தை அறிமுகம் செய்தமைக்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு தமது நன்றியை தெரிவித்தார்.

அரசாங்கத்துக்கு உயர்தரமான மருந்துப் பொருட்களை சகாய விலையில் பெற்றுக்கொடுப்பதற்கு SLPMA உதவிகளை வழங்கும். மேலும், தனியார் உரிமையாண்மையின் கீழ் இயங்கும் உற்பத்தி வசதிகளில் 20 பில்லியன் ரூபாயை இதற்காக முதலீடு செய்வதினுளடாக இலங்கையின் பொருளாதாரத்துக்கு பெறுமதி சேர்ப்பதையும் உறுதிசெய்யும் என்றார்.

இந்த சங்கத்தின் அங்கத்துவ நிறுவனங்களில் தற்போது 3000 க்கும் அதிகமான நபர்கள் பணியாற்றுவதுடன், விநியோகத் தொடரைச் சேர்ந்த 20,000க்கும் அதிகமானவர்கள் மறைமுகமாக அனுகூலம் பெறுகின்றனர். கொள்ளளவு விரிவாக்கத்தில் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்துவதுடன், அதனுளடாக உள்நாட்டு தொழிற்துறையின் வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்கி, எதிர்பார்க்கப்படும் இலக்குகளை எய்தவும் திட்டமிட்டுள்ளது. அத்துடன், தேசத்தின் பொருளாதார மேம்பாட்டுக்கு பங்களிப்பு வழங்கவும் எதிர்பார்க்கின்றது.

# ஷுக்ரா முனவ்வரின் சாதனைக்கு செலான் வாழ்த்து தெரிவிப்பு




காலி, கடுகொடவைச் சேர்ந்த இளம் மாணவியான ஷுக்ரா முனவரை சந்தித்து, அவரின் சாதனைக்கு வாழ்த்துத் தெரிவிப்பதற்காக, அன்புடன் அரவணைக்கும் வங்கியான செலான் வங்கி அண்மையில் விஜயம் செய்திருந்தது. சிறந்த எதிர்காலத்தைக் கொண்ட 17 வயது நிரம்பிய மாணவியான இவர், செலான் வங்கியிடமிருந்து தமது எதிர்கால கல்விச் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு வழங்கப்பட்ட அன்பளிப்பையிட்டு மிகவும் வியப்படைந்தார்.

மில்லியன் கணக்கான இலங்கையர்களின் உள்ளங்களை ஷுக்ரா தமது அறிவு, ஊக்கமான செயற்பாடு மற்றும் சிறந்த தோற்றப்பாட்டினால் கவர்ந்திருந்தார். இலங்கையின் குறைந்த வசதிகளைக் கொண்ட சிறுவர்களுக்கு கல்வியைத் தொடர உதவிகளை வழங்குவது எனும் அவரின் இலக்குகள் மற்றும் அறிவுக்கான அவரின் ஈடுபாடு போன்றன தேசத்தின் பல சிறார்கள் மத்தியில் அவரை சிறந்த முன்மாதிரியானவராக திகழச் செய்துள்ளது.

ஷுக்ரா தமது சிந்தனைகளை செலான் அணியினருடன் பகிர்ந்து கொள்ளும் போது, "17 வயது நிரம்பிய, எதிர்பார்ப்புகளும் கனவுகளும் நிறைந்தவளாக, சேமிப்பின் முக்கியத்துவத்தைப் பற்றி நன்கு புரிந்து கொண்டுள்ளேன். ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக சேமிப்பதை பழக்கமாக்கி, அவர்கள் வளரும் போது, அதை அவர்களுக்கும் பழக்கப்படுத்த வேண்டும் என நான் நம்புகின்றேன். அவர்களின் பிள்ளைகளின் எதிர்காலத்தில் இந்தச் செயற்பாடு முக்கிய பங்காற்றும் என நம்புகின்றேன்." என்றார்.

இலங்கையிலுள்ள முன்னணி சிறுவர் சேமிப்புக் கணக்கான செலான் டிக்கிரி கணக்கு காணப்படுவதுடன், இளம் மாணவர்களுக்கு அவர்களின் எதிர்காலம் சிறப்பானதாக அமைவதற்கு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றது. அன்புடன் அரவணைக்கும் வங்கி, செலான் வங்கி, அதிநவீன தொழில்நுட்பம், புதுமையான தயாரிப்புகள் மற்றும் வகுப்பில் சிறந்த சேவைகள் மூலம் அதன் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு உன்னத வங்கி அனுபவத்தை வழங்குவதற்கான தொலைநோக்குடன் செயல்படுகிறது.

# தேசிய மெய்வல்லுநர் தகுதிகாண் போட்டிகள் ஏப்ரல் மாதம் கொழும்பில்

டோக்கியோ ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் இலங்கை மெய்வல்லுநர்கள் பங்குபற்றுவதை உறுதி செய்யும் நோக்கில் இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இவ்வருடத்தின் முதலாவது தேசிய மெய்வல்லுநர் தகுதிகாண் போட்டிகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை கொழும்பு சுகதாச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.



இதன்படி, கடந்த வருட இறுதியில் நடைபெற்ற தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரைப் போல, தற்போது சுப்பர் மற்றும் தேசிய மெய்வல்லுநர் குழாம்களில் இடம்பிடித்து பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்ற வீரர்களுக்கு மாத்திரம் குறித்த தகுதிகாண் போட்டியில் பங்குபற்றலாம் என மெய்வல்லுநர் சங்கம் அறிவித்துள்ளது.

இதில் திறமைகளை வெளிப்படுத்துகின்ற வீரர்களை எதிர்வரும் மே மாதம் முதலாம் மற்றும் இரண்டாம் திகதிகளில் போலந்தில் நடைபெறவுள்ள உலக மெய்வல்லுநர் அஞ்சலோட்ட சம்பியன்ஷிப்பில் பங்குபற்றச் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இருந்து 4 X 400 இருபாலாருக்குமான அஞ்சலோட்டம் மற்றும் 4 X 400 கலப்பு அஞ்சலோட்டம் என 3 அணிகளை உலக மெய்வல்லுநர் அஞ்சலோட்ட சம்பியன்ஷிப்பில் களமிறக்க திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் பாலித்த பெர்னாண்டோ தெரிவித்தார். கடந்த வாரம் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு பேசிய அவர்,

”2021ஐ பொறுத்தவரை நாங்கள் இரண்டு முக்கிய தொடர்களை இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றோம். இதில் 2021 ஒலிம்பிக் விளையாட்டு விழா மற்றும் 2022 ஆசிய விளையாட்டு விழாக்களில் எமது வீரர்களின் பங்குபற்றுதலை அதிகரிக்கச் செய்து பதக்கங்களை வெல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

இதன்படி, நாங்கள் சுப்பர் மெய்வல்லுநர் குழாத்தில் 21 வீரர்களையும், தேசிய மெய்வல்லுனர் குழாத்தில் 20 வீரர்களையும் உள்ளடக்கி பயிற்சிகளை வழங்கி வருகின்றோம்.

இவ்வருடம் நடைபெறவுள்ள ஒலிம்பிக்கில் ஆண்களுக்கான 100 மீற்றர், பெண்களுக்கான மரதன், ஆண்களுக்கான நீளம் பாய்தல், பெண்களுக்கான 3000 மீற்றர் தடைதாண்டல் மற்றும் ஆண்களுக்கான 4 X 400 அஞ்சலோட்டம் ஆகிய போட்டிகளில் எமது வீரர்களை பங்குபெறச் செய்வதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

இதற்கான முதலாவது தகுதிகாண் போட்டிகள் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ளதுடன், இறுதி தகுதிகாண் போட்டி மே மாதம் நடைபெறவுள்ளது. அத்துடன், தேசிய கனிஷ்ட மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளோம்” என அவர் குறிப்பிட்டார்.

இதுஇவ்வாறிருக்க, இந்த வருடம் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள 99ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரை டோக்கியோ ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் பங்குபற்றுகின்ற வாய்ப்பை பெறுவதற்கான இறுதி தகுதிகாண் போட்டியாக நடத்துவதற்கு இலங்கை மெய்வல்லுநர் சங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த வருடத்துக்கான தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரை எதிர்வரும் மே மாதம் 20ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடத்துவதற்கு மெய்வல்லுநர் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது திறந்த மட்டப் போட்டிகளாக நடைபெறவுள்ளதால், விரைவில் அதற்கான விண்ணப்பங்களை கோருவதற்கும் இலங்கை மெய்வல்லுனர் சங்கம் தீர்மானித்துள்ளது.



## ஐசிசியின் பெப்ரவரி மாத சிறந்த வீரராக அஷ்வின்

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அபாரமாக பந்து வீசியதுடன், ஒரு சதமும் விளாசி தொடர் நாயகன் விருதை வென்றார் அஷ்வின்.

இந்தியா இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் போட்டியில் அஷ்வின் அபாரமாக விளையாடினார். பெப்ரவரியில் நடைபெற்ற 3 போட்டியில் 24 விக்கெட் வீழ்த்தியதுடன், 176 ஓட்டங்களும் அடித்தார். அதில் சென்னையில் விளையாடிய முக்கியமான போட்டியில் சதம் விளாசினார். இதனால் பெப்ரவரி மாதத்திற்கான ஐசிசியின் சிறந்த வீரர் விருதை அஷ்வின் தட்டிச் சென்றுள்ளார்.

ஜனவரி மாதத்திற்கான விருதை ரிஷப் பண்ட் கைப்பற்றினார். இந்த விருதை ஐசிசி அறிமுகப்படுத்திய நிலையில் முதல் இரண்டு மாதங்களும் இந்திய வீரர்களே விருதுகளை கைப்பற்றியுள்ளனர்.

## சென்றலைட்ஸ் ப்ளூஸ் அணி சம்பியன்



**யாழ். விளையாட்டு நிருபர்**

பெட்ஸி பொழுதுபோக்கு ஏற்பாடு செய்த யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக் இடையிலான ஆண், பெண் இருபாலருக்குமான அணிக்கு மூன்று வீரர்கள் பங்குபற்றும் கூடைப்பந்தாட்த் தொடரில் ஆண்கள் பிரிவில் சென்ற லைட்ஸ் ப்ளூஸ் அணி கிண்ணம் வென்றது.

பழைய பூங்காவில் அமைத்துள்ள யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டதிடலில் 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சென்ற லைட்ஸ் ப்ளூஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸிஸி விளையாட்டுக் கழக சிவப்பு அணி மோதிக் கொண்டது. இதில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக ப்ளூஸ் அணி15:13 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம் பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸிஸி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் பமிலியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 13:09 புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.



காரைதீவு விளையாட்டுக்கழகம் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு வருடாவருடம் நடாத்தும் கழக உறுப்பினர்களுக்கிடையேயான மின்னொளியிலான கரப்பந்து சுற்றுப்போட்டி முதலாம் நாள் சுற்று போட்டிகள் நேற்று (10) இரவு மின்னொளியில் கழக அரங்கில் இடம்பெற்றன. இன்று நள்ளிரவு (11) இறுதிப்போட்டியும் பரிசளிப்புவிழாவும் இடம்பெறும். போட்டி இடம்பெறுவதைக்காணாம். *(படம்: காரைதீவு குறூப் நிருபர்)*

## விமானப்படை பெண்கள் சைக்கிள் ஓட்டப் போட்டி இலங்கை இராணுவ அணிக்கு வெற்றி





70வது ஆண்டு நிறைவுக்கு இணையாக விமானப்படையினால் ஏற்பாடு செய்யப்பட்ட விமானப்படை சைக்கிள் ஓட்டப் போட்டி 2021 கடந்த ஞாயிற்றுக்கிழமை (07) இடம்பெற்றது. இலங்கை இராணுவ மகளிர் சைக்கிள் ஓட்டுதல் அணியை பிரதிநிதித்துவப்படுத்திய உதேஷனி நிரஞ்சனி முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டார். ஏக்கல முதல் கட்டுநாயக்க 20 மைல்கல் வரையாக 78.3 கிலோமீற்றர் தூரத்தை போட்டி கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## பங்களாதேஷ் தொடரிலிருந்து கேன் வில்லியம்சன் நீக்கம்

பங்களாதேஷ் அணிக்கு எதிராக நடைபெறவுள்ள ஒருநாள் தொடரில், நியூசிலாந்து அணியின் தலைவர் கேன் வில்லியம்சன் விளையாடமாட்டார் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கேன் வில்லியம்சனின் இடது முழங்கையில் ஏற்பட்டுள்ள உபாதை காரணமாக, பங்களாதேஷ் தொடரிலிருந்து நீக்கப்பட்டுள்ளதுடன், உபாதை குணமடைவதற்காக அவருக்கு ஓய்வுக்காலம் வழங்கப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கேன் வில்லியம்சன் இந்த பருவகாலம் முழுவதும் முழங்கை உபாதையை எதிர்கொண்டுவந்த போதிலும், குறித்த உபாதை குணமடைவதில் எந்தவொரு முன்னேற்றமும் இல்லை. எனவே, அவருக்கு உபாதை குணமடைவதற்கான ஓய்வு வழங்கப்படவுள்ளது.

நியூசிலாந்து கிரிக்கெட் சபையின் மருத்துவ முகாமையாளர் டேல் செக்கல் குறிப்பிடுகையில், “கேன் வில்லியம்சன் இந்த பருவகாலம் முழுவதும் முழங்கை உபாதையால் அவதிப்பட்டுவந்தார். துரதிஷ்டவசமாக அவரது உபாதையில், எந்தவித முன்னேற்றங்களும் இல்லை.

எமது அனைத்துவகையான போட்டிகள் மற்றும் உயர்தர பயிற்சிகளில் வில்லியம்சன் ஈடுபட்டு வருகின்றார்.

இதன் காரணமாக அவருக்கு உபாதையிலிருந்து மீள்வதற்கான நேரம் கிடைக்கவில்லை. எனவே, இம்முறை அவருக்கு ஓய்வளித்து, உபாதையிலிருந்து மீளுவதற்கான நேரத்தை வழங்க திட்டமிட்டுள்ளோம்” என்றார்.

அணித்தலைவர் மற்றும் துடுப்பாட்ட வீரர் என்ற ரீதியில், கேன் வில்லியம்சனை இந்த தொடரிலிருந்து வெளியேற்றுவது மிகவும் கடினமான முடிவு. எனினும், இந்த ஆண்டு அதிகமான போட்டிகள் உள்ளதால் இது தவிர்க்கமுடியாத விடயமாக மாறியுள்ளது. அதுமாத்திரமின்றி நியூசிலாந்து அணி, இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. அதேநேரம், ஐசிசி டெஸ்ட் சம்பியன்ஷிப்பின் இறுதிப்போட்டி ஜூலை மாதம் நடைபெறவுள்ளது.

மேற்குறித்த தொடர்களுக்கு முன்னணி துடுப்பாட்ட வீரர் மற்றும் தலைவர் கேன் வில்லியம்சன் இல்லாமல் களமிறங்குவது எதிர்பார்க்கமுடியாத விடயம். எனவே, தற்போது அவருக்கு ஓய்வு வழங்குவது சரியான விடயம் என நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் கெரி ஸ்டீட் தெரிவித்துள்ளார்.

“கேன் வில்லியம்சன் தனது நாட்டுக்காக விளையாடுவதை விரும்புபவர். அப்படி இருக்கும் போது, அவரை அணியிலிருந்து வெளியேற்றுவது கடினமான விடயம். துடுப்பாட்ட வீரர் ஒருவரின் முழங்கை உபாதை என்பது மிகவும் முக்கியமான விடயம். இந்த உபாதை குணமடையாமல் நீடிக்கிறது என்றால், அதற்கான சரியான தீர்வை பெற்றுக்கொள்ள வேண்டும். ஐசிசி டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி மற்றும் இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடர் என்பன உள்ளன.

எனவே, வில்லியம்சன் அதற்கு தயாராக இருக்கவேண்டும் என நினைக்கிறேன்” என கெரி ஸ்டீட் குறிப்பிட்டார்.

நியூசிலாந்து மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் எதிர்வரும் 20ம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பத்தரமுல்ல வெட்டரன்ஸ் அணி சம்பியன்

**வட கொழும்பு தினகரன் நிருபர்**



சீன இலங்கை நட்புறவு கிண்ணத்திற்கான 14 x 14 உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகள் கொட்டாஞ்சேனை ரட்ணம் பார்க் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது. இப்போட்டியில் பத்தரமுல்ல வெட்டரன்ஸ் அணிக்கும் சுப்பர் ஸ்டார் அணிக்கும் மத்தியில் இடம் பெற்ற சம்பியன் அணி தெரிவிற்கான இறுதிசுற்றில் 06 – 05 என்ற கோல்கள் வித்தியாசத்தில் பத்தரமுல்ல வெட்டரன்ஸ் அணியினர் சம்பியன் கிண்ணத்தை தன்வசமாக்கிக் கொண்டனர்.

கொழும்பு மாவட்டத்தை சேர்ந்த பிரபல 12 அணிகள் இப்போட்டியில் மோதின. 12 அணிகள் மத்தியில் 16 போட்டிகள் இடம்பெற்றன. இப் போட்டிகள் அனைத்தும் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 5.30 மணி வரை நடைபெற்றன.

சீன-இலங்கை நட்புறவின் எட்டாவது வருடமாக இடம்பெற்ற இவ் உதைபந்தாட்ட போட்டி கொழும்பு 12 புதுக்கடை இளைஞர் கழகம் மற்றும் முஸ்லிம் உரிமைக்கான அமைப்பின் ஏற்பாட்டில் இடம் பெற்றன. இப் போட்டிகள் அனைத்தும் ஐ.எம்.முகம்மட் மிப்லால் தலைமையில் இடம்பெற்றமை விசேட அம்சமாகும்.

இலங்கை-சீன நட்புறவு கிண்ணத்திற்கான 14x14 உதைபந்தாட்ட சுற்றில் 12 அணியினர் மத்தியில் ஏ.பீ.சீ.டீ என நான்கு பிரிவுகளாக வகுக்கப்பட்டு ஒவ்வொரு அணியிலும் ஒன்பது வீரர்கள் உள்வாங்கப்பட்டனர். முப்பது நிமிடங்களை கொண்ட போட்டியில் 14x14 போட்டிக்கான நிமிட கால எல்லையாகவும் 02 நிமிடங்கள் இடைவேளைக்கான நிமிடங்களாகவும் கணிக்கப்பட்டிருந்தது.



போட்டிகள் அனைத்தும் சுகாதார வழிகாட்டல்களை கடுமையாக பின்பற்றி நடைபெற்றன. இவ் உதைபந்தாட்ட போட்டியை பார்வையிட காலை முதல் மாலை வரை பெருந்திரளான ரசிகர்கள் சூழ்ந்து இருந்தமை இப்போட்டியின் மற்றுமொரு விசேட அம்சமாகும்.

புத்தரமுல்ல வெட்டரன்ஸ் எதிர் சுப்பர்ஸ்டார் அணியினர் சம்பியன் அணி தெரிவிற்கான போட்டியில் களம் இறங்கினர். இரு அணியினரும் இறுதிவரை போராடி 01-01 என்ற கோல்கள் அடிப்படையில் சமநிலையில் போட்டியை நிறைவு செய்தனர்.இப்போட்டியின் சம்பியன் அணியினர் தெரிவை மேற்கொள்ள மத்தியஸ்தரால் பெனால்டி முறை அறிமுகம் செய்யப்பட்டது.

பெனால்ட்டி முறையின் கீழ் பத்தரமுல்ல வெட்டரன்ஸ் 05 கோல்களையும் சுப்பர்ஸ்டார் அணியினர் 04 கோல்களையும் போட்டனர். அதிரடியான அபாரமான ஒரு பெனால்டி கோலால் பத்தரமுல்ல வெட்டரன்ஸ் அணியினர் சீன இலங்கை நட்புறவு கிண்ணஉதைபந்தாட்ட சுற்றின் எட்டாவது வருடத்திற்கான சம்பியனாகத் தெரிவானது.

இச்சுற்றின் இரண்டாம் இடத்தை சுப்பர்ஸ்டார் அணியினர் கைப்பற்றினர். மூன்றாம் இட அணி தெரிவிற்கான போட்டியில் ஓல்ட் பீட்டர்சன் அணியினரும் மாளிகாவத்தை வெட்டரன்ஸ் அணியினரும் மோதினர். இச்சுற்றில் ஓல்ட் பீட்டர்சன் 01 கோலை போட்ட நிலையில் மூன்றாம் இடத்தை கைப்பற்றினர்.

மூன்றாம் அணியினர் தெரிவிற்கான போட்டியில் மாளிகாவத்தை வெட்டரன்ஸ் அணியினர் எவ்வித கோலையும் போடாத நிலையில் இச்சுற்றின் நான்காம் இடத்தை இவ்அணி சுவீகரித்தது.

இச்சுற்றுப் போட்டியில் சம்பியனான பத்தரமுல்ல வெட்டரன்ஸ் அணியினருக்கு சீன இலங்கை நட்புறவு கிண்ணத்துடன் 150,000 ரூபா பணப்பரிசும் இரண்டாம் இடத்திற்கு தெரிவான சுப்பர் ஸ்டார் அணியினருக்கு 75,000 ரூபா பணப்பரிசும் மூன்றாம் இடத்தை கைப்பற்றிய ஓல்ட் பீட்டர்சன் அணியினருக்கு 40,000 ரூபா பணப்பரிசும் நான்காம் இடத்திற்கு தெரிவான மாளிகாவத்தை வெட்டரன்ஸ் அணியினருக்கு 20,000 ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டன.

இச்சுற்றின் சிறந்த வீரராக சுபட பரட ஸ்டார் அணியின் கிஷாந்த, சிறந்த கோல் காப்பாளராக சுப்பர் ஸ்டார் அணியின் எஸ்.அந்தோனி, ஆட்ட நாயகனாக பத்தரமுல்ல வெட்டரன்ஸ் அணியின் பீ.எப். லப்ரோய் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுக்கு வெற்றிக்கிண்ணங்களுடன் பணப்பரிசும் வழங்கப்பட்டன.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மார்ச் மாதம் 11ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.